www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JuDE
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜூன்.08-14,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 208


## பாயும் புலிகள் மோதும் படைகள்



## காட்டுக்குள் பிரபா கண்கட்டி வித்தை

## திரைமறைவுத் துரோகங்கள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்





## சீ றி விழுந்த அம்மா நடிகை

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மூடப்படும் கதவுகள்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'பேச்சுவார்த்தைக் கதவுகள்
திறந்தே இருக்கின்றன'
என்றுள்ளார் ஜனாதிபதி.
குவைத் சென்றபோதுதான்
அவ்வாறு கூறியிருந்தார்.
கேட்டுக் கேட்டுப்
புளித்துப்போன வார்த்தைதான்!
காலம் காலமாக
இப்படித்தான் கூறிவருகிறார்கள்.
கதவு எங்கே திறந்திருக்கிறது
என்பதுதான் தெரியவேயில்லை.
சமர்க்கள கதவுகள் மட்டுமே
கட்டம் கட்டமாக
திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
போரில் ஈடுபடுவோருக்கு மட்டுமல்ல
போரில் அல்லல்படும் மக்களுக்கும்
சமர்க்கள கதவுகள்
திறக்கப்படுவது தெரிகிறது.
விளைவுகளும் புரிகிறது!
வன்னியில்
திறக்கப்பட்ட சமர்க்களம்
ஆயிரமாயிரம் மக்களை
அகதிகளாக்கியுள்ளது!
அத்தியாவசிய சேவைகளும்
வன்னி மக்களுக்கு
உடனடியாக மறுக்கப்பட்டன!
பொருளாதாரத் தடை
ஒருபுறமிருக்க
அனுமதிக்கப்பட்ட
அத்தியாவசிய சேவைகளைக்கூட
தடுத்து தாமதிக்கும் அளவுக்கு
கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.
ஆக. மொத்தத்தில்
ஏற்கனவே திறக்கப்பட்டிருந்த
கதவுகள்கூட
இழுத்து மூடப்பட்டுவருகின்றன!
அத்தியாவசிய சேவைகள்.
வவுனியா-கொழும்பு போக்குவரத்து
போன்றவற்றுக்கான கதவுகள்
இழுத்து மூடப்பட்டிருக்கின்றன.
'யுத்த வெற்றி'
என்பதே முதன்மையாகிவிட்டது.
மக்கள் அகதிகளாவது பற்றியோ,
வளங்கள் பாழாவது பற்றியோ
அவலங்கள் அதிகமாவது பற்றியோ
அரச தரப்பு
அக்கறைப்படுவதாக இல்லை!
'உணவு அனுப்ப உத்தரவு'
என்ற செய்திகள்
வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள்தான்!
அனுப்பப்படும்
உணவு-மருந்து வகைகள்
பற்றாக்குறையை ஈடுசெய்யுமளவுக்கு
போதுமானவையாக இல்லை!
'ஏட்டுச் சுரைக்காய்
கறிக்குதவாது' என்பார்கள்.
ஆனால்- தமிழ்க்கட்சிகளுக்கு உதவும்!
'உணவு அனுப்பிவையுங்கள்'
என்று இவர்கள் கேட்பார்கள்.
'உணவுதானே அதற்கென்ன
அனுப்பினால் போச்சு'
என்று பதில் சொல்லப்படும்!
காரியம் நடக்கிறதோ
இல்லையோ-
'கேட்டோம்-கிடைத்தது'
என்று அறிக்கை விடுப்பர்.
தங்கள் விளம்பரங்களுக்காக
வெறும் வாக்குறுதிகளையெல்லாம்
பெரும் காரியங்களாக
பிரசாரம் செய்கின்றன
தமிழ்க் கட்சிகள்!
புதிது புதிதாக
இழுத்து மூடப்படும் கதவுகள்
வெளியுலகின் கண்களுக்கு
தெரியாமல் இருப்பதற்கு
தமிழ்க் கட்சிகளும்
ஒரு முக்கிய காரணம்!
உண்மை என்னவெனில்
தம்மை ஆதரிக்கும்
தமிழ்க் கட்சிகளின்
கோரிக்கைகளைக் கூட
அரசால் நிறைவேற்ற முடியவில்லை!
கிடைக்காதவற்றைக்கூட
கிடைத்ததுபோல பிரசாரம் செய்யும்
அறிக்கை அரசியல்வாதிகளையே
திருப்தி செய்ய முடியாதபோது
ஆயுதப் போராட்ட அமைப்பை
அழைத்துப் பேசி
திருப்தியான தீர்வை வழங்கமுடியுமா?
அப்படி வழங்க முடிந்தால்
சமர்க்களக் கதவை
திறப்பதற்கு முன்னுரிமை வழங்கும்
அவசியம் அரசுக்கு
நிச்சயம் ஏற்பட்டிருக்காது!
பேச்சுவார்த்தைக் கதவு
திறக்கப்படவேண்டுமானால்
முதலில் திறக்கப்படவேண்டியது
மனக்கதவுகள்தான்!
திறந்த மனதோடு பேச நினைத்தால்
சிறந்த தீர்வை எட்டுதல் சுலபம்.
ஆனால்-அதுதான்
நடக்கிற காரியமாகத் தெரியவில்லை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
-ஆசிரியர்

# ஆன்மீகம்

## பரிந்து பேசுகிறார்

தேவ பிள்ளையே, நீ இன்றைக்கு ஜீவனுள்ளோர் தேசத்தில் இருப்பதன் காரணம் கிறிஸ்து உனக்காகப் பரிந்து பேசுவதனால்தான். யோர்தானைப் போல பெருவெள்ளங்கள் உன் வாழ்க்கையில் மோதியடித்த போதெல்லாம் கிறிஸ்து உனக்காகப் பரிந்து பேசினதினால்தான் நீ இன்றைக்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறாய். நிந்தையும், கலக்கங்களும், சோதனைகளும் உன்னைச் சூழ்ந்து கொள்ளும்போது கிறிஸ்துவல்லவா உனக்காக வழக்காடினார்? கிறிஸ்துவல்லவா உனக்காக யுத்தம் செய்தார்?

இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறதினால்தான் நம்மேல் நியாயத்தீர்ப்பாகிய கோடரி விழவில்லை. கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறதினால் தானே நாம் வெட்டப்பட்டு அக்கினியினிலே போடப்படவில்லை.



பரிந்து பேசுகிற அவர் உன்னைப் பார்த்து, "எப்பிராயீமே, நான் எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது: என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" (ஓசியா 11:8) என்று பரிதவிக்கிறார். தேவ பிள்ளையே, உயிர்த்தெழுந்த உன்னுடைய மீட்பர் உனக்காக கண்ணீரோடும் வேதனையோடும் கூட பரிந்து பேசுகிறார். என்பதை மறந்து போகாதே!

தி.பெஞ்சமின் தேவபாலன்,
மட்டக்களப்பு.

## வீரமும், கோழைத்தனமும் பற்றி ஹதீஸ்கள்

1. "மனிதரின் வீரம்" என்பது மற்ற எல்லா நற்குணங்களையும் சேர்த்து நிற்கும் சொல்லின் தொடராகும்.

2. வியாதியால் படுக்கையில் கிடந்து ஒரு தடவை இறப்பதைவிட, போர் முனையில் வாளால் வெட்டப்பட்டு ஆயிரம் தடவை இறக்க நான் தயார், என்று ஆண்டவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நியாயத்திற்காகப் போர் செய்து உயிர் துறப்பதே சிறந்த மரணம்.

3. வீரம் புகழுக்குரியது, கோழைத்தனம் கேவலத்திற்குரியது.

4. பகுத்துணரும் தன்மை உன்னிடம் இருந்தால் நேர்மையும், வீரமும் ஒன்றே என்பதையும், கோழைத்தனமும், திருட்டுத்தனமும் ஒன்றே என்பதையும் அறிந்து கொள்வாய்.

5. பயந்து போர்க்களத்திலிருந்து தலைதெறிக்க ஓடுவது அவமானம். அவ்வாறு ஓடுவது நரகத்துக்குள் பிரவேசிக்க அனுமதிச்சீட்டு வாங்குவது போலாகும்.

6. கோழைக்கு வாழ்க்கையில் இன்பமே கிடையாது.

செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-3.

## கவிதைப் போட்டி இல.205

### பரிசுக்குரிய கவிதை



#### காலம் மாறுமா?

இந்த மலர்கள் சிரிப்பதுபோல்
இங்கே வாழும் மக்கள் எல்லாம்
சிந்தைதனிலே மகிழ்வுடனே
சிரிக்கும் காலம் வந்திடுமா?
நொந்த உள்ளம் உயிர்பெற்று
நோக்காடெல்லாம் கனவாக
இந்த நாட்டில் அமைதி வந்து
எங்கள் துயரை நீக்கிடுமா?
தாரணி கோவிந்தசாமி- தேற்றாத்தீவு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**வாடாதே மலரே!**

தன்னந் தனிப்பறவையாய்
நானிங்கு வாடி நின்றேன்!
தண்ணீரில் உனைப் பறித்து
கரமிங்கு பற்றி நின்றேன்!
நான் பறித்த மலரிங்கே
வாடிப் போகுமா?
நான் தேடும் வாழ்விங்கே
மலர்ந்து நிற்குமா?
தெ.ரஞ்ஜனா- இறம்பைக்குளம்,
வவுனியா.

**இடைநடுவே...**

பிஞ்சாகிக் காயாகி
கனியாகு முன்னே
பிய்த்தெடுத்த பூவாயிடுமோ...
பூக்கத்துடிக்குமிந்த
பூவரும்பின் எதிர்காலம்..?
அலஸ் மரியதாஸ்-
வஞ்சியன்குளம்,
நானாட்டான்.

**-எச்சரிக்கை-**

இதழைக் கொஞ்சம்
இழுத்து மூடு!
வருபவை எல்லாம்
வண்டுகளும் அல்ல
குண்டுகளும் உண்டு!
"நிலாப்பிரியன்" ஜயந்தன்-
மட்/துறைநீலாவணை-08.

**வருக!**

பூக்களைப் போலே மலர்ச்சி
பூமியில் நாமும் காணவே
தேக்க மினறி ஒரு காலம்
வருக வருக வருகவே!
மல்லிகா பத்மநாதன்-
பசறையூர்.

**மலர்நிலையோ?**

குவளைமலர் கொய் தெடுத்தேன்
கோயிலுக்குப் போகவென்று
கோயிலிலும் செல் விழுந்து
சிதைந்ததுவாம்- அதுவுமின்று
செய்வதொன்றும் தெரியவில்லை
சிறுவன் என் நிலையும் இனிமண்ணில்
பறிபட்ட மலர் நிலையோ?
க.தர்ஷிக்கா-கல்லடி, மட்டக்களப்பு.

**நிம்மதி தேடி....**

வெண்தாமரை இயக்க மென்றீர்!
சமாதானப் புறா என்றீர்!
வெண்தாமரை ஏந்திய
பின்புமா சூண்டுமாரி?
நானறியேன் வாழ வழி?
இரா.லோகர்- கொழும்பு-02.

**பார்த்தோம்**

ஆரம்பத்தில்
வெண்தாமரைதான்
துப்பாக்கியோ
வெடிகுண்டோ
பின்னால் வரும்.
சுபா வரன்- கண்டி.

## கவிதைப் போட்டி இல.208



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 14.06.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.208
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



முத்தான முரசே!

முத்தமிழன் எழுதிய அவசர மடல் பார்த்தேன். பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் அரசியல் கட்சி அனைத்திற்கும் அக்கடிதம் ஒரு சாட்டை அடிதான். தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அந்த ஆண்டவனை ஏமாற்றவே முடியாது.

முத்தமிழனைப் போல் பல பேர் உருவாக வேண்டும்! எனது வாழ்த்துக்கள்.

சதீஸ், கருவேப்பங்கேணி.

என் அன்பு முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர்! அதிலும் 'எக்ஸ்ரே ரிப்போட்' தூள் கிளப்புகின்றது. வெகுநாளாக உன்னைப் பாராட்ட வேண்டுமென என்மனதில் ஆசையாக இருந்தது. அதை இன்று வெளிப்படுத்துகின்றேன்.

செல்வி நாராயணன் கவிதா, கல்லாறு,
நாவலப்பிட்டி.

பிரிய முரசே!

சுஜாதா அவர்களின் காயத்ரி இவ்வளவு விரைவில் முற்றுப்பெறுமென்று நினைக்கவில்லை. வித்தியாச நடையில் வந்து எம்மை சொக்க வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

'கனவு மெய்ப்பட வேண்டும்' பிரபஞ்சன் அவர்களின் எழுத்தோட்டம் வியக்க வைக்கின்றது.

தேன் கிண்ணம் பகுதியில் சோ.சிறிதரன் அவர்களின் 'கல்வி வியாபாரம்' என்ற கவிதை அருமை- தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சாட்டை அடி.

அத்தோடு காயத்ரி நிறைவு பெற- சஸ்பென்ஸ் மன்னன் ராஜேஸ்குமாரின் புதிய தொடர் நவீனத்தை தந்து தொடர்ந்து உனக்கு நிகர் நீயே என்று சொல்லிவிட்டாய்- வாழ்த்துக்கள்! வாழ்துக்கள்!!

ஒலுவில் கே.றமீஸ்டீன், மருதானை,
கொழும்பு-10.

நவீன எழுத்துலக வேந்தன் 'சுஜாதா'வின் 'காயத்ரி' தொடர் கடந்த பத்து வாரங்களாக எங்களை பரபரப்புக்குள்ளாக்கி படாத பாடுபடுத்தி விட்டது. நல்ல விறுவிறுப்பான தொடர்கதைகளை தெரிந்து பிரசுரம் செய்வதிலும் நீர் மகா கில்லாடி தானய்யா!

இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

### உதட்டு உச்சரிப்பு

போர் நிறுத்தம் என்று பேசிக்கொண்டே போருக்கு கவசமும், வாளும், வேலும் கொடுத்து அனுப்புவதும் தமிழ்க் கட்சிகள்தான். அதிலும் பெருமதிப்புக்குரிய முன்னாள் தலைவர்கள் தரித்துள்ள வேடங்கள் எத்தனை எத்தனை! சில பத்திரிகையாளர்களின் உதவியுடன் தங்கள் வாய்வீச்சுக்களை வியாபாரம் செய்து வருகின்றனர். 'முத்தமிழன் மடல்' முற்றும் சரி.

பா.ஜீவராசா, மட்டக்களப்பு.

### காலம் மாறிவிட்டது

கூட்டணித்தலைவருக்கு அவசரமடலும், காதிலை பூ கந்தசாமியாரின் விளாசலும் அபாரம். காலம் மாறிப்போய்விட்டது. 1977க்கு முன்னர் செய்த செப்படி வித்தைகள் இன்றைய 1997ல் ஒத்துவராது. 'முரசு' உரிய நேரத்தில் செய்யும் அரசியல் அம்பலப்படுத்தல் காலத்துக்கு ஏற்ற பணி.

என்.புஸ்பநாதன், அம்பாறை.

### பட்டு வேட்டியும் கட்டிய கோவணமும்

அரசியல் தீர்வின் உயிராகவும், இரத்த ஓட்டமாகவும் விளங்கும் வடக்கு-கிழக்கு இணைப்பு, பாரம்பரிய பிரதேச பாதுகாப்பு என்பவற்றில் சற்றும் கவனம் இல்லாமல், சத்தற்ற விடயங்களில் பேச்சு நடத்துகின்றன தமிழ்க் கட்சிகள். இந்த நேரத்தில் வைரமுத்துவின் கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

"பட்டுவேட்டிபற்றிய
கனவுகளில் இருந்தபோது
கட்டியிருந்த கோவணமும்
களவாடப்பட்டது"

தமிழ்க் கட்சிகளுக்கு சொரணை வருமா? வராதா? என்பதிருக்கட்டும். இவர்கள் நம் மக்கள் மானத்தையும் அடைவு வைத்துவிட்டல்லவா வரப்போகிறார்கள்? அரசியல் தீர்வில் முதலில் பேசி முடிக்க வேண்டியது அடிப்படை விடயங்களே என்ற முரசின் நிலைப்பாடு புத்திசாலித்தனமானது. உகந்ததும் அதுதான்.

ஏ.அகஸ்தியர், மன்னார்.

இளைய தளபதி விஜய் சிறு மொட்டாக இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தை தேடிப்பிடித்து தந்தீர். அருமை. அருமை. அந்தநாள் ஞாபகம். 'யார் இவர்?' என்று நம்மையும் சிந்திக்க வைப்பதாக மாறிவிட்டதே.

சி.ஜுனைட்,காத்தான்குடி.

### சபாஷ் சுஜாதா

'காயத்ரி' தொடர் அருமையான ஜொள் கலந்த தொடர். கதையை சுஜாதா நகர்த்திய பாணி சபாஷ். காயத்ரியை மீட்டெடுத்த கணேஷ்-வசந்த் இருவருக்கும் பாராட்டுக்கள்.

செல்விகள் எஸ் உமா. எஸ்.தீபா, கொழும்பு-10.

விரைவாக 'காயத்ரி'யை முடித்துவிட்டாரே என்று கவலையாக இருக்கிறது. காயத்ரி மூலமே அந்தக் கயவர்களைத் தண்டிக்காமல் விட்டது தப்பு. சிறந்த தொடர் தந்த முரசுக்கு நன்றி.

என்.ஆப்தீன், சம்மாந்துறை.

முரசே! சுஜாதாவின் தொடர்களில் குளிர்ச்சியான தொடராக வெளியிட்டு எம்மை குளிர்வித்து விட்டாய். வாராவாரம் விறுவிறுப்புத்தான். பூலானுடன் ஒப்பிட்டால் 'காயத்ரி' கோழையாகிவிட்டாள். என்ன செய்வது 'பூலான்' உண்மைப் பாத்திரம் அல்லவா?

திருமதி மாலா செல்வராசா, கொழும்பு-06.

'காயத்ரி' போல புதிய தொடரும் கலக்கல் விழா நடத்தும் என்பது நிச்சயம். ஏனெனில் தருவது முரசல்லவா? சுஜாதாவைத் தொடர்ந்து ராஜேஸ்குமார். வித்தியாசமான ரசனைக்கு விருந்துதான்.

பி.பிலோமினா, நீர்கொழும்பு.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* பாத்திமா ஜெஸ்லியா, கல்முனை-04.
* என்.எல்.முஸம்மில், குவைத்.
* எ.நிசாந்தன், பெரிய நீலாவணை-01.
* எம்.எஸ்.தேவா, ஜெர்மனி.
* பி.சந்தனராஜன், வத்தளை.
* ஏ. றினோஸியா, திஹாரிய.
* நஜிமுதீன் முபாஸ், புதிய காத்தான்குடி.
* எம்.லோகநாதன், வாழைச்சேனை.
* திருமதி சீத்தா இராமையா, சாமிமலை
* எஸ்.ஏ.செபஸ்டியன், எட்டியாந்தோட்டை.
* த.தியாகராஜன், ஜப்பான்.
* சித்தீக், குவைத்.
* செல்வி பர்ஷா தாயுடீன், குவைத்.
* ச.ஈசன், சிலாபம்.
* ஏ.பாலா, கலஹா.
* சுதாகரன், வவுனியா.
* அ.சியோதயன், வவுனியா.
* எஸ்.சசிகாந்தன், மூதூர்-02.
* கிருஷ்ணா-மங்கை, கல்கிசை.
* எஸ்.எம்.நவ்பர், பதுளை.
* எம்.எம்.கமால், கொழும்பு-02.
* ஏ.செபஸ்தியன், உக்குவளை.
* க.ஈஸ்வரராஜ், கொழும்பு-11.
* அ.பரமேஸ்வரன், நவிண்டில்
* என்.சுதா, பொத்துவில்-03.
* எஸ்.கண்ணன், உடப்பு.
* எம்.லாபீர், முள்ளிப்பொத்தானை.
* ஆ.ரஞ்சன், அவுஸ்திரேலியா.
* பீ.சர்மா, கண்டி.





படிப்பகம்

www.padippakam.com

# பாரிஸ் மாநாட்டுக்கு முன் பாரிய தாக்குதல்!

## புலிகள் திட்டமிடலாம் என்று சந்தேகம்!

## முற்றுகையை உடைக்க காத்திருக்கும் படையணி

**வன்னியில் ஓமந்தையில் இருந்தும், நெடுங்கேணியில் இருந்தும் படையினர் முன்னேறும் முஸ்தீபுகளைத் தடுக்க புலிகள் பலத்த தயாரிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.**

(நமது நிருபர்)

பிரான்ஸ் தலைநகரான பாரிசில் இலங்கைக்கு கடன் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் விரைவில் நடைபெற உள்ளதால் புலிகளின் தாக்குதல்களும் வடக்கு-கிழக்கில் பரவலாக அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

பாரிஸ் மாநாட்டுக்கு முன்னர் பாரிய தாக்குதல் முஸ்தீபுகளில் புலிகள் ஈடுபடலாம் என்றும் நம்பப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அணிகள் பரவலான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் விசேஷ தளபதி கருணாவை பிரபாகரன் வன்னிக்கு அழைத்திருக்கிறார்.

வவுணதீவு முகாம் தாக்குதல் பாரியதாக இருந்தபோதும் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. குறிப்பாக ஆயுதக் கிடங்கு கைப்பற்றப்படவில்லை. இதனையடுத்தே கருணாவை பிரபாகரன் வன்னிக்கு அழைத்ததாகத் தெரிகிறது.

வன்னியில் புலிகள் இயக்கத்தின் எதிர்ப்பு யுத்த நடவடிக்கைகளில் புலிகளின் துணைத்தளபதி பால்ராஜுடன் இணைந்து கருணாவும் செயற்பட்டு வருகிறார்.

இதேவேளை புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான சொர்ணம் தலைமையிலான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு திருமலையில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது.

படையினர் ஒருவேளை முல்லைத்தீவை முற்றுகையிடும் கட்டத்தை நெருங்கினால் அதனை வெளியே இருந்து உடைக்கத் தயாரான நிலையில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு திருமலையிலேயே நிலை கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கிழக்கில் பாரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் அவற்றிலும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு பங்கு கொள்ளக்கூடும்.

விசேஷ பயிற்சி மற்றும் சண்டைகளில் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து பிரபாகரனின் நேரடிப் பார்வையில் உருவாக்கப்பட்டதே சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவாகும். திருமலை மாவட்டத்தில் வெற்றிகரமான பல தாக்குதல்கள் அப்படைப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

### 'சத்ஜய' உடை

ஹபரணைக்கும் திருமலைக்கும் இடையேயுள்ள காடுகள் ஊடாக புலிகளின் கிழக்கு அணிகள் வன்னிக்குக் செல்லாமல் தடுப்பதில் படையினர் கவனம் செலுத்துகின்றனர். சமீபத்தில் பாலம்வெட்டாறு பகுதியில் புலிகளின் அணியொன்றும் படையினரும் மோதிக்கொண்டனர். புலிகள் தரப்பில் மூவர் பலியாகினர். பலியான புலிகள் அணிந்திருந்த ரீசேட்டில் 'சத்ஜய' என்ற வாசகங்கள் காணப்பட்டன.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி படையினர் 'சத்ஜய' நடவடிக்கையில் ஈடுபட்ட போது பலியான படையினரிடமிருந்து புலிகள் சீருடைகள், ரீசேட்டுக்கள் என்பவற்றையும் கைப்பற்றி சென்றுவிட்டனர். 'சத்ஜய' நடவடிக்கையில் ஈடுபட்ட படையினருக்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்டதே 'சத்ஜய' ரீசேட்டுக்களாகும்.

உறுப்பினர் தொகை அதிகமாக இருப்பதாலும், மற்றும் முன்புபோல தமது தனித்துவமான சீருடைகளைத் தயாரிக்கும் சூழல் இல்லாததாலும் புலிகள் இயக்கத்தினர் பலர் சாதாரண உடைகளிலேயே தற்போது களத்திலும் போரிடுகின்றனர். அதனால் பலியாகும் படையினரின் சிருடைகளும் கைப்பற்றப்படுவதாகக் கூறப்படுகிறது.

### எச்சரிக்கை

வன்னியில் படை நடவடிக்கை தீவிரமாகும்போது திருமலையில் உள்ள சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு வன்னிக்குத் திரும்பும் என்று படையினர் எதிர்பார்த்தனர். ஆயினும் அவ்வாறு நடக்கவில்லை. எனவே திட்டமிட்ட நோக்கம் ஒன்றுடன்தான் வன்னிக்கு வெளியே தனது பிரதான படைப் பிரிவை பிரபாகரன் அனுப்பி வைத்திருக்கிறார் என்று கருதப்படுகிறது.

வன்னி படை நடவடிக்கை பற்றியும் தமது எதிர் நடவடிக்கை பற்றியும் தெரிவித்துள்ள புலிகள் இயக்கத்தினர், "படையினர் பாரிய விலை கொடுக்கும் போர்க்களமாக வன்னியை மாற்றிக் காட்டுவோம்!" என்று தெரிவித்துள்ளனர். தமது பதிலடி நடவடிக்கைகளால் படையினர் மத்தியில் உளவியல் சோர்வுகள் ஏற்பட்டுள்ளன என்றும், அதனால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் விஜயம் செய்து படையினரை உற்சாகமூட்டும் தேவை ஏற்பட்டது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

"படையினர் மிக உற்சாகமாக உள்ளனர். போரிடும் மனோநிலையில் இருக்கின்றனர்" என்று படைவட்டாரங்கள் கூறியுள்ளன.

இரவு நேரங்களில்தான் வன்னிக்களம் அச்சமூட்டுகிறது. அடர் காடுகள் சார்ந்த களம் என்பதால் இரவு நேரத் தாக்குதல்களும், பதுங்குதல்களும் புலிகளுக்கு சாதகமாக இருக்கின்றன.

தற்போதுள்ள நிலைகளில் இருந்து படையினர் முன்னேறி புளியங்குளம் வரை சென்றால் புலிகளின் மோட்டார் தாக்குதல்களுக்கு மேலும் சாதகமான நிலை உருவாகும்.

## யுத்தத்தை நிறுத்த உதவுக! கிளின்ரனுக்கு கோரிக்கை!

"இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அமெரிக்க அதிபர் கிளின்ரன் முயலவேண்டும்!" இவ்வாறு அமெரிக்கப் பத்திரிகையான 'பொஸ்ரன் குளோப்' ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

"பொஸ்னியா, செச்சினியா, ருவாண்டா போன்ற நாடுகளில் நடைபெற்றது போன்று இனரீதியான யுத்தமே இலங்கையிலும் நடக்கிறது.

பொதுமக்கள் கொல்லப்படுதல், பாலியல் வல்லுறவுகள், இடம்பெயர்வுகள் என்பன தொடர்பாக இராஜதந்திர மொழியில் கவலை தெரிவிப்பதைவிட இன்னும் கூடுதலாக அமெரிக்கா செய்ய வேண்டியுள்ளது.

பர்மாவிலும், ஈரானிலும், ஈராக்கிலும், மனித உரிமைகள் மீறப்படுவதாக அந்நாடுகள்மீது அமெரிக்கா தடைவிதிக்க முடியுமானால், இலங்கைப் படைகளுக்கும் வரையறுக்கப்பட்ட உதவிகள் அளிக்கப்படுவதை அமெரிக்கா ஏன் நிறுத்தக் கூடாது?

இலங்கை இன விவகாரத்தில் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும். அவ்வாறான பேச்சின் இலக்கு ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு கணிசமான சுயாட்சியை அனுமதிக்கும் சமஷ்டி அரசமைப்பை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்." இவ்வாறு 'பொஸ்ரன் குளோப்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

## திருடர்களுக்கு அல்வா கொடுத்தவர்!

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இப்போது திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. எனினும் திருடர்கள் பிடிக்கப்படுவதும் இல்லை; திருட்டுப்போன பொருட்கள் மீட்கப்படுவதும் குறைவு. பொலிசாரும் கவனம் செலுத்துவதில்லை.

ஆனால் அரியாலைப் பகுதியில் வீட்டுக்காரர் துணிச்சலாக நடந்து கொண்டு திருடர்களைப் பிடித்ததோடு, பொருட்களையும் மீட்டார்.

அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் பணிபுரிபவர் சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர். அவர் வசிக்கும் ஒழுங்கையிலும் அடுத்தடுத்த ஒழுங்கைகளிலும் உள்ள வீடுகளில் திருடர்கள் அடிக்கடி இரவோடு இரவாக, ஊரடங்கு வேளையிலும் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் ஒருநாள் இரவு அரச ஊழியரின் வீட்டுக்கு வந்த திருடர்கள் தமது கையில் கிடைத்த பொருட்களுடன் சென்றுவிட்டனர்.

அடுத்த நாளும் திருடர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து வீட்டுக்காரர் விழித்திருந்தார். அவர் எதிர்பார்த்தது சரியாகியது.

திருடர்களின் சத்தம் கேட்டது. வீட்டுக்காரர் அவர்களைப் பிடிக்க முயன்றார். திருடர்கள் திசைக்கொருவராக ஓடினர். ஒரு திருடனைத் தொடர்ந்து துரத்திப் பிடித்துவிட்டார்.

மற்றவர்கள் யார் என்று காட்டுமாறு, 'நல்ல பூசை' போட்டுக் கேட்டார். ஒரு வீட்டுக்குக் கூட்டிச் சென்றான் பிடிபட்ட திருடன். அங்கிருந்த பெண்மணி தமது மகன் திருடவில்லை என்று முதலில் வாதாடினார். அரச ஊழியர் தமது முயற்சியைக் கைவிடவில்லை.

இறுதியில் அவரது வீட்டில் முதல்நாள் திருடப்பட்ட தளபாடங்கள் மற்றும் பொருட்கள் ஒப்படைப்பதாக இணங்கப் பட்டது.

அதற்கேற்ப அவரது பொருட்களைத் திருடர்களே அடுத்தநாள் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

## புலிகள் இயக்கத்தில் புதியவர்கள்!

வன்னியில் புதிய உறுப்பினர்கள் தம்மோடு இணைந்துவருவதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரகாலத்தில் வன்னியில் 50க்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தை, நெடுங்கேணிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களில் பல இளைஞர்களும், யுவதிகளும் புலிகள் இயக்கத்தில் புதிதாக இணைந்துள்ளவர்களில் அதிகமானோராகும்.

வன்னிப் போர் நடவடிக்கை தொடருமாயின் பாடசாலைகள் தொடர்ந்து இயங்க முடியாமல் இருக்கும். அதனால் மாணவ, மாணவிகள் பலர் புலிகள் இயக்கத்தில் புதிதாகச் சேரக் கூடும் என்றும் தெரிகிறது.

## இருவர் மரணம்!

காய்ச்சலால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த இருவர் கடந்த மாதம் 23ம் திகதியன்று மரணமடைந்தனர்.

கடந்த மாதம் 20ம் திகதி அனுமதிக்கப்பட்டவரான உரும்பிராயைச் சேர்ந்த சிவாந்தன் கலாமணி (வயது 39, உரும்பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலை உதவி அதிபர்) என்பரும் கடந்த மாதம் 23ம் திகதி காலை அனுமதிக்கப்பட்டவரான அல்வாய் தெற்கைச் சேர்ந்த ரி.சத்தியநேசன் (வயது 27) ஆகிய இருவருமே மரணமானவர்கள்.

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் காசநோயால் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## புலிகள் இயக்க உறுப்பினர் பலி!

### முதலில் மறுப்பு-பின்னர் ஏற்பு!

கடந்த மே 31 ஆம் திகதி மட்டக்களப்பு-சந்திவெளியிலுள்ள பத்திரகாளியம்மன் கோவிலடியில் வைத்து அப்பகுதி வாசியான சிங்கள இளைஞரைப் புலிகள் இயக்கத்தினர் பகலில் சுட்டுக் கொன்றனர். அவரது பெயர் பாலித என்று கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர் சில காலமாக அப்பகுதியில் ஒரு தமிழ்ப் பெண்ணையே திருமணம் செய்து சீவித்துவந்த சாதாரண குடிமகனாகும். இவர் தங்களுக்கு எதிரானவர்களுக்கு ஆதரவு வழங்கினார் என்பதே புலிகள் இயக்கத்தினர் இவர்மீது கூறும் குற்றச்சாட்டு என்று சொல்லப்படுகிறது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து உடனடியாகவே படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்து நடவடிக்கையில் இறங்கினர். அவ்வேளையில் சந்திவெளிப்பகுதி புலிகள் இயக்கத்தின் பொறுப்பாளர் என்று கருதப்படும் பிரபா என்பவர் படையினரால் கொல்லப்பட்டார். இவரே குறிப்பிட்ட சிங்கள இளைஞரைச் சுட்டவராம்.

பிரபாவின் சடலத்தைக் கையேற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் புலிகள் இயக்கத்தினரிடம் கொண்டு சென்றனர். எனினும் புலிகள் இயக்கத்தினர் உடனடியாக அதைத் தமது அங்கத்தவருடையது என்று ஏற்கவில்லை. பின்னர் சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மூன்று நாட்கள் கிடந்தது. அதன் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் புலிகள் இயக்கத்தினர், அச்சடலம் தங்களது அங்கத்தவருடையதே என்றும் அதை மீண்டும் எடுத்து வந்து ஒப்படைக்குமாறும் கேட்டிருந்தனர். இதன் பிரகாரம் ச.செ.சி. சங்கத்தினர் 02.06.97 அன்று ஏறாவூர் வைத்தியசாலையிலிருந்து சடலத்தைக் கையேற்றுப் புலிகள் இயக்கத்தினரிடம் ஒப்படைத்தனர்.

## மீனவர்கள் திண்டாட்டம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை ஆழ்கடல் கரைவலை மீன் பிடியாளர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது.

தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை பிடிப்பதற்காக கல்முனைக்கு வந்திருப்பதே காரணம், அவர்கள் தடை செய்யப்பட்ட "டைனமைட்" சுருக்குவலை, மின்னொளி பாய்ச்சி மீன்பிடிக்கிறார்கள். இதனால் மீனின் வாழிடம் குழம்புகிறது. மேலும் இம்மீனவர்களால் எமது கலாசார விழுமியங்கள் பாதிக்கப்படுவதாக கல்முனை பிரதேச மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## குடாநாட்டில் தப்பிய குறிகள்!

யாழ் குடாநாட்டில் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான முக்கியமான அதிகாரிகளில் ஒருவரை புலிகள் குறிவைத்தனர்.

குறிப்பிட்ட அதிகாரி தங்கியுள்ள முகாம் பகுதிக்குள் புலிகளின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சருடன் நகர்ந்து தாக்குதலுக்குத் தயாராக இருந்தார்.

இத் தகவல் படையினருக்கு, பொதுமக்கள் மத்தியில் இருந்து யாரோ ஒருவர் மூலமாகக் கிடைத்துவிட்டது.

அதனையடுத்து படையினர் குறிப்பிட்ட தாக்குதல் குழு உறுப்பினரை சுற்றிவளைத்தனர். தப்பிச் செல்ல முடியாத நிலையில் அவர் சயனைட் உட்கொண்டு மரணமானார். பலியானவர் புலிகள் இயக்க தாக்குதல் பிரிவில் முக்கியமானவர் என்று கூறப்படுகிறது. மேஜர் ஜெனரல் பலகல்லமீதே குறிவைக்கப் பட்டதாகத் தெரிகிறது.

இதேபோல இராணுவ இணைப்பு அதிகாரி ஒருவரை குறிவைத்து யாழ்ப்பாணத்தில் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலும் தோல்வியில் முடிந்தது. பொதுமக்களில் இருவரே பலியானார்கள்.

## மன்னாரில் தாக்குதல்

மன்னார் மாவட்டத்தில் பேசாலையில் புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு படையினர் ஆறுபேர் பலியாகினர். 27.05.97 அன்று இச் சம்பவம் நடைபெற்றது.

காலை 10.45 மணிக்கு உழவு இயந்திரம் ஒன்றில் ரோந்து சென்ற படையினரே தாக்குதலுக்கு உள்ளாகினர். பேசாலை மத்திய முகாமில் இருந்து 500 மீற்றர் தொலைவில் வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தமது தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கையால் இதுவரை 200 ஏக்கர் நெல் வயலும், 300 ஏக்கர் மரக்கறி விளைவிக்கும் விவசாய பூமியும் பாதிப்படைந்துள்ளன. 250 கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன என்றும் புலிகள் விவரம் வெளியிட்டுள்ளனர்.

## கொள்ளையர் கைவரிசை!

யாழ்ப்பாணத்தில் மட்டுவில் வடக்கு பகுதியில் கடந்த 31.05.97 அன்று வீடொன்றுக்குள் கொள்ளை முயற்சி இடம்பெற்றது.

இரவு 10.30 மணிக்கு வீடொன்றுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த கோஷ்டி ஒன்று வீட்டிலிருந்தவர்களை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டியது. அதற்கு முன்னதாக வீட்டிலிருந்த பெண்கள் அணிந்திருந்த நகைகளைப் பறித்துக் கொண்டது.

அறைக்குள் பூட்டவப்பட்டவர்கள் கூக்குரலிட்டனர். அதனையடுத்து அயலவர்களும் அபயக்குரல் எழுப்பினர். அதன் பின்னர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து விட்டு கொள்ளையர் தப்பியோடிவிட்டனர். மறுநாள் காலையில் வீதியில் இரத்தமும் ஒரு ஜோடி செருப்பும் காணப்பட்டதாம். ஊடரடங்கு நேரத்திலேயே இக் கொள்ளை முயற்சி நடந்திருக்கிறது.

## தமிழ்-முஸ்லிம் ஆசிரியர்கள் பற்றாக்குறை!

### கண்டி மாவட்டத்தில் கல்வி பாதிப்பு!

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் இயங்கும் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் தீர்ந்தபாடில்லை. போட்டிப் பரீட்சை மூலம் நடைபெற்ற தகுதிகாண் ஆசிரியர்களைத் தெரிவு செய்ய நேர்முகப்பரீட்சைகள் நடந்தும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதனால் தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்களென தெரிவிக்கப்படுகின்றது.

ஹேவா ஹெட்டைத் தொகுதியில் உள்ள கூடுதெனிய முஸ்லிம் பாடசாலையில் ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியால் பாடசாலை நிருவாகமே பாதிக்கப்பட்டிருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரையும் நியமிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 500 முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் 750 தமிழ் ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றதாம்.

## பொதுமக்கள் படையினர் உறவில் திடீர் மாற்றம்!

வன்னியில் மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட காலமாகக் கடமையாற்றிய 'படையணியினர் இங்கிருந்து வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதற்குப் பதிலாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இளம் படையணியினர் பொதுமக்களின் உறவில் பெருத்த விரிசலை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்கள் பயிற்சி பெற்றபின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திலே முதன் முதலில் கடமைக்கு அனுப்பப்பட்டவர்களாகும்.

பொதுமக்களுடன் இவர்கள் நடந்து கொண்ட விதம் மிகுந்த அசௌகரியத்தை உண்டாக்கியது. இவ்விடயங்கள் பாதுகாப்புத் தலைமைப் பீடங்களுக்கும் எட்டியதால் புதிய இளம் இராணுவப் படையணியினருக்குப் பொதுமக்களுடன் நல்லுறவாக நடந்து கொள்ளுதல் சம்பந்தமான போதனைகள் வழங்கப்பட்டன.

தற்சமயம் புதிய படையணியினர் பொதுமக்கள் மீது மிகுந்த வாஞ்சையுடனும், வரவேற்புடனும் நடந்து கொள்வதாகக் கூறப்படுகிறது. புதிய படையணியினரின் இத்திடீர் மனமாற்றம் பொதுமக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறதாயினும், இந்த நல்மாற்றத்திற்கு வரவேற்புத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே கடமையிலிருந்த பழைய படையணியினர் பொதுமக்கள்மீது காட்டிய உறவை மிஞ்சும் வண்ணம் புதிய படையணியினர் பொதுமக்கள்மீது நல்லுறவைப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதற்கு முன்னோடியாக பஸ் பயணிகள் மீதான சோதனைக் கெடுபிடிகளையும், நெருக்கடியான ஏனைய பல கஷ்டங்களையும் தளர்த்தியிருக்கிறார்கள். எல்லைச் சோதனைச் சாவடிகளிலுள்ள படையினர் தமது கண்காணிப்பற்ற பகுதிக்குச் சென்று வரும் பொதுமக்கள் மீதிருந்துவந்த சந்தேகப்பார்வையை நீக்கியிருப்பதோடு, வீணான கேள்வி பதில்களையும், நடைமுறையிலிருந்த விதிகளையும் தவிர்த்திருக்கிறார்கள். படையினரின் கண்காணிப்பற்ற பகுதிகளுக்கு அனுமதி பெற்று அளவோடு கொண்டு செல்ல வேண்டியிருந்த சில பொருட்களுக்கான தடைகள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. இது தொடருமா என்றும் பொதுமக்கள் சந்தேகப் படவே செய்கின்றனர்.

## அதிரடியும்–பதிலடியும்!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு உப-பொலிஸ் பரிசோதகர் உட்பட ஒன்பது பொலிஸார் புலிகள் இயக்கத்தினரால் கும்புறுமூலையில் வழிமறித்துத் தாக்கப்பட்ட சமயம் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவத்தைத் தொடர்ந்து கருவாக்கேணியில் இடம்பெற்ற தாக்குதல்களின் விளைவாக குடிமக்கள் தரப்பில் ஒரு பெண் கொல்லப்பட்டதுடன் ஒன்பது பேர் காயப்பட்டனர். 52 வீடுகள் சேதமடைந்துள்ளன. கிறிஸ்தவ தேவாலயங்கள் இரண்டும் மாரியம்மன் கோவிலும் சேதமாகின.

வழக்கமான வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையிலீடுபட்டுவிட்டுத் திரும்பும்போதே பொலிஸாருக்கு இக்கதி நேர்ந்தது. சம்பவம் கடந்த 02.06.97 அன்று மாலை இடம் பெற்றது.

## புளொட் மீது ரெலோ குற்றச்சாட்டு!

### "2900 தோட்டாக்கள் சுடப்பட்டன!"

"தமது அன்றாட தேவைக்காக 23.05.97 அன்று எமது உறுப்பினர்கள் செங்கலடிச் சந்தைக்குச் சென்றிருந்த வேளையில் புலிகள் நாலாபுறமும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இவ்வேளையில் புலிகளை நோக்கி எம்மவர்கள் புளொட், உட்பட அரச படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். புளொட் இயக்கத்தினர் 2900 சுற்றுத் தோட்டாக்களையும், எமது உறுப்பினர்கள் 225 சுற்றுத் தோட்டாக்களையும் பிரயோகித்துள்ளனர். இவ் எதிர்பாராத சமரின் போது எமது உறுப்பினர் ஒருவரும், பொது மக்கள் மூவரும் மரணமடைந்தனர். மேலும் எமது உறுப்பினர்கள் இருவரும் பொது மக்கள் 12 பேரும் காயமடைந்தனர்.

உண்மை இப்படி இருக்கும்போது 27.05.97 அன்று புளொட் இயக்கத்தினர் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில், "ரெலோ திருப்பித்தாக்கியதன் காரணமாக பொது மக்கள் பலியாகினார்கள்" எனவும் இது கண்டிக்கப்படவேண்டியது எனவும் தவறான அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளமையானது வேதனைக்குரியதும், வேடிக்கைக்கு உரியதுமாகும்.

இச்சம்பவத்தைக் கொண்டு அரசியல் லாபம் தேட நினைத்தால் அது தவறான கணிப்பாக இருக்கும். காரணம் எது உண்மை என்பதை மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் அடைந்துள்ளார்கள். இதுபற்றிய மேலும் பல உண்மைகளை காலம் உணர்த்தும்" இவ்வாறு ரெலோ இயக்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# அப்பாவி மக்கள்மீது ரெலோ தாக்குதல்!
## புளொட் அமைப்பு கண்டனம்

"செங்கலடியில் 23.05.97 அன்று இடம்பெற்ற கொடூரமான- அப்பாவிப் பொதுமக்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சாதாரண தமிழ் மக்களுடைய அடிப் படை நலன்களை துளியளவேனும் கணக்கெடுக்காத நிலையிலேயே சம்பவத் தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் செயற்பட்டிருப்பது மிகவும் வேதனை தரும் விடயமாகும். இதன் காரணமாக குறைந்தது 3 பொதுமக்கள் கொல்லப் பட்டிருப்பதுடன் 15 பேர் வரையிலும் காயமடைந்துள்ளனர்.

ரெலோ அமைப்பின் பிரதேச சபை உறுப்பினரைத் தாக்க புலிகள் தேர்ந் தெடுத்த இடம், தமிழ் மக்களின் விடுதலைக்காகவே தாம் போராடுவதாக கூறிக் கொள்ளும் புலிகள் நடைமுறையில், ஏற்கனவே காலங்காலமாக நீண்டு கொண்டிருக்கும் யுத்தக் கெடுபிடிகளால் உருக் குலைந்து போயுள்ள தமிழினத்தின் நலன்கள் பற்றியோ, பாதுகாப்புப் பற்றியோ அக்கறை கொள்ளத் தயாராகவில்லை, என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

பதிலுக்கு ரெலோ அமைப்பினர் நடாத்திய தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் எவ்வித காரணமுமின்றி பாதிப்புக் குள்ளாகியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத தும், கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

தமிழ்-முஸ்லிம் அரசியல்வாதிகளுக் கெதிராக துப்பாக்கிகளை நீட்டமாட்டோம் என்று புலிகளின் உள்ளூர் தலைவர்கள் கூறியதாக செய்திகள் பத்திரிகைகளில் வெளி வந்து ஓரிரு தினங்களுக்குள்ளேயே ரெலோ வின் பிரதேசசபை உறுப்பினர் மீதான படு கொலை நடாத்தப்பட்டிருப்பது புலிகளின் பாசிசப் போக்கில் சுயமாக மாற்றம் வரும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்றே தெரிகின்றது.

எனவே புலிகளின் போக்கில் மாற் றத்தை ஏற்படுத்தி அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் தமிழ் மக்களுடைய முழுமை யான விடுதலைக்காய் உழைக்கக் கூடிய ஒரு ஜனநாயகச் சூழலை தாயகப் பிரதேசத் தில் ஏற்படுத்தக்கூடிய அழுத்தத்தை வழங்க தமிழ் மக்களின் நலன்களில் உணர்வு பூர்வமானதும் அறிவு பூர்வமானது மான அக்கறை கொண்டுள்ள சமூகப் பிரமுகர்கள், கல்விமான்கள், பத்திரிகை யாளர்கள், நடுநிலைத் தாபனங்கள் அனை வரும் முன்வர வேண்டும் என்று இச் சந்தர்ப்பத்தில் மீண்டும் நினைவு படுத்த விரும்புகின்றோம்."

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அந்நிய மொழியில் அலாதி ஆசை
## வ-கி. மாகாண சபையின் மோகம்

எவர் எப்படிப் போராட்டம் நடத்தினா லும் தமிழன் தமிழனுடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளும் மரபைப் பேணிக் காப்பதில் வடக்கு- கிழக்கு மாகாணசபை முன் மாதிரியாக விளங்குகிறது.

மேலதிக நேரக் கொடுப்பனவு சம்பந்த மாக, பிரதிப் பிரதம செயலர் க.பரமலிங்கம், அமைச்சுகள் திணைக்களங்கள் என்பவற் றுக்கு அனுப்பிவைத்துள்ள மூன்றுபக்க ஆங்கிலச் சுற்று நிருபத்தின் மூலம் இந்த மரபை உறுதியாகக் காப்பாற்றியுள்ளார்.

வடக்கு- கிழக்கின் நிருவாக மொழி தமிழ் என்றிருந்த போதிலும் தான் சுற்று நிருபம் அனுப்பியது போதாதென்று ஏனை யோரையும் ஆங்கிலத்தில் கருமமாற்றத் தூண்டும் வகையில் மூன்று இணைப்புப் படிவங்களையும் பரமலிங்கம் சுற்று நிருபத்துடன் இணைத்துள்ளார். என்.ஈ.பி/ 6-8/1/ சிசி இலக்கம் கொண்ட இச் சுற்று நிருபம் ஏப்ரல் 30ந் திகதி வெளியாகியுள்ளது.

இதுபற்றி முரசு, அதிகாரி ஒருவரு டன் தொர்பு கொண்டபோது, "தாய் மொழிப் பற்று புனிதமானது. அது எல்லோருக்கும் வந்து விடுவதில்லை" என்று சிரித்தபடி கூறினார். எவ்வாறாயி னும் பிரதம செயலர் ஜி.கிருஷ்ணமூர்த்தி இந்தச் செய்கையைக் கண்டித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

# மறைந்த கவிஞருக்கு மரியாதை
## மலையகத்தில் இலக்கியவாதிகள் அஞ்சலி

மலையகக் கவிஞர் மலைத்தம்பி (இரா. ஐசெக்)யின் மறைவுக்கு கண்டி நகரில் ஒன்று கூடிய இலக்கியகர்த்தாக்கள் இலக்கிய ஆர்வலர்கள் இரண்டு நிமிட மௌனாஞ்சலி செலுத்தினர்.

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தின் ஏற்பாட்டின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்த "மலையகச் சிறு கதைகள்" என்ற தொகுப்பு நூலின் அறிமுக விழாவில் ஒன்று திரண்டிருந்த எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் குழுமியிருந்த இலக்கிய ஆர்வலர்கள் மத்தியிலே, மறைந்த கவிஞர் மலைத்தம்பிக்கு இந்த மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

பேராசிரியர். சி.தில்லைநாதன், சிரேஷ்ட எழுத்தாளர் டொமினிக் ஜீவா, கவிதை நூல் தொகுப்பாசிரியர் தெளிவத்தை ஜோசப், கலாநிதி துரை மனோகரன், சாரல் நாடன், அந்தனி ஜீவா உட்பட பத்திரிகையாளர்கள் பலரும் இந்த விழாவில் திரண்டிருந்தனர். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலை வர் இரா.அ.இராமன் மலைத்தம்பியின் நினைவாஞ்சலியை விழாவில் முன் மொழிந்தார்.

இலக்கிய ஆர்வலர் துரை விசுவ நாதன் விழாவுக்கான ஒத்தாசை வழங்கி யிருந்தார்.

# தடுமாறும் பஸ்சேவை

(கண்டி நிருபர்)

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கல்ஹின்னைப்பிரதேச மக்கள் போதிய பஸ் போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் அல்லற்படுகின்றனர்.

மக்கள் போக்குவரத்துச் சேவை யினால் இயக்கப்படும் பஸ்கள் நேர அட்டவணைக்கு ஓடுவதில்லையாம், என அப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

பஸ்களின் சாரதிகளும் நடத்துநர் களுமே தமது மனம் போன போக்கில் அவற்றை ஓட்டுவதில் கண்டிப்பாக இருந்து வருகிறார்களாம்.

கண்டி வடக்கு மக்கள் மயப்படுத் தப்பட்ட போக்குவரத்துச் சேவை டிப்போ வுக்குச் சொந்தமான பஸ்களினாலேயே இந்தத் தொல்லைகளை தாம் அனுபவிக்க வேண்டியிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். அதே வேளையில் வீதிகள் சுருங்கி, இரண்டு பஸ்கள் ஓட முடியாத அளவுக்கு பாதைகளும் சீர் கேடாகக் காணப்படுகின்றன.

# "கூட்டு என்ற பேச்சே கிடையாது"

மலையக மக்கள் முன்னணியும் இ.தொ.கா.வும் பாராளுமன்றத்தில் இணைந்து செயல்படுவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் தற்போது சிலரால் மலையக மக்கள் முன்னணியும் இ.தொ.கா. வும் இணையப் போகின்றன என்ற வகையில் பிரச்சாரம் செய்யப்படுவது தொடர்பாக எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அது தொடர்பாக உண்மை நிலையை மக்களுக்கு விளக்க விரும்புகிறோம்.

பல்வேறு தொழிற்சங்கங்கள் தத்தமது தனித்துவத்தை இழக்காத வகையில் தோட்டத் தொழிலாளரின் பொதுவான கோரிக்கைகளில் இணைவதற்காக கூட்டுக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்ட பல்வேறு தமிழ் கட்சிகள் தமிழ் மக்களின் பொதுவான பிரச்சனைகள் சம்பந்தமாக பொதுவான இணக்கத்திற்கு வருவதற்காக பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

மலையகத்தை பொறுத்தளவில் இதுவரை ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் பாராளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. ஆனால் தற்போது மலையகத்தை பிரதிநிதித் துவப் படுத்தும் இரு அமைப்புகள் பாராளு மன்றத்தில் இருப்பதினால் அவை தமது தனித்துவத்தை இழக்காத வகையில் மலையக மக்களின் பொதுவான பிரச்சனைகளில் பாராளுமன்றத்திற்குள் கூட்டாக செயல்பட வேண்டிய தேவையை இப்புதிய சூழல் ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவே பாராளுமன்றத்தில் மலையக மக்கள் முன்னணியும் இ.தொ.காவும் இணைந்து செயல்படும் என்ற தீர்மானம் ஆகும்.

இவ்விளைவு எந்த விதத்திலும் இவ்விரு கட்சிகளுக்கிடையிலான கூட்டாக அர்த்தப்படக் கூடாது. எம்மிரு அமைப்புகளுக்குமிடையி லான கொள்கை வேறுபாடுகளும் வரலாற்று ரீதியான முரண்பாடுகளும் சிறிதளவேனும் தீர்க்கப்படாத சூழலில் இரு கட்சிகளும் இணைந்து இரண்டறக் கலக்கப்போகின்றன என்பது மலையக மக்கள் முன்னணியின் வளர்ச்சி மீது காழ்ப்புகொண்ட ஒரு சிலரின் கற்பனைக் கண்டுபிடிப்பாகும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் பி.ஏ.காதர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஞ்சல் சேவை நேர நீடிப்பு

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை அஞ்சல் அலுவலகச் சேவை நேரம் காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரைக்குமாக நீடிக்கப்பட்டுள் ளது. கடந்த வாரம் தொடக்கம் இது அமுல் படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஜனவரி தொடக்கம் ஓவர்டைம் பிரச்சனையால் 12 மணி நேரமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த தபாற் கந்தோர் சேவை, நிருவாகம் மேலதிக நேரக் கடமைக்கான நேர எல்லையைத் தளர்த்த அனுமதி அளித்ததைத் தொடர்ந்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அஞ்சல் அத்தியட்சகர் திரு. நல்லதம்பி முரசுக்குத் தெரிவித்தார்.

இவ்வெல்லை மேலும் தளர்த்த நட வடிக்கை எடுக்கப்படின் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் முன்னைய நாட்களைப் போல் சேவை வழங்கமுடியும் எனத் தெரிவித்த அவர், வடபகுதிக்கான தபாற் சேவை கப்பல் மூலம் நடைபெறத் தொடங்கியுள்ளதால் கடிதங்கள் விரை வாக உரியவர்களிடம் சேர வாய்ப்புண்டு என்றும் கூறினார்.

வடபகுதிக்கான கப்பற் சேவை விடுமுறை தினங்களில் நடைபெறும் சந்தர்ப்பங்களிலும், தபால் அனுப்பும் நடவடிக்கை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருபதுக்கு மேற்பட்ட தபால் அதிபர் களுக்கான வெற்றிடங்கள் திருக்கோண மலை மாவட்டத்தில் நிலவுகின்றன. இதனை ஓரளவுக்கு நீக்குமுகமாக பத்து புதிய அஞ்சலதிபர்கள் ஜூன் மாதத்தில் நியமனம் பெறவிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரப் பகுதி


**BRIGHT EXTERNAL STUDY UNIT**
**அஞ்சல் வழி கல்வித்துறை நிறுவனம்**

Bright Book Centre (Pvt) Ltd கல்விப் பணியில் அஞ்சல் கல்வித் துறையில் Bright External Study Unit கீழ் தபால் மூலம் கல்வித்திட்டம் நடைபெற்று வருகிறது.

**90 நாட்களில் ஆங்கிலக்கல்வி**
**90 DAYS SPOKEN ENGLISH**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகுமுறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழு வருட காலமாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்துச் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

பாடநூல்கள் யாவும் இருபத்தோராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

**கட்டணம்** இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே, வெளிநாட்டு மாணவருகளுக்கு US $ 25.00 பாடக் கட்டணத்தை The Director - B.B.C எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக்கூடியதாக காசுக் கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

Spoken English நேரடி வகுப்புகள் எமது நிறுவன இயக்குனர் பொன். சக்திவேல் ACEA (Lond), IPFM (Lond) Dip.in.English (Lond) அவர்களால் நடாத்தப்படும். வகுப்பில் இணைய விரும்புவோர் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ தொடர்புகொள்க.

**APPLICATION FORM**

Name:..............................
Address:..............................
Date of Birth:..............................
M.O. & Date:..............................
Date:..............................

Signature of Applicant

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
**BRIGHT EXTERNAL STUDY UNIT**
Colombo Central Super Market Complex,
P. O. BOX 162, COLOMBO - 11. T.P. 434770



**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



**திருமண அழைப்பிதழ்**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஈசுவர வருஷம் வைகாசி மாதம் 23ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 7-14 தொடக்கம் 11-05 வரையுள்ள மிருகசீரிடம் சித்தயோகம் கூடிவரும் சுப முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **சிவகணேஸ்** | **சுமத்திராதேவி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு.& திருமதி | திரு.& திருமதி |
| சொ மாணிக்கராசா | சி. கந்தசாமி |
| 2ம் வட்டாரம், சல்லி | இல-27 |
| சாம்பல்தீவு | 4ம் குறுக்குத் தெரு |
| தகவல்- ரவீந்திரன்-கருணன், பிரான்ஸ் | திருகோணமலை T.P.-026-20224 |



**Programming in Visual Basic**

* இன்று Windows Programming இல் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பாடநெறி !
* மட்டுப்படுத்தப்படாத செய்முறை வகுப்புக்களுடன் பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்!

ஆரம்பம்: 8th June, 1997 பயிற்சிக் காலம்: 3 மாதம்

குறிப்பு: இவ்வகுப்பில் சேர விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட Diploma in Computer படித்தவராக அல்லது படித்துக்கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்

தொடர்பு : Brighton College International
414A, Galle Road, Wellawatte, Colombo 6.
தொலைபேசி : 597409



**INVITE**

HINDU TAMIL- AGE-33
U.S. RESIDENT- SEEKING BEAUTIFUL, PROFESSIONAL GIRL, 24-30 YEARS OF AGE, SIMILAR BACKGROUND.
CORRESPONDENCE WITH PHOTOGRAPH.

N.S.U.
P.O. BOX - 1092
BOSTON MA - 02117
U.S.A.



**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**சந்திரன்**
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



**SPOKEN ENGLISH**
**தபால் மூலம் கல்வி**

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE(PVT) LTD.
P.O.BOX-162, COLOMBO.



**UNION**
யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411




படிப்பகம்

www.padippakam.com

# தாமதங்களும்—தயக்கங்களும்!

திருமலையில் கிரேக்க கப்பல்மீது குண்டுத்தாக்குதல் நடந்திருக்கிறது. 29.05.97 அன்று நடைபெற்ற இச் சம்பவம் வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்களுக்கு விடுக்கப்பட்ட மறைமுக எச்சரிக்கையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

திருமலைத் துறைமுகத்துக்குள் ஊடுருவுவது கடற் புலிகளுக்கு கடினமான காரியமல்ல. ஏற்கனவே தங்கள் கைவரிசையை அங்கே காட்டியிருக்கிறார்கள்.

கடற்புலிகள் ஊடுருவித் தாக்கலாம் என்று பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும் வர்த்தகக் கப்பலை புலிகள் தாக்குவார்கள் என்று எதிர்பார்த்திருக்க முடியாது.

கடற்படை கப்பல்கள் அல்லது துறைமுகம்தான் புலிகளின் குறியாக அமையும் என்று கருதியே பிரதான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்ட கப்பலின் பெயர் 'அதெனா'. திருமலையிலுள்ள பிரிமா ஆலைக்கு கோதுமை ஏற்றிவந்த கப்பல் அது.

29ம் திகதி அதிகாலை 2.30 மணிக்குத்தான் சம்பவம் நடந்திருக்கிறது.

கப்பலின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில்தான் கப்பல் சேதமாகியது.

அதிகாலை நேரம் என்பதால் கடற்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினர் இருளோடு இருளாக படகில் வந்து எட்டத்திலேயே இறங்கி நீந்திவந்து குண்டைப் பொருத்திவிட்டுப் போய்விடுவது ஒன்றும் கஷ்டமல்ல.

புலிகள் இதுவரை உரிமை கோரவில்லை. புலிகள்தான் காரணம் என்று அரசும் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.

**தாமே இதனைச் செய்திருந்தாலும் உரிமை கோருவது புலிகளைப் பொறுத்தவரை புத்திசாலித்தனமானதல்ல. புலிகள்தான் இதனை செய்தனர் என்று தெரிந்தாலும் அதனை உடனடியாக வெளியே சொல்வதில் அரசுக்கும் சில தயக்கங்கள் உள்ளன.**

வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்களை இலங்கைக்கு வரமுடியாமல் அச்சுறுத்துவது புலிகளுக்கு சாதகம்தான். பொருளாதார ரீதியாக அரசை இறுக்கும் வழிகளில் அதுவும் ஒன்று. ஆனால் வெளிநாட்டுக் கப்பல்களை தாம்தான் தாக்கியதாக புலிகள் உரிமை கோருவார்களேயானால் குறிப்பிட்ட நாடுகளின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ள வேண்டி ஏற்படும்.

அதுதவிர வர்த்தகக் கப்பல்களை தாக்குவது சர்வதேசரீதியாக கண்டனத்துக்குரிய செயல் என்பதால் உரிமை கோருவது புத்திசாலித்தனமும் அல்ல.

அரசைப் பொறுத்தவரை வர்த்தகக் கப்பலை புலிகள் தாக்கியதாகக் கூறினால் சாதகமும் உண்டு. பாதகமும் உண்டு.

இலங்கைக்கு வர்த்தகக் கப்பல்களை அனுப்புவதால் பயனடையும் நாடுகளில் புலிகளுக்கு எதிரான அதிருப்தியை உருவாக்குவதுதான் சாதகம். அதேநேரம் தனது கடல் எல்லையில் வர்த்தகக் கப்பல்களை இலங்கை அரசால் பாதுகாக்க முடியவில்லை என்பது பகிரங்கமாவதால் தனியார் கப்பல் நிறுவனங்களும், பல நாடுகளும் தமது வர்த்தகக் கப்பல்களை அனுப்பத் தயக்கம் காட்டுவதால் பெரும் பாதகமும் ஏற்படும்.

அவ்வாறான பாதகம் இல்லையானால் உடனடியாகவே புலிகள்மீது அரசு குற்றச்சாட்டை எடுத்து வீசியிருக்கும்.

'அதெனா' கப்பல்மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலும் கப்பலை முழுதாக அழித்தொழிக்கும் தாக்குதலாக இருக்கவில்லை. அடையாளத் தாக்குதல் அல்லது எச்சரிக்கை போன்றே தோன்றுகிறது.

ஏனெனில் 5 கிலோகிராமுக்கு உட்பட்ட வெடிமருந்தே பாவிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கப்பலை தகர்க்க அந்தளவு போதுமானதல்ல.

எனவே வர்த்தக கப்பல் புலிகளால்தான் தாக்கப்பட்டது என்று சொல்வதில் தனக்குள்ள சாதகம் பாதகம் என்பவற்றை கணிப்பிட்டே அரசு விசாரணை முடிவுகளை வெளியிடும். பாதகம் என்றால் விசாரணை முடிவுகளை மழுப்பலாக முடிப்பதுகூட பெரிய காரியமல்ல. குறிப்பிட்ட கப்பல் கம்பனி அதிகாரிகள் விசாரணைக்காக வந்துள்ளனர். எனினும் அரசு நினைத்தால் தன் நலனுக்கு சார்பானரீதியில் விசாரணைப் போக்கைகொண்டு செலுத்த முடியாது என்றில்லை.

புலிகள்தான் வர்த்தகக் கப்பலை தாக்கினார்கள் என்றால் அது சரியானதா?

பொருளாதார ரீதியாக தன் எதிரியை ஆட்டம் காணச் செய்யும் தாக்குதல்கள் உள்நாட்டு யுத்தங்களிலும், நாடுகளுக்கிடையிலான யுத்தங்களிலும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன.

இலங்கை அரசுகூட புலிகளை பொருளாதார ரீதியாக செயலிழக்கச் செய்வது என்று கூறிக்கொண்டே பொருளாதாரத் தடைகளை விதிக்கிறது. அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைக்கூட அரசு பொருட்டாகக் கொள்ளவில்லை.

**அப்படியிருக்கும்போது புலிகளும் அரசுக்கு பொருளாதார ரீதியான பின்னடைவுகளை கொடுக்கக்கூடிய தாக்குதல்களை தொடுப்பது எதிர்பார்க்கக்கூடியதே. பொதுமக்களை இலக்காகக் கொள்ளாமல் பொருளாதார இலக்குகளையோ, அல்லது பொருளாதார நெருக்கடியை கொடுக்கக்கூடியதாகவோ நடைபெறும் தாக்குதல்களை யுத்தத்தில் ஈடுபடும் தரப்புக்கள் ஒன்றை ஒன்று வெற்றி கொள்ள மேற்கொள்ளும் உத்திகளுக்குள்தான் அடக்கவேண்டும்.**

தற்போது புலிகளின் வன்னித் தளத்தை பலவீனமாக்க படைபலரீதியாக மட்டுமல்லாமல், பொருளாதார ரீதியாகவும் அரசு தன் முற்றுகை வலையை வீசப் பார்க்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை ஒரு புறமிருக்க, நியாயமாக அனுப்பப்பட வேண்டிய உணவு, மருந்துப் பொருட்களும் போதியளவு அனுப்பப்படுவதில்லை.

இதற்கு புலிகளுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கக்கூடாது என்பது மட்டும் காரணமல்ல.

போராட்டம் தொடர்ந்தால் இதுதான் கதி என்று மக்களை அச்சுறுத்தி புலிகளிடம் இருந்து தனிமைப் படுத்துவதும், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை வெளியே இழுப்பதும் இந்தத் தடைகள், தாமதங்களுக்கு பிரதான காரணம்.

## கிரேக்க கப்பலில் வெடித்த குண்டு
## பாராளுமன்ற தெரிவுக்குழுவும்—பாரிஸ் மாநாடும்
## பகிரங்க அரசியல் களத்தில் பலவீனம்
## 15 வருடகால போரில் வார்க்கப்பட்ட புலிகள்

ஆனால் அரசின் பொருளாதாரத் தடைகள் புலிகளை ஒரு வரையறைக்குமேல் இறுக்க முடியாது. அரசு எதிர்பார்ப்பது போல புலிகள் மீதும் நிரந்தர வெறுப்பை மக்களிடம் சம்பாதித்துக் கொடுக்கப் போவதில்லை.

**ஆனால் யுத்தம் காரணமாக மக்களைப் பட்டினி போடுவதும், உணவு ஆசை காட்டி குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி இழுப்பதும், குடிமனைகள் உள்ள பகுதிகளில் பாரிய படைக்கலப்பிரயோகங்களும் சர்வதேச நியாயங்களுக்கு மாறானவைதான்.**

அரசே அவற்றை மீறும்போது புலிகள் மட்டும் சர்வதேச சட்டங்கள் அனைத்தையும் கண்ணாகக் கருதவேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது? என்ற கேள்வியும் எழாமலில்லை.

**வ**ன்னியில் படையினர் எதிர்பார்த்ததை விட பதிலடி பலமாக விழுந்திருக்கிறது.

படை நடவடிக்கை ஆரம்பமாக முன்னரே கட்டம் கட்டமாக முன்னேறுவதுதான் திட்டமாக இருந்தது. ஆனால் இத்தனை மூர்க்கமான எதிர்ப்பை படையினர் எதிர்பார்க்கவில்லை என்பது படையினரை உற்சாகமூட்ட மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் தெரிகிறது.

சண்டை முனையில் 20 ஆயிரம் படையினரை ஒன்றுகுவித்து மனித மலையாக, பீரங்கிக் குண்டுகளையும், ஷெல்களையும் அள்ளிவீசியபடி சென்றாலும்கூட பெரும் படை ஒன்றை சிறுபடை மிகத் தந்திரமாக எதிர்கொண்டு நின்றது.

வன்னிப் போர் முனை என்பது இரு தரப்புக்குமே புதிய போர் அனுபவம்தான்.

எதிரி ஒன்றுகுவிந்து பாரியபலத்துடன் முன்னேறும்போது பின்வாங்கு



என்பதுதான் கெரில்லா விதி.

அந்த விதியை யாழ் குடாநாட்டில் புலிகள் கடைப்பிடித்தனர். ஆனால் வன்னியில் ஒன்றுகுவிந்த படைபலம் கண்டும் புலிகள் போரிட்டே ஆகவேண்டிய நிலையில் உள்ளனர்.

அதேசமயம் ஒன்றுகுவிந்த படைபலத்தால் புலிகளை பாரிய இழப்புக்களுக்கு உள்ளாக்கும் மரபுப் போர் உத்தியும் வன்னியில் தோல்வியை சந்தித்து உள்ளது.

புலிகள் தரப்பில் 214 பேர் பலியானதாகப் படையினர் கடந்தவாரம் கூறியிருந்தனர்.

போரில் தாம் சாதிக்க நினைத்து முடியாமல் போன இலக்கை பிரச்சாரம் மூலமாக எட்ட நினைத்த இயலாமைதான் வெளிப்பட்டிருக்கிறது.

**இதுவரை வன்னிப் போரில் படையினருக்கே இழப்புக்கள் அதிகம். படையினர் பயன்படுத்திய படைக்கல சக்தியும் புலிகள் பயன்படுத்தியதைவிட பல மடங்கு அதிகம்.**

**நல்லூரில் கம்பன் கழக கட்டிடத்தை பிரபாகரனின் வீடு என்று தொலைக்காட்சியில் காட்டியதுபோல, நெடுங்கேணியில் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தை புலிகளின் உணவுக்கிடங்கு என்று தொலைக்காட்சியில் காண்பித்தனர். மிகையான பிரசாரங்களில் காட்டும் ஆர்வம் போர்க்கள நிலவரங்களை விடத் தீவிரமாக இருக்கிறது.**

20 ஆயிரம் படைகளையும் போரிடுவதில் ஒன்றுகுவித்து ஒவ்வொரு சண்டைமுனையையும் கடந்து செல்வதே படையினரின் திட்டம். அதனால்தான் போரில் ஈடுபடும் படையினரை கைப்பற்றிய நிலப் பகுதிகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்த முடியவில்லை.

கடற்படையினரையும், பொலிசாரையும் கைப்பற்றிய பகுதிகளின் தரைப்பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்திவிட்டு படைபலத்தை சண்டை முனையில் குவிப்பதே இன்றைய உத்தி.

ஆனால், பொலிசார் அதற்குத் தயாராக இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் தாம் சண்டை முனைக்கு அனுப்பப்படுவதை பொலிசார் விரும்பவில்லை. பறையனாலங்குளத்தில் இருந்து 265 பொலிசார் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு ஓடியதும் அதனால்தான்.

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் பெண் பொலிசாரை கூடுதலாக சேவையில் வைத்துக்கொண்டு வடபகுதியில் கைப்பற்றப்படும் பகுதிகளில் ஆண் பொலிசாரை அனுப்பி சமாளிக்க அரசு நினைத்தது.

**படையில் ஆட்பற்றாக்குறையை நேரடியாகச் சொல்லாமல் மக்களே இல்லாத பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட என்று பொலிசாரை அனுப்புவதும், பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதாக பிரசாரம் செய்வதும் நல்ல வேடிக்கைதான்.**

பொலிசார் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக வெளியான செய்திகளை அரசு மறுத்திருக்கிறது. ஆனாலும் நெருப்பில்லாமல் புகையாது என்பது இந்த விடயத்தில் ஏற்கக்கூடியதுதான். செய்தி பொய் என்று அரசு சொன்னாலும்கூட, தற்போது பொலிசாரை வடக்கே செல்ல வலியுறுத்துவது குறைந்திருப்பதுபோலத் தெரிகிறது.

படையினருடன் ஒப்பிட்டால் பொலிசாருக்கு தீவிர சண்டைகளை எதிர்நோக்கும் பயிற்சி போதாது. அதுதவிர சண்டைமுனை செல்ல விரும்பினால் அவர்கள் ஏன் பொலிசில் சேருகிறார்கள். நேராக இராணுவத்திலேயே சேர்ந்திருப்பர். ஆனால் அரசுக்கும் திண்டாட்டம்தான். முன் வைத்த காலை பின்வைக்கவும் முடியாது. அதேசமயம் கண்ணை மூடிக்கொண்டு முன்னால் போனால் புலிகளின் பொறிக்குள் சிக்க வேண்டியும் நேரலாம்.

எப்படியானாலும் தற்போது படையினர் நிலை கொண்டுள்ள இடங்களில் தொடர்ந்து தாமதிப்பது ஆபத்து என்றே படை அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஓமந்தையில் உள்ள படையினரும், மணலாற்றில் இருந்து நெடுங்கேணிவரை சென்ற படையினரும் புளியங்குளம் வரையாவது சென்றால்தான் தமது பாதுகாப்பை நிச்சயப்படுத்த முடியும் என்ற கட்டத்தில் உள்ளனர்.

இல்லாவிட்டால் புலிகள் ஊடறுத்து தாக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதுதவிர முல்லைத்தீவுக்கும் திருமலைக்கும் இடையிலான புலிகளின் பிரதான தரைவழித் தொடர்பையும் படையினரால் துண்டிக்க முடியாது.

**அதாவது படையினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளில தங்கிநிற்பது எந்த வகையிலும் யுத்ததந்திர ரீதியில் பயன் உடையது அல்ல. புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல் வவுனியா நகரை எட்டாதிருக்க வேண்டுமானால்கூட படையினர் புளியங்குளம் வரை சென்றாக வேண்டும்.**

எப்படியாவது படை நகர்வை புளியங்குளம் வரையாவது மேற்கொள்ளவேண்டும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆர்வம் கொண்டிருக்கிறார். இராணுவ அதிகாரிகள் சிலர் வேறு விதமாக நினைக்கின்றனர். ஏற்கனவே கைப்பற்றிய பகுதிகளை பாதுகாக்க பொலிஸ் உதவி போதுமானளவு கிடைத்தால்தான் மேற்கொண்டு முன்னேறமுடியும். இல்லாவிட்டால் புலிகள் முன்னே நகரும் படைகளுக்கு பின்புறமாக வந்தும் தாக்கத் தொடங்கலாம் என்று நினைக்கின்றனர்.

ஆனால் அரசுக்கு தனது படை நடவடிக்கையின் பலாபலன்கள் பற்றி பட்டியல் வெளியிடுவதில் கடும் அவசரம். அதனால் புளியங்குளம் வரையாவது சென்றுவிட்டால், புலிகளின் வடக்கு-கிழக்கு தொடர்பை துண்டித்துவிட்டோம் என்று கூறமுடியும். புலிகளை குறிப்பிட்டளவு பலவீனமாக்கிவிட்டோம் என்றும் உள்நாட்டிலும், வெளியுலகிலும் பிரசாரம் செய்யலாம் என்பது அரசின் நோக்கம்.

விரைவில் பாரிசில் நடைபெறவுள்ள இலங்கைக்கு கடன்வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்பாக அரசு அடையத் துடிக்கும் இலக்குகள் இரண்டு.

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஒன்று; யுத்தம் மிக விரைவில் முடிந்துவிடும் என்ற நம்பிக்கையை கடன்வழங்கும் நாடுகளுக்கு ஏற்படுத்துவது. அந்த நம்பிக்கையை ஊட்டுவதற்கு வன்னிப் போர் நடவடிக்கை கணிசமானளவு வெற்றிபெற்று புலிகள் பெரிதும் பலவீனமாகிவிட்டார்கள் என்பதை நிரூபிக்க முடிந்தால் பெரும் உபயோகம்.

இரண்டு; இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு விரைவில் காணப்படப் போகிறது என்ற நம்பிக்கையை கடன் வழங்கும் நாடு களுக்கு வழங்குவது. நீதியமைச்சர் திரு.ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்ற தமிழ், முஸ்லிம் கட்சிகளை அடிக்கடி சந்திப்பதும், சந்திப்புக்கள் ஆரோக்கியமாக அமைவதாக அரச தரப்பே செய்திகள் வெளியிடுவதும் அதனால்தான். விரைவில் எதிர்க்கட்சிகளையும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் சகிதம் சந்திக்கப்போகிறார் பீரிஸ்.

**பாரிஸ் கூட்டத்தின் முன்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் என்று ஒரு பட்டியலை தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் இணக்கத்துடன் வெளியிடக்கூட அரசு முனையலாம். வடக்கு- கிழக்கு இணைப்பு, பாரம்பரிய பிரதேச பாதுகாப்பு போன்ற உயிர்நாடியான விடயங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களாக அவை இருக்கும்.**

அரசியல் அரங்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் மட்டும் அரசின் நோக்கங்களுக்கு திரைமறைவில் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பகிரங்க அரசியல் களத்தில் உள்ள அமைப்புக்கள் யாவும் புலிகளை உதட்டளவில் பாராட்டிக்கொண்டே புலிகளின் வீழ்ச்சியை உளப்பூர்வமாக விரும்புகின்ற அமைப்புக்களாகவே உள்ளன.

குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி அந்த திரைமறைவு வேலையை மிகச் சிறப்பாக செய்துவருகிறது.

பகிரங்க அரசியல் களத்தில் புலிகளுக்கு நம்பகமான சக்தி மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளுக்காக விட்டுக் கொடுக்காமல் போராடக் கூடிய கட்சிகள்கூட இல்லாமல் போயிருக்கும் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

**சுமார் 15 வருடகால யுத்தப்பட்டறையில் உருக்கி ஊற்றி அச்சில் வார்க்கப்பட்ட இரும்பாக புலிகளின் கெரில்லா பலம் காணப்படுகிறது. அதற்கு ஈடாக பகிரங்க அரசியல் களத்தில் உறுதியாக வார்க்கப்பட்ட அமைப்பொன்று இல்லாமல் போயிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். அதனால் இன்றைய அரசியல் முனையில் அரசினதும், தென்னிலங்கை கட்சிகளதும் கைகள் மேலோங்கி உள்ளன.**

ஆனால் யுத்த முனையில் மோதும் படைகளும், பாயும் புலிகளும்தான் இறுதியாக நாட்டின் அரசியல் தலைவிதியையும் தீர்மானிக்கப் போகிறார்கள். ஏனெனில் இங்கே இனப்பிரச்சனை தீராதவரை அரசியல் ஆயுதபலத்தால்தான் வழிநடத்தப்படும். ஆட்சி அதிகாரத்தை யுத்த வெற்றி தேல்விகள்தான் தீர்மானிக்கும்.

நா
ர
த
ர்

## அதிரடி அய்யாத்துரை



**கொழும்பில்** பணிக்குழுக் கூட்டத்தில் மணியான காட்சிகள்; மணியான சாடல்கள். "போருக்கு எதிரானவர்கள் நாம்" என்றார் கூட்டான கட்சி பிரமுகர். சங்கரியாரை ஏக வசனத்தில் குறிப்பிட்டுக் கூட்டத்தினர் கிழிக்கத் தொடங்கினராம். தீர்வுத் திட்டம் பற்றியும் பிரமுகர் பேச முற்பட 'போங்க... நீங்களும் உங்கள் தீர்வுத் திட்டமும்' எண்டு சனம் துள்ளிய துள்ளலில் துரையர் கப்சிப். தப்பித் தவறி சங்கரியார் மட்டும் குறிப்பிட்ட கூட்டத்தில் தலையைக் காட்டியிருந்தார் எண்டு வையுங்கோ- துண்டைக்காணோம், துணியைக் காணோம் எண்டு ஓடித் தப்பியிருக்கலாமோ என்டதும் சந்தேகம்தான். சிலரைப் பலநாள் ஏமாத்தலாம்; பலரைச் சிலநாள்தான் ஏமாத்தலாம். சபாஷ் மகா ஜனங்களே! சபாஷ்! தொடரட்டும் பணி.

**பணிக்குழுக் கூட்டத்தில்** சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவின் பேச்சுக்கும் பலத்த கரகோசம். அவர் சிறந்த பேச்சாளர். அந்தக் காலத்திலை 78-79 என்று ஞாபகம். யாழ் பல்கலைக் கழகத்தில் 'குற்றவாளிக் கூண்டில் கூட்டணி' என்ற வழக்காடு மன்றத்தில் கூட்டணியை பீஸ் பீஸாய் அவர் கிழிக்க, மாணவர் கரகோசம் மழைபொழிய என் காதால் கேட்டவன் நான். ஆனால் சமீப காலமாக வெறும் வசனத் தொடர்களாகவே அவர் முழங்குவது சகிப்பதில்லை. நீண்டகாலத்திற்குப் பின்னர் சமீபத்திய கூட்டத்தில் சத்தாகவே பேசினார் மனுசன். ஆனாலும் 'கேடு கெட்ட சனம்' எண்டு அவர் சொன்னதுதான் சனத்தைக் கிளப்பிப் போட்டுது. மினித் தேர்தலில் சனம் தம் அணிக்கும் புள்ளடி போடாத வருத்தத்தில் பேசிப் போட்டாராக்கும்! அது அவர் பேச்சுக்கு திருஷ்டி சுற்றிப் போட்ட மாதிரியாகிவிட்டது.

**அடி என்றால் மரண அடி..** மலைப்பகுதியின் தனித்துவமான சந்திரனார் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். பின்னர் மலைப்பகுதியின் மற்றொரு தனித்துவக் கட்சி சார்பாக முன்னாள் அமைச்சர் தேவமானவர் பேசினார். பின்னர் பேசவந்தார் குமாரர். அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் எம்.பி.கள் தமிழர்களே அல்ல எண்டு சொல்ல சனம் எழுந்து நின்று கைதட்டிய காட்சியை மட்டும்தான் குமாரர் கண்டிருப்பார். தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்திருந்தால் இரண்டுபேர் அசடு வழிய வழிய அமர்ந்திருந்ததையும் கண்டிருக்கலாம். மலைப் பகுதி தனித்துவக் கட்சிகள் இரண்டும்கூட அவசரகாலச் சட்டத்துக்கு கை உயர்த்துறவைதானுங்கோ.. என்னதான் இருந்தாலும் உப்பிடியோ அடிக்கிறது?

**தலைநகர தமிழ் பத்திரிகை ஒன்று** கூட்டான கட்சியினரை காப்பாற்றும் பணியில் மறைமுகமாக ஈடுபடுகிறதாம். கொழும்பு கூட்ட சலசலப்பைக்கூட வெளியிடாமல் அமுக்கினதும் சனம் கிளர்ந்தெழுந்த அதுக்குத்தானோ எண்டும் தெரியேல்லை. மணலாறு (வெலி ஓயா) விடயத்தில் சீட்டணிக்கு (காதிலை பூ கந்தசாமி பெயரை மாற்றிப் போட்டார்) மேலிடத்தில் சொல்லப்பட்ட பதில் மழுப்பல்தானாம். வடக்கு-கிழக்கு இணைப்பு, எல்லைகள் சீரமைப்பு விவகாரத்தில் தம்மிடம் சில கருத்துக்கள் உண்டு. பின்னர்தான் சொல்வோம் எண்டுதான் அதிகாரத்தரப்பார் கூறியிருக்கினம். அதற்குள் மணலாறு (வெலி ஓயா) விஷயமும் அடக்கமுங்கோ. அதைச் சீட்டணி வெளியே சொல்லவில்லை. முச்! இந்த இலட்சணத்திலை வெலி ஓயா விவகாரத்திலை உரமாகக் கதைச்ச மாதிரி செய்திகள் வருகுதெண்டா கொஞ்சம் ஆராயப்பட வேண்டிய விஷயம்தானே!

**எதிரணித் தலைவர்** நல்லா விளையாட்டுக் காட்டுறார். அவர் எல்லாருக்கும் அல்வா கொடுக்கிறாருங்கோ. பிரிட்டனுக்கு அவர் போனால் என்ன, வந்தால் என்ன; முட்டுக்கட்டை போடுறது போடறதுதான். தான் அங்கே போறது முக்கிய சமாச்சாரம் மாதிரி மர்மமாக செய்தி சொல்லி ஊகங்களைக் கிளப்பிப் போட்டு பயணம் போறார் மனுசன். இனி ஆளாளுக்கு விமர்சனம் பண்ணுவினம். தமிழ்க் கட்சிகள் வரவேற்று அறிக்கை விட, இதோ வாக்கியம் ரெடி: "இனப் பிரச்சனைத் தீர்வில் எதிரணித் தலைவரின் பிரிட்டன் விஜயம் ஒரு வரப்பிரசாதம்- திருப்பம். புலிகளோடு பேச நடத்தப்பட்ட இப் பயணத்தை நாம் வரவேற்கிறோம்!"

**மீன்பாடும் தேனாட்டின்** இசைக்கல்லூரி இழுபறிக்குள் ஒரு ருசியான சங்கதி கேள்விப்பட்டனான். விரிவுரையாளர்களுக்குள் போட்டியாம். போட்டி மட்டுமல்ல, பொறாமையுமாம். ஒரு விரிவுரையாளருடன் மாணவ மாணவிகள் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டால் மற்ற விரிவுரையாளருக்கு வயிறு பற்றி எரியுமாம். குறிப்பிட்ட மாணவ-மாணவிகளை பழிவாங்குவாராம். பொதுவாக பெண் விரிவுரையாளர்கள்தான் இதில் முன்னணியில் நிற்கினமாம்.

**திருவான மலை** சபைக் கூட்டத்தில் குழப்பம். உறுப்பினர் ஒருவர் எழுந்து மரியாதை செய்யவில்லை எண்டு சூரியர் சத்தம் போட உறுப்பினரும் பதிலுக்குக் கத்தினாராம். "டேய் 12 மணி நேரத்திலை உன்னை மண்டையில் போடுவேனடா!" எண்டாராம் சண்டியச் சூரியர். உறுப்பினர் வெகு சாகவாசமாகச் சொன்னராம்: "போடா டேய் 12 மணி நேரம் என்ன, 24 மணி நேரம் தாறேன், முடிஞ்சா போடு பார்க்கலாம்!" உடனே சூரியர் ஓர் இயக்கப் பெயரைச் சொல்லி மிரட்டினாராம். அங்கிருந்த அந்த இயக்க உறுப்பினர் சொன்னாராம்: "நீ சொல்லி செய்யுமளவுக்கு நாங்கள் இல்லையடா டேய்!" சூரியர் முகம் அஸ்தமித்துப் போச்சுதாம். (ஆஹா என்ன ஒரு ஜனநாயக- மரியாதையான வார்த்தைப் பிரயோகங்கள்!!)

**பாம்பாட்டிச் சித்தர்** பாடுவதைக் கேளுங்கோ.

"பஞ்சணையும் பூவணையும் பாய லும் வெறும்
பாழ்ச்சுடு காடதிலே பயன் பெறுமோ?
மஞ்சள் மணம் போய்ச்சுடு நாறு மணங்கள்
வருமென்று தெளிந்து நின்று ஆடுபாம்பே"


படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



# பிரபாவின் கண்கட்டி வித்தை!
## தேடியவர்களும்-தேடப்பட்டவரும்!



## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### பிரபாவுக்கு நிபந்தனை

புலிகள் வன்னிக்காட்டுக்குள் இருந்த போது சுவையான போட்டிகளும் அவர்களுக்குள் நடப்பதுண்டு.

எந்த மாதிரியான சூழ்நிலையிலும் இயக்கத்தின் கட்டுப்பாடு, போர்க்குணம் என்பவற்றை தளராமல் வைத்திருப்பவர் பிரபாகரன். அதேவேளையில் இயக்க உறுப்பினர்களுடன் கலகலப்பாகவும் நடந்துகொள்வார்.

தமிழ்நாட்டிலிருந்து படகுமூலம் வன்னிக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்த தமிழ்நாட்டு தமிழர் குளத்தூர்மணி.

தமிழ்நாட்டில் தனது சொந்த நிலத்தை புலிகள் இயக்கத்தினர் பயிற்சி முகாம் அமைக்க கொடுத்து உதவியவர் அவர்.

இந்தியப்படையின் சுற்றிவளைப்பில் வன்னிக்காட்டில் இருந்த பிரபாகரனை எப்படியாவது சந்தித்துவிடும் ஆவலில் வன்னிக்காட்டுக்கு போய்ச் சேர்ந்தார் குளத்தூர் மணி.

அங்கு நேரில் கண்ட காட்சி ஒன்றை பின்னர் விபரித்திருந்தார் மணி.

ஓரிடத்தில் கைப்பற்றப்பட்ட முப்பது வகையான துப்பாக்கிக் குண்டுகள் ஒரே இடத்தில் வைக்கப்பட்டன.

"இந்தக் குண்டுகள் ஒவ்வொன்றும் எந்தெந்தத் துப்பாக்கிக்குச் சொந்தமானவை என்பதை பார்த்த உடனேயே தெரிவிக்க வேண்டும்" என்று கூறினார் பிரபாகரன்.

கூடியிருந்த புலிகள் மகிழ்ச்சியுடன் சம்மதித்தனர். தானும் இப்போட்டியில் கலந்து கொள்ளப்போவதாகப் பிரபாகரன் தெரிவித்தார். உடனே மற்றவர்கள் அவருக்கு ஒரு நிபந்தனை விதித்தனர்.

அவர் கலந்துகொள்வதானால் கண்களைக் கட்டிக்கொண்டு, கையால் தொட்டுப்பார்த்துத்தான் கூற வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர்.

பிரபாகரனும் அதற்குச் சம்மதித்தார்.

பலவகையான குண்டுகள் அங்கு பரப்பி வைக்கப்பட்டன.

தனது கண்களைத் துணியால் கட்டிக் கொண்டார் பிரபாகரன்.

கையால் ஒவ்வொரு குண்டாகத் தொட்டுப் பார்த்து, அது எந்தத் துப்பாக்கிக்கு உரியது என்பதை இம்மியளவு கூடப் பிசகாமல் சரியாகக் கூறினார் பிரபாகரன்.

எல்லோரும் கைதட்டிப் பாராட்டினார்கள். பின்னர் பிரபாகரன் குளத்தூர் மணியிடம் கூறினாராம், "அண்ணா என் நிலையைப் பார்த்தீர்களா? எனக்கே நிபந்தனை விதித்துச் சோதிக்கிறார்கள்."

### தமிழக ஆதரவாளர்கள்

இந்த இடத்தில் சில விஷயங்களைக் குறிப்பிட்டாக வேண்டும்.

1986 வரை சகல இயக்கங்களுக்கும் தமிழ்நாட்டில் சிறந்த ஆதரவாளர்கள் இருந்தனர். இயக்க உறுப்பினர்களை தங்கள் சொந்தப் பிள்ளைகளாக, சொந்த சகோதரர்களாக நேசித்தனர்.

பின்னர் ஏனைய இயக்கங்கள் ஈழக் கோரிக்கையை கைவிட்டபின்னர் தீவிரமான ஆதரவாளர்கள் பலர் அந்த இயக்கங்களில் நம்பிக்கை இழந்தனர்.

தமிழ்நாட்டில் ஈழ இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்தவர்களில் இருவிதமான தன்மை கொண்டோர் இருந்தனர்.

முதல்வகையினர் எந்தக் கைமாறும் கருதாமல் தமிழ் இன உணர்வுடன் அரவணைத்தவர்கள்.

இரண்டாவது வகையினர் தமிழ்நாட்டில் தமது அரசியல் நோக்கத்தை சார்ந்து நின்று ஆதரவு தெரிவித்தவர்கள்.

ஆயினும் முக்கிய அரசியல் கட்சிகளுக்குள்ளும் ஈழத் தமிழர் பிரச்சனையில் தன்னலம் இன்றி செயற்பட்டவர்களும் இருக்கிறார்கள். அன்று தி.மு.க.வில் இருந்த இன்றைய ம.தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமியை அதற்கு உதாரணம் சொலலலாம்.

இதிலே புலிகளின் தனித்துவம் என்னவென்றால் தங்களுக்கு ஆதரவளிப்பவர்கள் பற்றிய குணாம்சங்கள் தொடர்பாக தெளிவாக இருந்ததுதான்.

தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர். பிரபாகரன்மீது பேரன்பு கொண்டு மாபெரும் உதவிகளைச் செய்தார். எம்.ஜி.ஆருக்கு மதிப்பு கொடுத்தாலும்கூட நீண்டகால நோக்கில் தம்மோடு தமிழ்நாட்டில் ஒத்துழைக்கக் கூடிய சக்திகளையும் புலிகள் இனம் கண்டு உறவுகளை வைத்திருந்தனர்.

இந்தியப் படைகாலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கலைஞர் கருணாநிதி முன்னின்று குரல் கொடுத்தார்.

கலைஞரது ஆதரவை மிகச் சரியான நேரத்தில் பெற்றுக்கொண்ட புலிகள், அதன் வரையறையையும் உணர்ந்தே இருந்தனர். அதனால்தான் தமிழகத்தில் உள்ள இன உணர்வுக் குழுக்களுடன் பலமான உறவினைக் கொண்டிருந்தனர்.

சென்னையில் இருந்த புலிகள் இயக்க அலுவலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர் காஸ்ட்ரோ. திலீபன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க ஈ.பி.டி.பி. சார்பாக சென்ற ரமேஷ் நடராஜா, மு. சந்திரகுமார் இருவரிடமும் காஸ்ட்ரோ சொன்னது இது:

"தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகள் எங்களைப் பயன்படுத்த நினைப்பது எங்களுக்குத் தெரியும். இவர்கள் தங்கள் நலன் நாளை பாதிக்கப்பட்டால் எங்களைக் கைவிடவும் கூடும்தான். ஆனால் உண்மையாகவே இன உணர்வு உள்ளவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களை நாம் நம்புகிறோம்!"

இதனை இந்தக் கட்டத்தில் குறிப்பிடக் காரணம் இருக்கிறது.

புலிகளின் கணிப்புச் சரியென்பதை காலம் உணர்த்தியிருக்கிறது. இப்போது 06.06.97 அன்று தமிழ்நாட்டில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக கறுப்பு நாள் அனுஷ்டிக்க தமிழகத்தின் பலகட்சிகள் முன்வந்துள்ளன அல்லவா.

இந்த முயற்சி முக்கிய கட்சிகள் முன் வந்து செய்த முயற்சி அல்ல. ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவிப்பது புலிகளுக்கு ஆதரவான நிலையாக கருதி தங்கள் நலனுக்கு பாதகம் வந்துவிடுமோ என்று சில முக்கிய கட்சிகள் தயங்கின. அவ்வாறான சூழ்நிலையிலும் தமிழ்நாட்டில் சிறு குழுக்களாக உள்ள இன உணர்வுச் சக்திகள் விடாது மேற்கொண்ட முயற்சியின் விளைவே இதுவாகும்.

### மணியோசை வேண்டாம்

இந்தியப் படையினருக்கு புலிகள் தொடர்பாக இரகசியத் தகவல் கொடுக்க ஆட்கள் இருந்தனர்.

தகவல் கிடைத்து குறிப்பிட்ட இடத்திற்கு இந்தியப் படையினர் சென்றால் அங்கிருந்து புலிகள் அப்போதுதான் வெளியேறிய தடயங்கள் இருக்கும்.

தாங்கள் வருவதை புலிகள் எப்படி அறிகிறார்கள் என்று பல வழிகளிலும் ஆராய்ந்து கொண்டிருந்தனர் இந்தியப் படையினர்.

அந்த ஆராய்ச்சியில் அவர்கள் கண்டுபிடித்ததில் ஒன்று கோவில் மணியோசை.

இந்தியப் படை வருவதாக தெரிந்தால் குறிப்பிட்ட பகுதியில் உள்ள கோவிலில் உள்ள மணியை அடித்து ஓசை எழுப்ப ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் வயதான பெண்களாகவோ, ஆண்களாகவோ இருப்பர்.

அவர்கள் மணியடிப்பது சந்தேகத்தை ஏற்படுத்தாது. பூசைக்காகவோ அல்லது நேரப்படியோ மணி அடிப்பதாக படையினர் நினைப்பர்.

ஆனால் அதுதான் புலிகளுக்கு எச்சரிக்கை மணி. அந்த ஓசை கேட்டதும் புலிகள் தமது மறைவிடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிடுவர்.


தும்பன்

இதனைக் கண்டுபிடித்த இந்தியப் படையினர் சில பகுதிகளில் அங்குள்ள கோயில்களில் மணி அடிப்பதையே தடை செய்திருந்தனர்.

மாலை ஆறுமணியுடன் கோவில்களைப் பூட்டிவிடவேண்டும் என்றும் சில பகுதிகளில் உத்தரவு போடப்பட்டிருந்தது.

புலிகளும் கோவில்களிலும், மண்டபங்களிலும் இரவில் தங்கினார்கள். சிறு சிறு குழுக்களாகவே நடமாடினார்கள்.

தனிநபர்களாக நடமாடி இந்தியப் படையினருக்குத் தகவல் கொடுப்போரையும், இந்தியப் படையுடன் இணைந்து செயற்படும் இயக்க உறுப்பினர்களையும் தீர்த்துக் கட்டுவதிலும் ஈடுபட்டார்கள்.

### திண்டாட்டம்

பாடசாலை மாணவ, மாணவிகள் போலவும், மற்றும் பல்வேறு ரூபங்களிலும் புலிகள் நடமாடியதால் இந்தியப் படையினர் புலிகளை இனம் காணமுடியாமல் திண்டாடினார்கள்.

கட்டுமஸ்தான உடல் கொண்ட ஆண்களையோ, பார்வைக்கு துடிதுடிப்பாகத் தெரியும் பெண்களையோ கண்டால் இந்தியப் படையினருக்கு சந்தேகம் ஏற்பட்டுவிடும்.

அதனால் திடகாத்திரமான தேகம் உடைய ஆண்கள் உள்ள குடும்பத்தினருக்கு தினமும் நடுக்கம்தான்.

புலிகள் என்றால் பலசாலிகளாக பார்வைக்கு முரட்டுத்தனமாக இருப்பார்கள் என்பதுதான் இந்தியப் படையினரின் கணிப்பு.

அந்தக் கணிப்பால்தான் இந்தியப் படையினரின் கண்களில் புலிகளும் சுலபமாக மண்ணைத்தூவிக் கொண்டிருந்தனர்.

பார்வைக்கு அப்பாவிகள் போலவும், சிறு வயது உடையவர்களாகவும் தோன்றும் உறுப்பினர்கள் இந்தியப் படையின் 'சென்றிப் பொயிண்டுக்களை' தாண்டிப்போய் தங்கள் காரியத்தை முடித்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்தவர் தும்பன்.

பண்டத்தரிப்பில் மட்டுமல்ல வட்டுக்கோட்டை மானிப்பாய் தொகுதிகளில் யார் கைது செய்யப்பட்டாலும் இந்தியப் படையினர் முதலில் கேட்கும் கேள்வி: "தும்பனைக் கண்டீர்களா?" என்பதுதான்.

பண்டத்தரிப்பு சந்தியில் நின்றனர் இந்தியப் படையினர். விழிப்பாகத்தான் இருந்தனர். அங்குள்ள நகைக்கடையொன்றில் நகைவாங்கச் சென்றார் ஒரு படை வீரர்.

அவர் அருகில் வந்த ஒரு மெல்லிய உடல்வாகு கொண்ட இளைஞன் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவினான். சுட்டான்.

படைவீரர் பலியானார். தும்பன் ஓடி மறைந்துவிட்டான்.

அதன்பின்னர் இந்தியப் படையினரும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் இணைந்து பண்டத்தரிப்பு சந்தியில் நின்ற மக்களைத் தாக்கினார்கள்.

சுதாகர் தலைமையில் வந்த ஈ.பி.ஆர், எல்.எஃப். உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது.

உணர்ச்சிவசப்பட்டவர்களாக நடித்துக்கொண்டு பண்டத்தரிப்பு சந்தியிலுள்ள நகைக்கடைகளுக்குள் புகுந்து சூறையாடினார்கள். அதனைக் கண்ட இந்தியப் படையினர் தடுத்திராவிட்டால் நகைக்கடையை முழுதாக சுத்தம் செய்து முடித்திருக்கும் சுதாகர் கோஷ்டி.

இந்தியப் படையினரால் பயமின்றி நடமாடவே முடியாதளவுக்கு வட்டுக்கோட்டையில் பல தாக்குதல்களை தனிநபராக நின்றும், தனது கெரில்லா குழுவுடன் இணைந்தும் மேற்கொண்டான் தும்பன்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் மானிப்பாய் நவாலியில் இருந்த தனது வீட்டுக்கு வந்திருந்தார் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்க உறுப்பினர் ஒருவர்.

தும்பனுக்கு தகவல் போனது. தனியாளாக சைக்கிளில் வந்தான். சென்றிப் பொயிண்டில் தடுக்கவே இல்லை.

தேடிவந்த ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினரை அழைத்தான். "அண்ணே! அண்ணே" வெளியே வந்தார். பிஸ்டலை உருவி மண்டையில் சுட்டுவிட்டு சைக்கிளில் சென்றுவிட்டான்.

இளவாலை தேவாலயம் அருகே பூசை. மக்கள் திரண்டு நின்றனர். இந்தியப் படையினர் நடமாட்டமும் இருந்தது. தேவாலயம் அருகே வெடிஓசை. ஓடிச்சென்று பார்த்தனர் இந்தியப் படையினர். ஏனைய இயக்க உறுப்பினர் ஒருவர் பலியாகிக் கிடந்தார்.

தனிமனிதனாக நின்று இத்தனை தூரம் துணிந்து செயற்படும் தும்பனை மலைபோன்ற தோற்றத்துடன் கற்பனை செய்துகொண்டு தேடியது இந்தியப்படை.

ஆனால் தும்பனோ மெல்லிய உடல் வாகுடன் எளிமையான தோற்றத்துடன் இடுப்பில் பிஸ்டலுடன் சுற்றித்திரிந்தான்.

பண்டத்தரிப்பு சுற்றிவளைப்பு ஒன்றில் மாட்டினான் தும்பன்.

அவனிடமே விசாரித்தார்கள்;

"தும்பனைத் தெரியுமா?"

"தெரியாது!"

"தெரிந்தால் சொல்லவேண்டும், போ!"

செல்ல அனுமதித்தனர்.

தும்பனின் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

(தொடர்ந்து வரும்)

# வரலாற்றைத் திரிக்கும் பச்சைப்பொய்!

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தமிழர் பணிக்குழு சார்பாக 31.05.97 அன்று கூட்டமொன்று நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக அல்லாமல் தனிப்பட்டரீதியில் திரு. தங்கத்துரை எம்.பி.கலந்து கொண்டு உரையாற்றினார்.

திம்பு மாநாட்டில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் நான்கு அம்சத் திட்டத்தை கூட்டணியே முன்வைத்தது என்று கூறிக்கொள்வதில் பெருமையடைவதாக தங்கதுரை எம்.பி. தெரிவித்தார் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

அவ்வாறு அவர் தெரிவித்திருந்தால் அது அப்பட்டமான பொய் தவிர வேறில்லை.

திம்பு மாநாட்டின்போது நடைபெற்ற சம்பவங்கள் அரசியல் தொடரில் ஏற்கனவே விபரிக்கப்பட்டிருந்தது.

திம்பு மாநாடு நடைபெற்றபோது விடுதலைப்புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எஃப்., ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' (ஈ.என்.எல்.எஃப்.) என்னும் கூட்டமைப்பாக செயற்பட்டன.

திம்புப் பேச்சு தொடர்பான முடிவுகளை எடுக்கும் கூட்டமொன்று சென்னை கோடம்பாக்கம்-வெள்ளாளர் தெருவில் அமைந்திருந்த ஈ.என்.எல்.எஃப். அலுவலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் சார்பாக வே.பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், ராசநாயகம், ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக க.பத்மநாபா, ரமேஷ் நடராஜா, மகேஸ்வரன், ஈரோஸ் சார்பாக வே.பாலகுமார், முகிலன், ரெலோ சார்பாக சிறீ சபாரத்தினம், மதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

திம்பு மாநாட்டில் கலந்து கொள்ள நான்கு இயக்கங்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் உட்பட கூட்டணி மற்றும் புளொட் இயக்கப் பிரதிநிதிகளும் திம்புவில் அப்போது இருந்தனர்.

ஈ.என்.எல்.எஃப். தலைவர்கள் ஒன்று கூடி திம்பு பேச்சில் முன்வைக்க வேண்டிய நான்கு அடிப்படை அம்சங்களைத் தயாரித்திருந்தனர்.


ஆலால்

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்.
2. ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை உண்டு.
3. வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம்.
4. மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்கள்.

மலையக மக்கள் தொடர்பான அம்சமும் அடிப்படைக் கோரிக்கைகளில் ஒன்றாக அமையவேண்டும் என்பதை ஈ.பி.ஆர். எல்.எஃப்., ஈரோஸ் அமைப்புக்கள் வலியுறுத்தியதன் பேரிலேயே சேர்க்கப்பட்டன.

புளொட் அமைப்பு கூட்டமைப்பில் இல்லாதபோதும் மேற்குறிப்பிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகள் விடயத்தில் தனக்கும் உடன்பாடு என்றும், திம்புவில் அதனையே அடிப்படைக் கோரிக்கைகளாக- தமிழ் அமைப்புக்களின் ஒரே நிலைப்பாடாக முன்வைக்க இணங்குவதாகவும் தெரிவித்தது.

எனவே கூட்டணிதான் திம்புவில் ஏதாவது வம்பு செய்யும்; குறுக்கு ஓட்டங்களில் ஈடுபடும் என்று நான்கு இயக்கங்களும் கருதின.

எனவே திம்புவில் இயக்கங்கள் முன்வைக்கும் திட்டத்துக்கு மாறாக நடக்கக்கூடாது என்று கூட்டணிக்கு இறுதியான முடிவாக தெரிவிப்பது என்று ஈ.என்.எல்.எஃப். கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திரு.அமிர்தலிங்கம் திம்புவில் இருந்ததால் சென்னையில் இருந்த யோகேஸ்வரனுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக ஈ.என்.எல்.எஃப் அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தார் வே.பாலகுமார்.

தனியாச் செல்ல யோகேசுக்கு தயக்கம்.

"உடனேயே வருகிறேன்; திரு.தங்கத்துரையும் இருக்கிறார். அவரையும் அழைத்து வரவா?" என்று கேட்டார் யோகேஸ். அழைத்துவரலாம் என்று சொன்னதால் இருவரும் ஓட்டோவில் வந்து சேர்ந்தனர்.

அன்ரன் பாலசிங்கம்தான் ஈ.என். எல்.எஃப். முடிவை இருவரிடமும் தெரிவித்தார்.

"திம்புவில் நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்ட திட்டத்தை நாம் முன்வைக்கப் போகிறோம். அதற்கு மாறாக வேறு எந்த திட்டத்தையும் முன்வைக்கக் கூடாதென்று அமுதரிடம் சொல்லுங்கள்!" என்று தன் விளக்கத்தின் இறுதியில் கூறினார் அன்ரன்.

அப்போது குறுக்கிட்ட சிறி சபாரத்தினம்;

"எங்களுக்கு மாறாக திம்புவில் அமுதர் பேசுவதாக இருந்தால், அங்கிருந்து திரும்பி வரும் யோசனையை விட்டுவிடச் சொல்லுங்கள்!" என்றார்.

யோகேஸ் ஆடிப்போனார்.

"அமிர் அண்ணா ஒருநாளும் உங்களுக்கு விரோதமாகப் போகமாட்டார் நம்புங்கள்" என்றார் யோகஸ்.

"நம்புவதும் நம்பாததும் திம்புவில் அவர் நடந்துகொள்வதைப் பொறுத்தது!" என்றார் பிரபா.

சமாதானம் செய்துவிட்டு போயினர் யோகேஸ்வரனும், தங்கத்துரையும்.

அந்த எச்சரிக்கையும் போதாது என்றுதான், யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலால சுந்தரம், தர்மலிங்கம் ஆகியோரை ரெலோ இயக்கத்தினர் கடத்திச் சென்று கொலை செய்தனர்.

இன்று வரலாற்றைத் தலைகீழாகப் போட்டிருக்கிறார் திரு.தங்கத்துரை எம்.பி.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் வருவதற்குக் காரணமும் தாங்கள்தான் என்று முன்னர் உரிமை கோரியவர்களும் கூட்டணியினர்தான்.

ஆயிரமாயிரம் இளைஞர்களின் வீரம் செறிந்த போராட்டங்களின் பயன்களை கௌரவிக்காவிட்டாலும், கறைப்படுத்தாமலாவது இருக்கலாம் அல்லவா?

தமிழர்கள் உணர்ச்சி வசப்படுவதுதான் இன்றைய நிலைக்குக் காரணம் என்றும் சொல்லியிருக்கிறார் திரு.தங்கத்துரை.

உணர்ச்சி இல்லாத மனிதன் ஜடம். ஆனாலும் தமிழர்களின் உணர்ச்சியுடன் விளையாடி வாக்கு அறுவடை செய்தவர்கள் யார், என்பதையும் வரலாறு அடையாளம் காட்டுகிறது.

காசி ஆனந்தனை உணர்ச்சிக் கவிஞர் என்று பட்டம் கொடுத்தவர்கள் கூட்டணியினர்தானே? (அன்று உணர்ச்சி தேவையாக இருந்ததோ?)

தளபதி, எல்லைக் காவலர், உடுப்பிட்டிச் சிங்கம், மூதூர் காவலர், அடலேறு என்று உணர்ச்சியைத் தூண்டும் பட்டங்கள் சூட்டிக்கொண்டவர்களும், கூட்டணித் தலைவர்களும் பிரமுகர்களும் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயக்கங்கள் எதுவும் தமக்குள் யாருக்கும் அப்படிப் பட்டம் சூட்டியதில்லை என்பதும் உண்மை.



வாரமலர் தினமுரசு

ஜூன்.08–14,1997

படிப்பகம்

www.padippakam.com

# யுத்தம்புரிய ஆளில்லாமல் திண்டாடும் அரசு!

## வெற்றி நிச்சயமில்லாத வியூகங்கள்!

அலசுவது- இராஜதந்திரி



'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை ஒரு தடம் புரண்ட ரயில் வண்டி போலாகியுள்ளது. முன் கூட்டியே திட்டமிடப்பட்ட தடத்தில் தங்கு தடையின்றி முன்னேற இயலாமல் பலத்த அடிகளையும் பட்டுள்ளது.

வன்னியில் 'வாகை' சூடுவதென 20 ஆயிரம் துருப்பினருடன் 'ஜயசிக்குறுய்' ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உயிரிழந்தோரும், காயமடைந்தோருமாக ஆயிரக்கணக்கான இழப்புக்களை அந்நடவடிக்கை சந்தித்தது.

சில வருடங்களுக்கு முன்னர் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்ற இராணுவ நடவடிக்கை ஆனையிறவிலிருந்து வடக்கே தென்மராட்சி நோக்கி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அப்போது இராணுவத்தளபதியாக இருந்தவர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன. ஆயிரக்கணக்கான துருப்பினர் கனரக வாகனங்கள் சகிதம் 'யாழ்தேவி' ஒப்பரேஷனில் ஈடுபட்டனர். ஆனால் அம்முயற்சியில் பெரும் இழப்பையே அவர்களால் எதிர்கொள்ள முடிந்தது.

புலிகளால் டாங்கிகள், கவச வாகனங்கள் என்பன அப்போது அழிக்கப்பட்டன. அத்துடன் பெருமளவில் படைவீரர்களும் கொல்லப்பட்டனர்.

அடர் காடு சார்ந்த பகுதியாக இல்லாவிட்டாலும் முன்னேறிய படையினரை புலிகள் கெரில்லா உத்திகள் மூலம் எதிர்கொண்டு தடுத்து நிறுத்தினர்.

வன்னியில் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் கூட பெருமளவு இழப்புக்களுடன் அரச படையினர் காணப்படுகின்றனர்.

ஓமந்தை வரை முன்னேறியுள்ள படையினர் அதற்கப்பால் குறிப்பிட்டளவு நகர முடியாத நிலைக்கு புலிகளின் எதிர்ப்பு யுத்தம் கடும் உக்கிரமாயிருந்தது.

படையினரை உள்ளே வரவிட்டுத் தாக்குதலைத் தொடுப்பதே தமது உத்தியாக இருக்குமென்று புலிகள் அறிவித்திருந்தனர். அதற்கமைவாகவே படையினர் தரப்பில் பலத்த தாக்கத்தையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

புவியியல் ரீதியாக வன்னிக் காடுகள் குறித்து தென்னிலங்கையில் உள்ள பெரும்பாலான சிங்கள மக்களுக்குப் போதிய தெளிவின்றி உள்ளது.

வன்னிக்காடுகள் என்னும்போது அவற்றை சிறிய பற்றைக்காடுகள் என்றே அவர்கள் அறிந்து வைத்திருப்பதுடன், அப்பற்றைக் காடுகளை அழித்து விட்டால் புலிகளின் மறைவிடங்களை இலகுவில் இனங்கண்டு விடலாம் என்று எண்ணுவோரும் அவர்களிடையே உள்ளனர்.

ஆனால் இராணுவத்தில் போரிடுவதைவிட ஊதியம், மற்றும் சலுகைகள் பற்றிய விளம்பரங்களால் கவரப்பட்டு இணைந்த பெருமளவிலான இளைஞர்கள் வன்னிக்காடுகளைக் கண்டு மலைத்தவர்களாக யுத்த முனைகளிலிருந்து ஓட்டம் பிடிக்கின்றனர் என்று தகவல்கள் வருகின்றன.

அடர்ந்து, படர்ந்த மரங்களைக் கொண்டுள்ளதே வன்னிக் காடுகளாகும்.

வன்னிக்கு ஊடாக கிளிநொச்சியையும், வவுனியாவையும் இணைக்கும் கண்டி வீதி நெடுஞ்சாலை இல்லையானால் இப் பிரதேசத்தினுள் நுழைவதே பெரும்பாடாகிவிடும்.

இந்நிலையில் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுப்பது இலங்கையின் ஆயுதப்படையை முற்றாகவே அழித்தொழிக்கும் ஒரு முயற்சியாகவே அமையும்.

இராணுவத்தில் ஆட்பற்றாக்குறை நிலவுவதையடுத்து, கடற்படையினரையும் தரைப்படை யுத்தத்துக்குப் பயன்படுத்தியிருந்ததை இத்தடவை நோக்க முடிந்தது. இதுதவிர, பொலிஸாரையும் ஈடுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

ஆண் பொலிஸாரை யுத்தமுனைக்கு அனுப்பும் அதேசமயம், பெருமளவு பெண்களைப் பொலிஸ் படைக்குச் சேர்த்து சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முயற்சிக்கப்பட்டது.

ஆனால் இது தொடர்பாக பொலிஸ்வட்டாரங்களில் பெரும் அதிருப்தி வெளியிடப்பட்டதுடன் நாட்டில் பொலிஸார் வேலை நிறுத்தத்தில் குதிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் 48 பில்லியன் ரூபாக்களாகும். எனவே தனி ஓர் இயக்கமாக நின்று போரிடும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை அரசு ஒதுக்கியுள்ளது. இருந்த போதிலும் எல்.ரி.ரி.ஈ.அமைப்பை முழு அளவில் வேரறுக்க முடியாதுள்ளதென்பதையே வன்னிக் கானக ஊடுருவல் உணர்த்தியுள்ளது.

வன்னியில் வெடித்த ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின்மூலம் தன்னிடம் தற்போதுள்ள பலத்தையே இராணுவம் தப்ப வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது.

குறுகிய காலப்பயிற்சியுடன் ஆயுதங்களைக் கொடுத்து இளைஞர்களை யுத்த முனைக்கு அரசு அனுப்பி வருகின்றது.

இத்தகைய இராணுவ செயற்பாடுகள் வியட்நாமில் அமெரிக்கா மேற்கொண்ட பிரயத்தனங்களை ஒத்ததாகவே இருக்கின்றது.

அமெரிக்காவின் இளைஞர்கள்- வியட்நாமில் முடிவில்லாத யுத்தத்துக்குக் காவு கொடுக்கப்பட்டுவந்ததை அமெரிக்கர்கள் அன்று பெருமளவில் எதிர்த்தனர். பல்வேறு உலக நாடுகள் கூட அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்தைக் கண்டித்திருந்தனர்

ஆனால் தென்னாசியப் பிராந்தியத்தில் வியட்நாமிய யுத்தத்தின் பின்னர் நீண்டு சென்று கொண்டிருக்கும் ஒரு கொடிய யுத்தம் இன்று இருக்குமானால், அது இலங்கையின் உள்நாட்டு யுத்தமாகவே இருக்கமுடியும்.

பணத்தையும், உயிரையும் தாரை வார்த்து இலங்கை அரசு இந்த முடிவில்லாத யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது.

வெளி உலகுக்கு இலங்கையின் இன்றையக் கொடிய யுத்தம் சார்ந்த பிரச்சினையை ஓர் உள்நாட்டு சமாச்சாரமாகவே இலங்கை அரசு காட்டிக் கொள்கின்றது.

ஆனால் இந்த யுத்தத்தை நடத்துவதற்கான பணம், பண்டங்கள் என்பன, ஏதோ ஒரு விதத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வெளிநாடுகளிலிருந்தே பெறப்பட்டு வருகின்றன. அண்மையில் பாகிஸ்தானைச் சேர்ந்த இராணுவ நிபுணர்கள் அநுராதபுரம் சென்று தங்கியிருந்து ஆலோசனைகளைப் படையினருக்கு வழங்கியிருந்தனர்.

இதன்பின்னரே ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை தொடங்கியிருந்தது.

எனவே வெளிநாட்டவருக்கு இது அவசியம் நடத்தப்பட வேண்டிய ஒரு யுத்தம் என்ற வகையிலேயே இலங்கை அரசு நடந்து கொள்கின்றது.

ஆனால் இதுவோர் அநாவசியமான யுத்தமென்பதே நாளுக்கு நாள் நிரூபணமாகி வருகின்றது. அத்துடன் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைமூலம் எவருக்குமே இன்றைய யுத்தம் பயனளிக்கப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டுள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினரைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் குதித்து அரசு தன்னைப் பலவீனப்படுத்த எத்தனிப்பதையே அவதானிக்க முடிகின்றது.

திட்டவட்டமாக எல்.ரி.ரி.ஈ.யினரது பலத்தை எடைபோட முடியாத நிலையில் அவர்களையும், அவர்களது முகாம்களையும் தேடிச் சென்று அழிக்கும் முயற்சியில் படையினரால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாததாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றி கிளிநொச்சிவரை படையினர் முன்னேறியுள்ள நிலையில் வன்னிக்காடுகளே எதிர்காலத்தில் புலிகளின் நிரந்தர மறைவிடங்களாக இருக்கப்போகின்றன.

இந்நிலையில் ஓமந்தைவரை முன்னேறியுள்ள படையினர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியே பெரும் குழப்பமான மனநிலையில் காணப்படுகின்றனர்.

இதுவரை, ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் ஓமந்தை வரையும், வடகிழக்கே நெடுங்கேணிவரையும் முன்னேறிய இடங்களிலிருந்து படையினர் பின்வாங்கிவிடப் போவதில்லை. அங்கிருந்து முன்னேறும் நடவடிக்கைகள் தொடர்பாகவே படையினர் மத்தியில் முன்னர்போல் வேகம் காணப்படாதிருக்கும்.



எல்.ரி.ரி.ஈ.யினரும் படையினர் எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களை நன்கு அனுமானித்து தமது புதிய வியூகங்களை வடிவமைக்கவே செய்வர்.

வன்னி யுத்த நடவடிக்கையான ஜயசிக்குறுய், ('வெற்றி நிச்சயம்') எத்தரப்பிலும் வெற்றியை நிச்சயப்படுத்தவில்லை; நிச்சயப்படுத்தப்போவதுமில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இருந்தபோதிலும் ஜயசிக்குறுய் ஒன்றை மட்டும் நிர்ப்பந்தப்படுத்திவிட்டுள்ளது. அரசாங்கமும், புலிகளும் போர் நிறுத்தமொன்றுக்கு அவசியம் வரவேண்டியதையே யுத்த அழிவுகள் மூலம் ஜயசிக்குறுய் எடுத்தியம்பியுள்ளது. இரு தரப்பும் தத்தம் பலத்தை உணர்ந்துகொள்வதுடன், மனித அழிவுகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

சண்டை முனைகளில் வெற்றி தோல்விகள் கைமாறினாலும்கூட யுத்தத்தில் இறுதி வெற்றி என்பது இரு தரப்புக்கும் சாத்தியப்படப்போவதில்லை.

இந்த உண்மை நிலையின் அடிப்படையில் எல்.ரி.ரி.ஈ.யினருடனான பேச்சுக்களை நடத்துவது உட்பட அரசியல் அணுகுமுறைகளை அரசு துரிதப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமே தோன்றியுள்ளது.

# தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு திறந்த மடல்

தமிழ்க் கட்சிகளே! தமிழ்க் கட்சிகளே!

தனியாகவும், கூட்டாகவும் போர் நிறுத்தம் கோரி நீங்கள் முடிவு செய்ததாக பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது.

போர் தொடங்கிய செய்தி வரும் முதல் நாள். தமிழ்க்கட்சிகள் போர் நிறுத்தம் கோருவதாகச் செய்தி வரும் மறுநாள். பழைய பத்திரிகைகளைப் புரட்டினால் அந்த உண்மை கருத்தில் படும்.

மங்களம் என்றால் வாழ்த்துவதும், இழவு வீட்டில் துக்கம் விசாரிப்பதும் சம்பிரதாயம். அதுபோலத்தான் போர் என்றால் போர் நிறுத்தம் கோருவதும் சம்பிரதாயமாகி விட்டது.

வாழ்த்துவோர் எல்லாம் மனம் திறந்து வாழ்த்துவதும் இல்லை. துக்கம் தெரிவிப்போர் எல்லாம் உள்ளபடியே துயர் அடைவதும் இல்லை.

ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

அல்பிரட் துரையப்பாவை துரோகி என்றார்கள் கூட்டணியினர். ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது துரையப்பா சுடப்பட்ட செய்தி தந்தை செல்வாவுக்கு சொல்லப்பட்டதாம். அருகில் இருந்த ஒரு பிரமுகரின் காதோடு சொன்னாராம் தந்தை செல்வா: "எங்கள் பொடியன்கள் தான் செய்திருப்பார்கள்."

துரையப்பாவை சுட்டது யார் என்பது தளபதி அமுதருக்கும் தெரியும். தட்டிக் கொடுத்தார்களே தவிர தப்பு என்று சொன்னதில்லை.

ஆனால் துரையப்பா கொலையை கண்டித்து கூட்டணியினர் அறிக்கை விட்டனர். சின்னதாக ஒரு அனுதாபமும் தெரிவித்திருந்தனர்.

அதுதான் சாணக்கியம் என்று அன்று சொல்லப்பட்டது. இது பழைய வரலாறு.

எனவே அறிக்கைகளை வைத்து எந்த ஒரு முடிவுக்கும் வந்துவிடமுடியாது. கண்டனம் எல்லாம் கண்டனமுமல்ல. அனுதாபம் எல்லாம் அனுதாபமும் அல்ல. சாணக்கியம், சம்பிரதாயம், அரசியல் தந்திரம் என்று பல காரணங்கள் இருக்கலாம்.

போர் நிறுத்தம் கோரும் அறிக்கைகளும் அப்படித்தான் மாறிவிட்டன.

போர் நிறுத்தம் கேட்பதால் போர் நிறுத்தப்படப் போவதில்லை என்று தெரிந்து கொண்டே நீங்கள் கோரிக்கைவிடுப்பதால், போர் நிறுத்தப்படாததையிட்டும் நீங்கள் வருத்தப்படுவது கிடையாது.

அப்படி வருத்தப்படுவதாக இருந்தால் போர் நிறுத்தக் கோரிக்கை மறுக்கப்பட்டால், அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கை என்னவென்று நீங்கள் முன்கூட்டியே முடிவு செய்திருப்பீர்கள்.

போர் நிறுத்தம் கோருவதுமூலம் தமிழ்க் கட்சிகள் போரை விரும்பவில்லை என்று உலகம் உணருமல்லவா என்றொரு வாதம் உங்களிடம் இருக்கலாம்.

தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டும்தான் உங்கள் போர் நிறுத்தக் கோரிக்கைகள் பெரிதாக பிரசுரமாகின்றன என்பது உங்களுக்கே தெரியும்.

அது ஒரு புறமிருக்க, உங்கள் போர் நிறுத்தக் கோரிக்கையை உலகம் கேலியாகத்தான் நோக்கும். ஏனெனில் முன்னுக்குப்பின் முரண்பட்ட நிலைப்பாடுகளையல்லவா நீங்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைய யுத்தம் வெறுமனே ஆயுத பலம் சார்ந்த ஒன்றாக மட்டும் அரசால் முன்னெடுக்கப்படவில்லை.

முன்னைய அரசாங்கங்கள் செய்ய முடியாத, நினைத்தே பார்த்திராத மிகப் பாரிய படை நடவடிக்கைகளை இன்றைய அரசாங்கத்தால் முன்னெடுக்க முடிகிறது.

அதற்கு காரணம் என்ன?

உயிரழிவுகள், உடமை அழிவுகள் பற்றியே ஒரு கவலையும் இல்லாமல், உலக அபிப்பிராயம் பற்றியும் தயக்கம் கொள்ளாமல் படை நடவடிக்கைகள் திட்டமிடப்படுவதற்கு தீர்க்கமான காரணம் இருக்கிறது.

உலக அபிப்பிராயம் இன்றைய அரசாங்கத்தின் பக்கம் இருக்கிறது.

போர் செய்வதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. என்பதை உலகம் ஒப்புக்கொள்ளச் செய்யக்கூடிய சில துருப்புச் சீட்டுக்கள் அரசின் கையில் இருக்கின்றன.

அவையாவன:

1. நியாயமான அரசியல் தீர்வுத் திட்டத்தை முதன் முதலில் முன்வைத்தோம் என்று கூறுவது.
2. புலிகள் தவிர்ந்த தமிழ்க் கட்சிகளுக்கும் அரசுக்கும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பல இணக்கங்கள் ஏற்பட்டு வருவதாக சித்தரிப்பது.
3. ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசின் தீர்வு முயற்சியை ஆதரிப்பதால், புலிகள் மட்டுமே போர் வெறியுடன் தனித்து நிற்பதாக தோற்றப்பாடு காட்ட முடிவது.
4. தமிழ்க் கட்சிகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான எதிரும் புதிருமான நிலைப்பாடு.

இதிலே நாலாவது காரணத்திற்கு நீங்கள் மட்டும் பொறுப்பல்ல என்பது உண்மைதான்.

ஆனால், ஏனைய மூன்று காரணங்களுக்கும் உங்கள் ஒற்றுமையின்மை, காலத்துக்கு ஏற்ற அரசியல் வியூகத்தை வகுக்கக் காட்டும் தயக்கம் போன்றவையே முக்கிய காரணங்கள் என்பதை மறுக்க முடியாது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து தீர்வு யோசனை சமர்ப்பித்தீர்கள்.

இதுவரை அந்த யோசனையில் ஒன்று கூட பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் ஆராயப்படவும் இல்லை. இனிமேல் ஆராயும் யோசனையும் இல்லை என்பதை உங்களால் மறக்க முடியுமா?

எங்கள் தீர்வு யோசனைகளை ஏன் கிடப்பில் போட்டிருக்கிறீர்கள்? எடுத்து ஆராயவேண்டும். ஒரு காலவரையறைக்குள் அடிப்படை கோரிக்கைகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும் என்று உங்களால் வற்புறுத்த முடிந்ததா?

அப்படி வற்புறுத்த முடிந்திருந்தால் இத்தனைகால இழுத்தடிப்பு சாத்தியமாக இருந்திருக்குமா?

அரசியல் தீர்வு முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படுவதாக உலக அரங்கில் உரைக்க முடிந்திருக்குமா?

போர் ஒன்றின் மூலமாக புலிகளை முற்றாக பலவீனமாக்கும் அவசியம் அரசுக்கு இருக்கிறது. அதனை அரசு மறைக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

உங்களுக்கும் அந்த அவசியம் உண்டா இல்லையா? என்பதை திறந்த மனதுடன் முடிவு செய்யுங்கள். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று நீங்கள் இரண்டு தோணிகளில் கால்வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதனால் அரசும் உங்களை நம்பாமல் அலட்சியம் செய்ய ஆரம்பித்துவிட்டது. உங்களை சந்தர்ப்பவாதிகள் என்று முடிவு கட்டிவிட்டால் மரியாதை இருக்குமா? தேவையானபோது ஏதாவது கொடுத்தால் போதும் என்றுதானே நினைத்துக் கொள்வார்கள்.

நீங்கள் ஆயுதம் ஏந்தி செயற்படவேண்டும் என்றோ, எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில் அரசுடன் மல்லுக்கு நிற்கவேண்டும் என்றோ சொல்ல வரவில்லை.

தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் இத்தனை இழப்புக்களின் பின்னரும் ஒரு கௌரவமான தீர்வை எட்டமுடியாமல் போனது. அதற்கு தமிழ்க்கட்சிகளும் துணை போனது என்ற நிலையை ஏற்படுத்திவிடாதீர்கள்.

புலிகள்தான் எங்களை பலவீனமாக்கினார்கள் என்று நீங்கள் கூறுவது ஏற்க முடியாத வாதம். ஏனெனில் ஆயுதரீதியாக வேண்டுமானால் உங்கள் பலவீனத்துக்கு புலிகளை காரணம் சொல்லலாம். ஆனால் அரசியல் ரீதியாக நீங்கள் பலமாக உருவாகவும், அதன்மூலம் உங்களை புலிகள் நிராகரித்தது தவறு என்பதை மக்களுக்கு நிரூபிக்கவும் உங்களுக்கு பல சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன.

வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் நீங்கள் இருக்கிறீர்கள்.

அங்கெல்லாம் உங்கள் அரசியல் அணிகளை பலப்படுத்த உங்களுக்கு வாய்ப்பு இருந்தது.

தேர்தலில் போட்டியிடவும், பிரசாரம் செய்யவும் உங்களால் முடிகிறது என்றால், அங்கேயெல்லாம் அரசியல் பலத்தை கட்டியெழுப்ப மட்டும் புலிகள் தடையாக இருப்பதாக சொல்ல முடியாதல்லவா.

உலக ஆதரவு பலவீனம், பல பகுதிகள் கைவிட்டுப் போயின, யாழ் குடாநாடே கைவிட்டுப்போனது. அப்படியிருந்தும் தமது பலத்தை புலிகளால் தக்கவைக்க முடிகிறதே, புலிகளை மட்டுமே காரணம் கூறிக்கொண்டு உங்கள் பலவீனங்களுக்கு நீங்கள் நியாயம் கற்பித்துக் கொண்டிருக்கிறீர்களே, முறைதானா?

கிட்டத்தட்டப் பத்து வருடங்களாகிவிட்டன புலிகளுடன் உங்கள் மோதல்கள் ஆரம்பமாகி! இன்றுவரை உங்களால் ஏன் மாற்றுச் சக்தியாக மாறமுடியவில்லை.

புலிகள் உங்களை பலவீனமாக்கினார்கள். ஆனால் இன்று உங்கள் நிலைத்தலுக்கும் புலிகள் அல்லவா காரணமாக இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த அரசாங்கம் உங்களைக்கூட அங்கு செல்ல அனுமதிக்கவில்லை. தமிழ் கல்விமான்களை அனுப்பப்போவதாக சொன்னதே நினைவிருக்கிறதா?

பின்னர் முல்லைத் தாக்குதலும், யாழ் நகரில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதலுக்கும் பின்னர் அந்தக் கல்விமான்கள் காணாமல் போனதால்தானே தமிழ்க்கட்சிகள் யாழ் செல்ல அனுமதியே கிடைத்தது.

புலிகள் இல்லையானால் உங்கள் தியாகங்களுக்கு அரசுகூட மதிப்பளிக்குமா என்பது சந்தேகம்தான். கல்விமான்களும் கனவான்களும்தான் அங்கெல்லாம் இறக்குமதி செய்யப்படுபவர்கள்.

ஆனால் நீங்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்? அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் குப்பை கூட்டுவதிலும், சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

யாழ் பஸ்நிலையம் குப்பை கூளமாக காட்சியளிக்கிறது என்பதற்காகவும், குளங்கள் பாழடைந்து போய்விட்டன என்பதற்காகவுமா பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உங்கள் அணிகளில் இணைந்து போராடி இன்னுயிர் ஈர்த்தனர்?

தயவுசெய்து சிந்தியுங்கள். அடுத்த தேர்தலைப் பற்றி சிந்தித்து சிரமதானம் செய்து நல்ல பெயர் எடுப்பதில் உள்ள அக்கறையை, அடுத்த தலைமுறை பற்றிச் சிந்திப்பதிலும் கொஞ்சம் செலவிட்டால் வருங்காலம் உங்களை வாழ்த்தும்.

அறிக்கைகளை தயாரிப்பதைவிட அரசியல் பலத்தை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துங்கள்.

மக்களை சலுகைகள் பெறப் போட்டியிடும் மனநிலைக்கு கொண்டுசெல்லாமல், இதுவரை கால இரத்தம் சிந்துதலுக்கு ஈடான தீர்வை பெறவேண்டும் என்ற உறுதியை இழக்காமலிருக்க பயிற்றுவியுங்கள்.

அன்புடன்,
முத்தமிழன்



படிப்பகம

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

47 — தருவது ரசிகன்

**பாகம் 02**

**கடந்த வாரம்**

**தன்னை பாலியல் வதை செய்த 'கல்பி பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த பூலான்-மல்லாவின் ஆட்களுடன் சேர்ந்து அங்கிருந்த ஐந்து பொலிசாரை நிர்வாணமாக நிறுத்திச் சுட்டுக் கொல்கிறாள். பழிவாங்கிய திருப்தியுடன் இருக்கும் பூலானை ஸ்ரீ ராமின் வரவு பாதிக்கிறது.**

**இனி....**

ஸ்ரீ ராமையும், லாலா ராமையும் கண்டதும் பூலான் உள்ளே சென்றுவிட்டாள். விக்ரம் மல்லா அவர்கள் இருவரையும் வரவேற்றான்.

ஸ்ரீராம் வந்ததும் வராததுமாக குழுவில் உள்ளவர்களை அதிகாரம் பண்ணத் தொடங்கிவிட்டான். பூலான் அவன் பார்வையில் படாமல் தவிர்த்துக் கொண்டாள்.

அன்றிரவு பாரத் சிங்கிடம் பேசுவதற்கு பூலானுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. பாரத் சிங் கவலையுடன் இருப்பதாகத் தோன்றியது. அதுபற்றி பூலான் அவனிடம் கேட்டாள்.

"மல்லாஜிமீது நான் உயிரையே வைத்திருக்கிறேன். ஆனால் இந்த ஸ்ரீராம் பொல்லாதவன். பொல்லாதவனாய் இருந்தால்கூட பரவாயில்லை. கெட்டவன். மல்லாஜிக்கு இதனை எப்படிச் சொல்வது என்றுதான் புரியவில்லை. ஸ்ரீராம் தங்களை அதிகாரம் செய்வது குழுவில் உள்ள பலருக்குப் பிடிக்கவில்லை." என்றான் பாரத் சிங்.

அவன் அப்படிச் சொன்னது பூலானுக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது. தன்னுடன் அவன் கருத்தும் ஒத்துப்போனதால் பாரத் சிங் பேசியதை ஆமோதிப்பதுபோல தலையாட்டினாள்.

"நீங்கள் சொன்னால் மல்லாஜி கேட்பார். உங்களால் மட்டும்தான் ஸ்ரீராமால் எங்கள் குழு சின்னாபின்னமாகாமல் தடுக்க முடியும்," என்றான் பாரத் சிங்.

அவன் தன்மேல் அத்தனை நம்பிக்கையோடு பேசியதைக் கேட்க பூலானுக்கும் பெருமையாக இருந்தது. அதே பெருமையோடு சொன்னாள்: "நானும் அப்படித்தான் நினைத்தேன். நீ சொல்வது சரிதான். இந்த இரண்டு தடியன்களாலும் எங்களுக்கு நாசம்தான் வரும். நான் மல்லாஜியிடம் சொல்லிப் பார்க்கிறேன்!"

அன்றிரவு மல்லாவிடம் தணிந்த குரலில் பக்குவமாய் அவர்கள் இருவர் பற்றியும் சொன்னாள் பூலான். தான் மட்டும் அல்ல குழுவில் உள்ள பலருக்கும் அவர்களைப் பிடிக்கவில்லை என்பதையும் பூலான் சொன்னாள்.

பூலானை தன் மடியில் சரித்துக் கொண்ட மல்லா அவள் தலையை ஆதரவாக வருடிக்கொண்டே யோசித்தான். பூலான் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு கிடந்தாள்.

குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்ட விக்கிரம் மல்லா: "எனக்கும் தெரியும். கொஞ்சம் அனுசரித்துப் பார்க்கலாம் என்றுதான் விட்டுப்பிடிக்கிறேன். குழுவில் உள்ள யாருக்காவது அவர்களால் ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு."

உடனே பூலான் தன் கரங்கள் இரண்டாலும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு குரல் தழுதழுக்கக் கேட்டாள்; "உனக்கு... உனக்கே ஆபத்து வந்தால் என்ன செய்வது? எனக்குப் பயமாக இருக்கிறது. என் நெஞ்சு எப்படித் துடிக்கிறது பார்," என்றவள் அவன் கையைப்பிடித்து தன் நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

மல்லா சிலிர்த்தான். மெல்லச் சிரித்தான்.

"எனக்கு உன்னிடம் மட்டும்தான் பயம், வேறு யாரிடமும் பயம் கிடையாது. புரிகிறதா உன்னிடம் மட்டும்தான்!"

"என்னிடமா... ஏன்?"

"யப்பா... இங்கே துடிக்க என் உள்ளேயும் துடிக்கிறது, படபடக்கிறது. நீ பக்கத்தில் அதுவும் இப்படித் தனிமையில் இருந்தால் என் உடம்பெல்லாம் எப்படிப் படபடக்கிறது தெரியுமா?"

"ச்சீ... ஆளைப்பார்"

"பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்!"

"ஆளை மட்டும் பார்ப்பது போலத் தெரியவில்லை."

"வேறு யாரைப் பா...ஓ... பார்க்கப் பார்க்க...."

"பார்க்க?"

"வேண்டாம்... அடிப்பாய்.!"

"சொல்லு, சொல்லடா...." கழுத்தை இறுக்கினாள். மல்லா நாக்கை நீட்டி மூச்சுத் திணறுவதுபோல பாவனை செய்ய, பூலான் சிரித்தாள்.

மல்லா குனிந்தான். அவன் குனிந்த இடத்தால் பூலான் சிலிர்க்க, மல்லா மெல்லமெல்லப் பரவினான்.

மறுநாள் ஸ்ரீராமிடம் தனிமையில் மல்லா சொன்னான்: "பண்ணையார் அவர்களே! இது உங்கள் குழு. ஆனால் குழுவில் உள்ளபலர் புதியவர்கள். அதனால் எடுத்ததும் அவர்களை அதட்டி அதிகாரம் பண்ணினால் உங்கள்மீது வெறுப்படைவார்கள். மரியாதையாக நடத்துங்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்!"

"மல்லா! உன் ஆலோசனைக்கு நன்றி. குருவுக்கே புத்தி சொல்லும் அளவுக்கு நீ வளர்ந்திருப்பது எனக்கு எத்தனை பெருமையாக இருக்கிறது தெரியுமா? ம்... இனிமேல் பார்த்து நடந்து கொள்கிறேன்!" என்றான் ஸ்ரீராம்.

தான் சொன்னதைக் கேட்டதும் ஸ்ரீராம் கோபமடைவானோ என்று பயந்த மல்லாவுக்கு ஸ்ரீராமின் போக்கு திருப்தி தந்தது. மகிழ்ச்சியோடு சென்றான்.

மல்லா அவ்விடத்தைவிட்டு அகன்றதும் ஸ்ரீராம் தன் சகோதரன் லாலா ராமை அழைத்தான்.

ஸ்ரீராமின் கண்களின் குரோதம் படமெடுத்தாடியது. மல்லா சென்ற திசையையே பார்த்தபடி லாலா ராமிடம் ஸ்ரீராம் சொன்னான்:

"வளர்த்த கடா மார்பிலேயே பாய்ந்துவிடும்போல இருக்கிறதடா. பாயவிடலாமா? கொன்றுவிடலாம்!"

லாலா ராமுக்கு மல்லாமீதுள்ள பொறாமையைவிட பூலான் மீதுள்ள ஆசைதான் அதிகம். அந்த ஆசை காரணமாகவே மல்லாவை கொல்லவேண்டும் என்று ஸ்ரீராம் சொன்னபோது பலமாகத் தலையாட்டி ஆமோதித்தான்.

மல்லா மட்டும் செத்துப் போனான் என்றால் பூலானை.... பூலானின் மத மதர்ப்பான அந்த உடலை மொத்தமாக ஆளலாம் என்று நினைக்க நினைக்க லாலா ராமுக்கு தலைகால் புரியவில்லை.

பூலானுக்கு ஆற்றில் நீச்சலடித்து குளிப்பது என்றால் ஆனந்தம். யாரும் இல்லை என்ற துணிச்சலில் குறுக்குத் துண்டுடன் மட்டும் ஆற்றில் இறங்கி ஆசைதீர நீந்திக் குளித்தாள் பூலான்.

புதர் ஒன்றின் மறைவில் இருந்து பூலான் குளிப்பதை அணு அணுவாய் இரசித்துக் கொண்டிருந்தான் லாலா ராம்.



பூலான்

உடலோடு ஒட்டியிருந்த துணியால் பூலானின் அழகுகளை மறைக்க முடியவில்லை. யாரும் அங்கே வரமாட்டார்கள் என்ற துணிச்சலால் பூலானும் அலட்சியமாகவே குளித்தாள்.

பூலான் கரைக்கு வந்தபோது லாலா ராம் தன்மூச்சை இழுத்துப் பிடிக்க கஷ்டப்பட்டான்.

லாலா ராம் எத்தனையோ பெண்களைத் தன் விருப்பத்துக்கு அடிமையாக்கியிருக்கிறான். முழுதாக பிரித்துப் பார்த்திருக்கிறான். ஆனால் பூலானின் உடலமைப்பு அவன் இதுவரை சந்தித்த பெண்களிடம் காணாதது.

சீருடையில்தான் இதுவரை பூலானை அவன் கண்டிருக்கிறான் அந்த முரட்டு உடைக்குள்கூட திண்மையாக நிமிர்ந்திருக்கும் அவள் அழகுகளும், அவள் நடந்து செல்லும்போது திடம் தெரியும் கால்களும், முன் அழகை விட எந்தவளவுக்கும் தாழ்ந்தவை அல்ல என்று சொல்வதுபோல காணப்படும் பின் அழகுகளும் லாலா ராமை பைத்தியமாக அடித்திருந்தன.

ஆனால் இப்போது காணும் காட்சி அவன் இதயத்துடிப்பையே எகிறச் செய்தது. நீருக்குள் இருந்து எழுந்து வந்த தேவதை போல அவள் தெரிந்தாள். முரட்டுச் சீருடைக்குள் மூடிக்கிடந்த உடலின் முழு அமைப்பும் இப்போது எத்தனையே ஊகங்களைக் கிளப்பும் அளவுக்கு வெளிப்பட்டும், வெளிப்படாமலும் தெரிந்தன. அவள் நடந்துவரும்போது குலுங்கிய அழகுகள் லாலா ராமை நிலைகொள்ளாமல் தவிக்கச் செய்தன. மேல் கால்களின் பரிமாணங்களும் அவன் மனதைச் சிதற அடித்தன.

அப்படியே எழுந்து ஓடிப்போய் அவளைத் தன் பிடிக்குள் கொண்டுவரலாமா என்று ஒரு நொடி நினைத்தான். மல்லாவின் ஞாபகம் வந்ததும் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

'மல்லாவை விரைவில் கொல்லவேண்டும்; மல்லா சாகவேண்டும்; பூலான்... பூலானை...' அதற்குமேல் அவனால் தாங்க முடியவில்லை. அப்படியே புதர்மறைவில் மல்லாந்து படுத்து மூச்சை இழுத்து இழுத்து வெளியேவிட்டான். உடம்பெல்லாம் காய்ச்சல் வந்ததுபோல சுட்டது. நாவரண்டுபோனது.

என்னதான் முயன்றாலும் தான் கண்ட காட்சியை...அந்த துள்ளலை... அந்த திண்மைகளை... 'மற...மற இப்போது வேண்டாம் மற... சமயம் வரும் பூலான் உனக்காவாள்... இப்போது மற' என்று மனதை அடக்க அடக்க மறுபடி மறுபடி... "அடியே...பூலான்!" முணுமுணுத்தபடி தன் கைகளை தரையில் ஓங்கிக் குத்தினான்.

ஸ்ரீராமை உசுப்பேற்றினான் லாலா ராம். "மல்லாவை உயிரோடுவிடும் ஒவ்வொரு மணித்துளியும் எமக்குத்தான் ஆபத்து. எப்போது கொல்லவேண்டும் என்று முடிவு செய்து விட்டோமோ இனிமேல் தாமதிக்கக் கூடாது!"

லாலா ராம் சொன்னது ஸ்ரீ ராமுக்கும் சரியென்று தோன்றியது. ஸ்ரீராமுக்கு பூலான் மீதிருந்த ஆசை லாலா ராமுக்குத் தெரியாது.

மல்லாவை கொல்ல ஸ்ரீராம் தீர்மானித்தான் என்றால் அதற்கு காரணமே பூலானை அடையும் ஆசைதான். பூலானை கண்டவுடனேயே அவளை எப்படியாவது அடைந்தே தீருவது என்று முடிவு கட்டிவிட்டான் ஸ்ரீராம். அவளைப் பின்புறமாய் அணைத்த போது ஏற்பட்ட தாபமும், பூலான் அவனை உதைத்த பின்னர் மேலும் காட்டுத்தீயாய் கனன்று கொண்டிருந்தது.

ஸ்ரீராமின் உறவினனான மஹாவீர் என்பவன் அவனைக் காண வந்திருந்தான்.

மஹாவீர் நீச்சலில் திறமையானவன் என்று அறிமுகம் செய்தான் ஸ்ரீராம். அவனுடன் சேர்ந்து குளிக்க ஆசைப்படுவதாகவும், மல்லாவையும் தம்மோடு நீச்சலடிக்க வருமாறும் கேட்டான் ஸ்ரீராம்.

மல்லா சற்றுத் தயங்க, ஸ்ரீராம் உரத்துச் சிரித்தான்.

"மல்லா, நீ இப்போதெல்லாம் பூலானை விட்டுப் பிரிவதேயில்லையடா. அப்படி என்ன மாயம் பண்ணிவைத் திருக்கிறாளோ; பெண்டாட்டி தாசனாகி விட்டாய் நீ. எங்களை மறக்காமல் இருந்தால் சரி!"

அவன் அப்படிச் சொன்னதும் மல்லாவுக்கு சங்கடமாகிப் போய்விட்டது.

"சேச்சே... அப்படி ஒன்றுமில்லை. வாருங்கள் போகலாம்," என்று புறப்பட்டான். அபாயத்தைத் தேடிப்போவதை மல்லா உணரவில்லை. ஆனால் அவன் முதுகின் பின்பாக ஸ்ரீராமின் உதடுகளில் வஞ்சகப் புன்னகை விரிந்தது.

ஸ்ரீராம் தனது திட்டத்தை நிறைவேற்ற அன்றைய நாளைத் தெரிவு செய்தமைக்கு காரணம் இருந்தது.

தாதரி என்னும் கிராம அதிகாரி மல்லாவுக்கு மிகவும் வேண்டப்பட்டவன். பெத்வா நதியை ஒட்டியதாக ஹமீர்பூர்க் காடுகள் இருக்கின்றன.

அக் காடுகளுக்குள் மறைந்து இருந்த சந்தர்ப்பங்களில் தாதரி கிராம அதிகாரிதான் உணவு அனுப்பி உதவி இருக்கிறான்.

அந்தக் கிராம அதிகாரியின் மகளுக்கு திருமணம். கிராம அதிகாரியே நேரில் வந்து அழைப்பு விடுத்தான்.

பாரத் சிங்கையும் மேலும் ஐந்து பேரையும் திருமணத்திற்கு அனுப்பிவைத்தான் மல்லா. ஐயாயிரம் ரூபா பணமும் ஒரு தங்கச் சங்கிலியும் தன் பரிசாக பாரத் சிங்கிடம் கொடுத்து அனுப்பினான்.

மல்லாவைவிட்டுப் பிரிந்துபோக பாரத் சிங் தயங்கினான். மல்லாவுக்கு ஆபத்து நேரப் போகிறது என்று பாரத் சிங்கின் உள் மனம் உறுத்தியது. ஆனாலும் மல்லா ஒரு முடிவு செய்துவிட்டால் யாராலும் அதனை மாற்ற முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

போகும்போது பூலானிடம் வந்து, "மல்லாஜியை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் இரண்டு மூன்று நாட்களில் திரும்பிவந்துவிடுவேன். எனக்கென்னவோ சில நாட்களாக ஸ்ரீராமின் போக்கு சந்தேகமாயிருக்கிறது. எல்லோரிடமும் அன்பாகப் பழகுகிறான்; மல்லாஜியை தன் மகன்போல என்று வாஞ்சை பாராட்டுகிறான். பாம்பு பாம்புதான் என்பதை மறந்துவிடாதீர்கள்!" என்று சொல்லிவிட்டுப் போனான்.

பாரத் சிங்தான் மல்லாவின் வலதுகரம். அவன் போனதும் ஸ்ரீராமுக்கு தைரியம் வந்துவிட்டது.

இதனைவிட்டால் மல்லாவை ஒழித்துக் கட்ட வேறு நல்ல சந்தர்ப்பம் கிடையாது என்று முடிவு செய்தான்.

பூலான் மல்லாவைக் கவனித்துக் கொண்டே இருந்தாள். ஸ்ரீராம், லாலா ராம் இருவரது நடவடிக்கைகளைக்கூட அவர்கள் அறியாமல் கண்காணித்தே வந்தாள். ஆனால் மஹாவீர் வந்தபின்னர் அவனுக்கு விருந்து கொடுக்க உணவு தயாரிக்கச் சொன்னான் மல்லா. அதனால்தான் ஸ்ரீராமுடனும் மஹாவீருடனும் மல்லா புறப்பட்டுச் சென்றதை பூலானால் காணமுடியவில்லை.

ஆற்றங்கரைக்குச் சென்றதும் மூவரும் குளிக்க ஆயத்தமானார்கள்.

அப்பகுதியில் வெள்ளரிப் பழங்கள் பழுத்துக் கிடந்தன.

"மல்லா! நீ இங்கேயே இரு. நானும் மாஹாவீரும் வெள்ளரிப் பழங்களைப் பிடுங்கிவருகிறோம்." என்று, மஹாவீரை அழைத்துச் சென்றான் ஸ்ரீராம்.

சிறிது நேரத்தில் அப்பகுதியின் அமைதியைக் கலைத்து எழுந்தது வெடியோசை!

சமைத்துக் கொண்டிருந்த பூலானுக்கும் அது கேட்டது. அப்படியே ஓடிவந்தாள்.

மரம் ஒன்றில் ஏறிநின்று சத்தம் வந்த திசையில் பார்த்த மாது சிங் குரலில் பதட்டத்துடன் பூலானை நோக்கிக் கத்தியபடி குதித்தான்:

"மல்லாஜியை சுட்டு விட்டார்கள்!"

பூலானுக்கு தலை சுழன்றது.

"ஐயோ மல்லா.... மல்லா....!"

ஆற்றங்கரையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள். **(தொடர்ந்து வரும்)**

## மறைந்தும் மறையாதவன்
## சோகத்தில் ஓர் ஆறுதல்!

உணர்ச்சிமயமான சம்பவம்தான் இது.

அவர்கள் இந்தியாவில் இருந்து இந்தோனேசியா சென்று வேலை பார்ப்பவர்கள். கணவர் பெயர் சுப்பிரமணியம். மனைவி பெயர் ஜெயஸ்ரீ. அவர்களுக்கு கணேஷ் என்னும் ஐந்து வயதுப் பையனும், ஒன்பது வயதில் பெண்பிள்ளையும் இருந்தனர்.

கணேஷ் துருதுருவென்று இருப்பான். கடைக்குட்டி என்பதால் செல்லம். திடீரென்று ஒருநாள் அவன் படிக்கும் பாடசாலை அதிபரிடம் இருந்து அழைப்பு வந்தது. சுப்பிரமணியமும், ஜெயஸ்ரீயும் அங்கே போனார்கள்.

அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது.

"நீச்சல் வகுப்பின்போது இதயம் அடைத்ததுபோல வந்ததாம். கணேஷ் மயங்கிப் போனான். மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறான்!" என்றார் அதிபர்.



மருத்துவமனையில் செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்டது. ஆனாலும் பயன் இல்லை. கணேஷின் மூளை இறந்துவிட்டது என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

பெற்ற மனம் கேட்கவில்லை. கணேஷை சிங்கப்பூரிலுள்ள மவுண்ட் எலிசபெத் மருத்துவமனைக்கு விமானத்தில் கொண்டு சென்றனர்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர்.



பரிசோதித்த மருத்துவர்கள் கணேஷின் மூளை இறந்துபோனதை உறுதி செய்தனர்.

சோகத்தில் ஆழ்ந்தனர் பெற்றோர். அப்படி இருந்தும் உணர்ச்சிகரமான-உணர்வு பூர்வமான காரியம் ஒன்றைச் செய்ய முன்வந்தனர்.

"எம் மகனின் உடல் உறுப்புக்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் பலரைக் காப்பாற்றுங்கள்!" என்றனர்.

இதயம், கண், கல்லீரல், சிறுநீரகங்கள் ஆகியவற்றை நன்கொடையாகக் கொடுத்தனர்.

ஆனால் இதயத்தைப் பொருத்த சரியான ஆள் கிடைக்கவில்லை. கணேஷின் கல்லீரல் 15 மாத மலேசியக் குழந்தை ஒன்றுக்குப் பொருத்தப்பட்டது.

சிறுநீரகங்கள் இரண்டு நோயாளர்களுக்கு பொருத்தப்பட்டன. ஒருவர் 32 வயதுப் பெண். இன்னொருவர் 15 வயது ஆண்.

சகணேஷின் கண்களும் இரண்டு ஆண்களுக்குப் பொருத்தப்பட்டன.

ஐந்து வயதில் உலகைவிட்டுப் பிரிந்த கணேஷின் உடல் உறுப்புக்கள் ஐந்து பேருக்குப் புதுவாழ்வு கொடுத்திருக்கின்றன.

"இப்படிச் செய்ததன் மூலம் என் மகன் உயிர்வாழ்வதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது. என் மகனின் இதயம் வேறு ஒருவரின் உடலில் துடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் பொருத்தமானவர் கிடைக்கவில்லை," என்று கவலைப்படுகிறார் அம்மா ஜெயஸ்ரீ சுப்பிரமணியம்.

## அழகியும்- அரசியல்வாதியும்

அயல்நாட்டு அரசியல் தலைவர் ஒருவரின் ஜொள்ளு சமாச்சாரம் இது.



இந்தியாவில் பீகார் முதலமைச்சராக இருப்பவர் லல்லு பிரசாத் யாதவ். பெண்கள் விஷயத்தில் அவர் ஒரு ஜொள்ளு பிரசாத்.

சம்பத்தில் தேவகவுடாவின் பிரதமர் நாற்காலி கவிழ்ந்தபோது பிரதமர் பதவிமீது குறி வைத்த முக்கிய புள்ளி லல்லு பிரசாத்தான்.

யார்கண்டது...? எதிர்காலத்தில் லல்லு பிரதமராகவும் வரக்கூடும். அதனால் இப்போதே அவரைப் பற்றிய சில சுவாரசியமான சங்கதிகளை அறிந்து வைப்போம்.

லல்லு ஒரு அதிரடியான அரசியல் வாதி. பீகாரில் நல்ல செல்வாக்கு இருந்தது. சமீபத்தில் மெல்லச் சரிவு காணத் தொடங்கியிருக்கிறது.

பெண்கள் என்றால் ஜொள்ளுவிடும் லல்லு நடிகைகள் என்றால் கொஞ்சம் அதிகமாகவே ஜொள்ளு விடுபவர். சில நடிகைகளுடனும் பாஸ்பா உபயோகமான நட்பு உண்டு.

பீகார் தெருக்கள் பற்றிச் சொல்லும் போது, "நல்ல ரோடுகள் ஹேமமாலினியின் கன்னம் போல வழுவழுப்பாக இருக்கவேண்டும்!" என்று சொன்னவர் லல்லு.

கவர்ச்சி மற்றும் செக்ஸ் விஷயத்தில் தாராளமான பூஜாபட்டை தன் கட்சி சார்பாக பாராளுமன்ற உறுப்பினராக்கவும் முன்வந்தவர் லல்லு என்றால் எத்தனை ஜொள்ளு என்று பார்த்துக் கொள்ளுங்களேன்! பூஜாபட் லல்லுவின் அழைப்பை புறங்கையால் தள்ளிவிட்டார்.

லல்லுவின் இரசனைகளை பல நடிகைகள் பரிமாறிக்கொண்டபோதும் சிக்கலில் மாட்டியிருப்பவர் மம்தா குல்கர்னிதான்.

ஏன் மாட்டினார் தெரியுமா? லல்லுவின் கட்சி சட்டசபை உறுப்பினர் ஒருவரது வீட்டில் ஒரு விருந்து. குறிப்பிட்ட சில பிரமுகர்களை குஷிப்படுத்த அவர்கள் முன்பாக ஆடினார் மம்தா. அதற்காக விசேஷ கவனிப்பும் கணிசமான பணமும் கிடைத்ததாம்.

மாட்டுத்தீவன ஊழலில் மாட்டியுள்ள லல்லு பிரசாத்தைக் காப்பாற்றுவதற்காக சில அதிகாரிகளுக்கு வலையாகவும் மம்தா வீசப்பட்டாராம். பொருத்தமானவலைதான்.

விஷயம் வெளியே கசிந்துவிட்டது. மம்தாவாலும் முழுமையாக மறுக்க முடியவில்லை. "தனிப்பட்ட சிலர் முன்னர் நான் ஆடவில்லை. ஆயிரக்கணக்கானோர் முன்பாக பீகாரில் நடந்த நிகழ்ச்சியில்தான் ஆடினேன்!" என்கிறார். பாதிதான் மெய் சொல்லுகிறார் மம்தா என்கிறார்கள்.

எப்படியோ... அரசியல்வாதிகளையும் அழகிகள்தான் காப்பாற்றத் தொடங்கியிருக்கிறார்கள்.

## முன்னாள் ஆண்மகன்

நம் நாட்டில் வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்து கோடிகளை சம்பாதிக்கும் ஆசையில் பெண்ணாக மாறினார் ஒருவர்.

ஆனால் கெய்ரோவில் பெண்ணாக மாறியதால் பல கோடிகளை இழக்கும் நிலையில் இருந்தார் ஒரு முன்னாள் ஆண்மகன்.

இந்த முன்னாள் ஆண்மகனின் தந்தை பெரிய கோடீஸ்வரர். சில வருடங்களுக்கு முன்னர் தந்தை இறந்துபோனார். அப்போது ஆணாக இருந்த மகன் பின்னர் ஒரு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு பெண்ணாக மாறிவிட்டார். கோடீஸ்வரரின் மற்றொரு மகனுக்கு இது வாய்ப்பாகப் போய்விட்டது. "ஆணாக இருந்தால்தான் சரிபாதியாக சொத்தைப் பிரிக்க வேண்டும். பெண்ணாகிவிட்டதால் மூன்றில் ஒரு பங்கு சொத்து உனக்கு, மீதியெல்லாம் எனக்கு" என்றுவிட்டார்.



முன்னாள் ஆண்மகன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிபதி முடியைப் பிய்த்துக்கொண்டு வழக்கை விசாரித்தார்.

இறுதியாக தீர்ப்பு முன்னாள் ஆண்மகனான இந்நாள் பெண்மகளுக்கு சார்பாகச் சொல்லப்பட்டது.

"தந்தை இறந்தபோது ஆணாகத்தான் இவர் இருந்தார் என்பதால் சொத்தில் பாதியை அவருக்குக் கொடுக்க வேண்டும்!" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.



படிப்பகம்


www.padippakam.com

↓ இப்போதெல்லாம் எப்படியெல்லாம் ஸ்டைல் பண்ணுவது என்ற ஒரு விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. படத்தில் பாருங்கள் அழகிக்கு தலையிலும் இரண்டு கொம்புகள். ஏறக்குறைய செம்மறி ஆடுமாதிரி காட்சி தருகிறார். ஆடை அலங்காரப் போட்டி ஒன்றில் பிரான்ஸ் நாட்டு உடையலங்கார நிபுணர் ஒருவர் தயாரித்த புதுமையான உடையாம் இது. மயில், மான், அன்னம் என்றெல்லாம் பெண்களை வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் செம்மறி ஆடு என்று யாரும் இதுவரை வர்ணித்ததில்லையே! பிரான்ஸ் உடையலங்கார நிபுணருக்கு பெண்கள்மீது குறும்பா, கோபமா?!

# உடையா இது உடையா?



# வாய்க்குள் விரலை வைத்தால்......



↑ விளையாட்டுப் பொம்மைமீதே புகார்கள் கிளம்பியிருக்கின்றன. தங்கள் பிள்ளைகளுக்கு பொம்மைகள் வாங்கிக் கொடுக்கும் பெற்றோரும், பொம்மைகளுடன் விளையாடும் சிறு பிள்ளைகளும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? விஷயம் இருக்கிறது. சிங்கப்பூரில் விற்பனை செய்யப்பட்ட 'கேபேஜ் பேட்ச்' என்ற பொம்மைகளுக்கு படு கிராக்கி.

இந்தப் பொம்மைகளுக்கு பிளாஸ்டிக் தின்பண்டங்கள் கொடுத்து விளையாடலாம். அவற்றைத் கடித்து தின்னக்கூடிய வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. அதனால் சிறுவர் சிறுமியர் மத்தியில் இதற்கு மவுசு. ஆனால் சிறு பிள்ளைகளின் விரல்கள் இந்தப் பொம்மையின் வாயில் பட்டாலும் கரக் முறுக் என்று கடித்துவிடுகிறதாம். சிறுமிகளின் தலை முடியையும் இழுத்துக் கடிக்கிறதாம். அமெரிக்காவில் பெற்றோர்கள் புகார் செய்தனர். இதனையடுத்து அமெரிக்காவிலும், சிங்கப்பூரிலும் இந்தப் பொம்மைகள் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விற்பனையான பொம்மை ஒன்று பிளாஸ்டிக் திண்பண்டத்தை கடித்து விழுங்கும் காட்சிதான் இது.

# என்னைப் போல் ஒருவன்

→ கோடி கோடியான ரசிகர்களின் ரசிகைகளின் உள்ளத்தில் குடியிருக்கும் பொப் புயல் மைக்கேல் ஜாக்சன். என்னதான் இருக்கிறதோ, வளைந்து நெளிந்து உடலை முறுக்கி, இடுப்பை அசைத்து மைக்கேல் ஆடிப்பாட அவரது ரசிக, ரசிகைகளுக்கு பைத்தியமே பிடித்துவிடுகிறதே! கறுப்பரான மைக்கேல் ஜாக்சன் தன் முகத்தை பலமுறை பிளாஸ்ரிக் சர்ஜரி செய்தது மட்டுமல்ல, தன் கறுப்புத் தோலையே வெள்ளையாக மாற்றிக் கொண்டவர். கடலில் கொட்டினாலும் கரையாதளவுக்கு பணம் இருந்தமையால் மனம் போனபடியெல்லாம் தன் உடல் அமைப்பையே மாற்றிக் கொள்ள முடிந்தது.

இங்கே மைக்கேல் ஜான்சன் இரட்டை வேடத்தில் காட்சியளிப்பது கம்பியூட்டர் தந்திரமல்ல. சிற்பியின் கைவண்ணம். மைக்கல் ஜாக்சனை அப்படியே உரித்து வைத்தது போல பாரிசில் ஒரு மெழுகுச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது. அசல் எது நகல் எது என்று குழப்பமாக இருக்கிறதா? தொட்டுப் பார்த்து வியப்பவர் தான் அசல் மைக்கேல் ஜாக்சன். உயிருள்ள போதே உயிரோட்டமான சிலை.



# இடை நடுவே சிறு அரும்பு!

**தகவல் பெட்டி**



← அய்! அய்! அய்! சஹாரா பாலைவனத்தில் குறும்பான கமராக்காரர் ஒருவர் 'கிளிக்' செய்த அரும்பின் படம். உயிர்த் தோழிகளான இருவரும் தோள்மேல் கைபோட்டு நடந்து செல்ல இடை நடுவே குழந்தை தொங்குகிறது. இடதுபுறம் செல்லும் பெண்ணின் செல்லக் குழந்தை இது. சோக்கான சாட்சிதானே. முக்கிய குறிப்பு, உயிர்த்தோழிகள் என்றதும் ஜெயா-சசி ஞாபகம் வந்தால் தப்பு. அது உடன்பிறவாச் சகோதரிகள். இது வஞ்சமில்லாத நட்பு. பணத்தால் அல்ல மனதால் உருவானது.

# ஜாலியான சவாரி

→ 'ஒட்டகத்தைக் கட்டிக்கோ, பயமில்லாமல் ஏறிக்கோ' என்று சினப் பெண்ணுக்கு தைரியம் கொடுக்கிறார் பயிற்சியாளர். மேலிருந்து சவாரி செய்வதும் ஆனந்தம் தான். அதுதான் சிரித்தபடியே தாவுகிறார். இந்த ஒட்டகம் ஏனைய ஒட்டகங்களில் இருந்து வேறுபட்டது. குளிருக்கு நாமெல்லாம் கம்பளியில் சுவெட்டர் போடுவோம் அல்லவா, இதன் உடலில் இயற்கையாகவே சுவெட்டர் போல மொசு மொசு முடிகள் உள்ளன. எத்தகைய குளிரையும் தாங்க முடியும். ஒரு மாதத்துக்கு உணவோ தண்ணீரோ இல்லாமல் உயிர்வாழவும் முடியும். இந்த மொசு மொசு ஒட்டகங்கள்மீது ஏறிச் சவாரி செய்வதே சிலிர்ப்பான அனுபவம்தானாம்.




படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 6

# அம்மா நடிகையின் சீற்றம் நாகேஷ் கேட்ட தொகை!

மித்ரவாசு

'முதல் வசந்தம்' படத்தில் ஆனந்த்பாபுவை நடிக்கவைக்க எண்ணியிருந்தார் கலைமணி. அதனால் ஒப்பந்த விஷயம் பற்றி நாகேஷுடன் பேச தியேட்டர் நாகேஷிக்கு சென்றார்.

அங்கே 'பாடும் வானம்பாடி' படம் ஓடிக்கொண்டிருந்தது. நல்ல கூட்டம். தியேட்டர் அலுவலகத்தில் நாகேஷை சந்தித்தார் கலைமணி. தன் எண்ணத்தை கலைமணி கூற நாகேஷ் எடுத்த எடுப்பிலேயே: "இப்ப என் பையன் ஒன்றரை இலட்சம் வாங்குகிறான். இங்கே வெளியே கூட்டத்தைப் பார்த்தீங்க. பாடும் வானம்பாடி நூறுநாள் ஓடும்னு பேசிக்கிறாங்க. அதனால இனி ஆனந்த்பாபு ரேட் இரண்டரையிலிருந்து மூன்று ரூபாய் ஏறும்." என்று சொல்ல கலைமணி மௌனமாகிவிட்டார்.

அதனால் நாகேஷ் கொஞ்சம் இறங்கிவந்து "உங்களுக்காக ஒண்ணேமுக்கால் வாங்கிக்கறேன்." என்றார். "நான் அப்புறம் வந்து பேசிக்கிறேன்" என்று வெளியேவந்தார் கலைமணி. பின்னர் பாண்டியனை அந்தப் பாத்திரத்தில் நடிக்க வைத்தார்.

ஆரம்பம் முதலே சிறிய வேடங்களிலும் பின்னர் அம்மா வேடங்களிலும் நடித்துக் கொண்டிருக்கும் நடிகை அவர். காந்தமான எழுத்தாளரின் படம் ஒன்றில் மட்டும் கதாநாயகியாக நடித்தார். கதையில் மட்டுமன்றி, எழுத்தாளரிடமும் தவறிப்போனார் அந்த நடிகை.

பின்னர் சரியான வாய்ப்பு இல்லாமல் சிறிய வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது பெரிய நடிகர் ஒருவருக்கு ஒரு நாள் படப்பிடிப்பு இரத்தாகியிருந்தது. அன்று யாராவது ஒரு நடிகையை வரவழைக்கலாமே என்று முயன்றால் யாருமே படியவில்லை. நடிகருக்கு கடுமையான கோபம். அவரது கோபத்தைத் தணிக்க ஒரு பெண் வேண்டும். அதனால் இளமையான அந்த அம்மா நடிகையை அழைத்து வந்தனர்.

நடிகை நடிகரைப் பார்த்ததுதான் தாமதம். "சீச்சி உன்கிட்ட என்னை அழைச்சிட்டு போறேன்னு முன்னாடியே சொல்லியிருந்தா நான் வந்திருக்கவே மாட்டேன். போயும் போயும் உன்கிட்ட ஒரு மனுசி வருவாளா? நாயும் பிழைக்காது இந்தப் பிழைப்பு." என்று சீறிவிட்டார்.

நடிகர் அதிர்ந்துபோனார். அதற்குப் பிறகு அந்த அம்மா நடிகை நடிகருக்கு ஒரு வெற்றிப்படத்தில் அம்மாவாக நடித்தார் என்பதுதான் ஆச்சரியம்.

பாரதிராஜாவால் அறிமுகமான நடிகையுடன் நெருக்கமாக இருந்து, நடிகையின் அதிரடி நடவடிக்கைகளால் பயந்து ஓடிய நடிகரைப் பற்றி சென்றவாரம் சொல்லப்பட்டது. அந்த நடிகர் போனபின்னர் ரயில் நடிகையின் பிடியில் மாட்டிக்கொண்டு அவதிப்பட்ட நடிகர்கள் பலர். காந்தமான ஒரு தமிழ் நடிகரும் அவரிடம் மாட்டிக் கொண்டு ஒருவிதமாக தப்பிக்கொண்டார். நடிகை இப்போது மேல்நாட்டு மருமகளாகிவிட்டார். தொடர்ந்து நடித்தும் வருகிறார்.

இந்த ரயில் நடிகையிடம் முதலில் மாட்டிய அந்த சுதாகரமான நடிகர் பின்னர் ஜெயசித்ரமான நடிகைக்கு வலை வீசினார்.

இருவரும் நெருங்கிப் பழகினார்கள். தனது அன்புப் பரிசாக நடிகருக்கு கார் ஒன்றும் கொடுத்தார் நடிகை. ஆனால் நடிகரோ அந்தக் காரிலேயே பல அழகிகளுடன் ஜாலியாகச் சுற்றினார். விஷயமறிந்த நடிகை காரைத் திரும்பத் தருமாறு கேட்டார். இழுத்தடித்துவிட்டு பின்னர் காரைக் கொடுத்தாராம் நடிகர்.



பாஸ்கர்ராஜ்-ரக்ஷா
படம்: காதல்பள்ளி

## கடவுள்

அருண்பாண்டியன் ரோஜா மணிவண்ணன், மன்சூரலிகான், ரூபஸ்ரீ, வேலு பிரபாகரன் ஆகியோர் நடித்து முடித்து திரைக்கு வர ரெடியாக உள்ள படம் 'கடவுள்'.

கடவுளாக தோன்றி நடிக்கிறார் மணிவண்ணன். பூலோகத்துக்கு வந்து மக்களிடம் மாட்டுப்பட்டு முழிக்கும் கடவுளாம். பிறகென்ன மணிவண்ணனுக்கு அல்வா சாப்பிடற மாதிரித்தானே. பிய்த்து உதறி விடுவார் பிய்த்து.

திரைக்கதை, இயக்கம், ஒளிப்பதிவு வேலு பிரபாகரன். இசை; இளையராஜா.

* சென்ற வருடத் ... பெற்றுள்ள க... 'அவ்வை சண்மு... இதுதான் முதல்...
* பவித்ரன் இயக்... தனபாலன் தன... இயக்கவுள்ளார்... நடிக்கவுள்ளார்...
* ரகுவரன்- ராதி... கதாநாயகியாக... பெயரை மை... கோட்டையிலே'...
* கார்த்திக் நடிக்... பொன்னுசாமி... விடம் இணை இ...
* 'புருஷன் பொ... புதிய படங்கள்... 6 புதிய படங்க...
* சின்னத்திரைக... பிரபலமானவர்... அருண்குமாரு... ஒரு பாடலையு...
* கே. பாக்யரா... எவரையும் அ... மடிச்சுக்கட்டு'... வில்லனாக அ...

மினி ச...



## அஜித் சரிவு

'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தின் வெற்றிக்குப் பின்னர் முரளி எங்கோ போய்விட்டார். இன்றைய திகதியில் அதிகமான படங்களில் நடித்துக் கொண்டிருப்பவர் முரளிதான். எட்டுப் படங்கள்! ஆனால் அதிக படங்களில் ஒப்பந்தமாகியிருப்பவர் அப்பாஸ். பதின்மூன்று படங்கள்.

சென்ற வருடம் பரபரப்பு ஏற்படுத்திய அஜித்கு மார் மார்க்கெட் புயலில் அடிபட்ட மரம்போல சரிந்து கிடக்கிறது. 'நேருக்கு நேர்' படத்தில் நடித்து முடித்திருக்கலாம். பிகு பண்ணியது தப்புத்தான். அப்பாஸ் போதாது என்று இப்போது சூர்யாவும் போட்டியாக வந்துவிட்டார் என்று புலம்புகிறாராம் அஜித். காலம் கடந்த ஞானம்.

## ஓஹோ பேபி

பெரிய மனுஷன் படத்திற்காக பழைய பாடல் ஒன்றை மனோ பாடியிருக்கிறார். 'தேன் நிலவு' படத்தில் பிரபலமான 'ஓஹோ எந்தன் பேபி' பாடல்தான் மறுபடி மவுசு பெறப் போகிறது.

படத்தில் சத்யராஜ் விரும்புவது வெளிநாட்டுப் பெண்களைத்தானாம். ஏற்பாடு அல்லது சேகரிப்பு செய்து கொடுப்பது மணிவண்ணன். ஒருநாள் வெளிநாட்டுப் பெண் ஒருத்தி பொசுக்கென்று சாக, "உள்ளூர் என்றாலும் பரவாயில்லை. இது வெளிநாட்டு பெண்ணாச்சே ஐ.நா.சபை வரை போயிடுமே" என்று சத்யராஜை மிரட்டி ஐம்பது இலட்சத்தை கறந்துவிடுவாராம் மணிவண்ணன்.

## வெள்ளரிக்கா நாயகன்

'காதல் கோட்டை' படத்தில் 'வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா' பாடலுக்கு ராணியுடன் ஆடியவர் ராம்ஜி. பாடலைப் போலவே ராம்ஜியும் பிரபலமானார். அடித்தது சான்ஸ். 'வீரபாண்டிக் கோட்டை' படத்தில் கதாநாயகன் அவர்தான். நாயகி சோனியாவுடன் தூள் கிளப்பியிருக்கிறார் ராம்ஜி. "கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி இருக்கிறேனா என்பதை படம் வந்தபின்னர் சொல்லுங்கள்" என்கிறார். பயன்படுத்தி இருக்கிறார் போலத்தான் தெரிகிறது.

## நடிகைகள் நடத்திய அடிதடி!

அரசியல் கட்சிகள் மாதிரி நடிகர் சங்கத்துக்குள்ளும் அடிதடி. கோஷ்டி மோதல்.

நடிகர் சங்கத் தலைவராக இருக்கும் ராதாரவியை எதிர்த்து விஜயகுமார் தலைமையில் நடிகர்கள் நடிகைகள் பலர் ஒன்று திரண்டிருக்கிறார்கள். கமல் பின்னணியில் இருக்கிறார். சரத், நெப்போலியன், நக்மா, மீனா என்று பல முன்னணி நடிக நடிகைகள் விஜயகுமாருக்கு ஆதரவு.

நடிகர் சங்கக் கூட்டத்தில் நடந்த சண்டையில் ராதாரவிக்கு ஆதரவான நடிகை தமிழ்ச் செல்விக்கும் கவர்ச்சி நடிகை மாயாவுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. தமிழ்ச்செல்வியின் சேலையை உருவினார் மாயா. (பழக்கதோஷமோ?) விடுவாரா தமிழ்ச்செல்வி. மாயாவுக்கு யார் யாருடன் எல்லாம் கனெக்ஷன் என்ற விபரங்களை விலாவாரியாக விளாசித் தள்ளிவிட்டார். தொடர்ந்து இருவரும் பரிமாறிக் கொண்ட வார்த்தைப் பிரயோகங்கள் எந்த தரத்துக்கும் உட்பட்டதல்லவாம்.

நடிகர் சங்க மோதலால் பல நடிக நடிகைகள் பற்றிய சங்கதிகள் வெளிச்சத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. இரு தரப்பும்மாறி மாறி குத்திக்காட்டுவதால் பத்திரிகைகளுக்கு அபாரமான தீனி. இந்த மோதல்களால் ராதாரவிக்கு சான்ஸ் கொடுக்கவே தயாரிப்பாளர்கள் அஞ்சுகிறார்கள். ஒரேயொருவர் மட்டுமே துணிந்து வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். அவர் விஜயகாந்த். ராதாரவியை ஆதரிப்பவரும் அவர்தான்.



விஜய்-சூர்யா
படம்: நேருக்கு நேர்

## மூன்று வேடங்களில் சத்யராஜ்

ஜொள்ளுவிடும் பாத்திரத்தில் சத்யராஜ் அசத்தலாக நடித்து வரும் படம் 'பெரிய மனுஷன்' படத்தில் சத்யராஜ் மூன்று வேடங்களில் தோன்றுகிறாராம். முதலில் இரண்டு வேடங்களாக இருந்ததில் மேலும் ஒன்று கூட்டிவிட்டனர். தாத்தா சத்யராஜுக்கு ஜோடி கிடையாது. பெரிய மனுஷன் சத்யராஜுக்கு அம்பிகா-கோவை சரளா. இளம் சத்யராஜுக்கு கல்கி பட நாயகி சுருதி.

மணிவண்ணன், எஸ்.பி. பாலசுப்பிரமணியம், வினுச்சக்கரவர்த்தி ஆகியோரும் உண்டு. இசை: தேவா. பாடல்கள்: வாலி, காளிதாசன்.

முன்னர் 'வில்லாதி வில்லன்' படத்திலும் சத்யராஜ் மூன்று வேடங்களில் நடித்திருந்தார்.

## புது வரவு

தெலுங்கில் நகைச்சுவை வேடங்களில் முன்னணி வகிப்பவர் நாகேந்திர பிரசாத். இப்போது தமிழுக்கும் வந்திருக்கிறார். 'வாசகி' படத்தில் கதாநாயகன் அவர்தான். தெலுங்குப் பாக்யராஜ் என்றும் இவரை அழைக்கலாம்.

மலையாள ஹீரோ மோகன்லாலின் மானசீககுரு நாகேந்திர பிரசாத்தான். "அவரைப் பார்த்துத்தான் நான் நகைச்சுவையாக நடிக்கப்பழகினேன்" என்று மோகன்லாலே சொல்லியிருக்கிறார்.

தமிழில் நாகேந்திர பிரசாத் கலக்குவாரா பார்க்கலாம். தெலுங்கு பாக்யராஜ் தமிழில் பாக்யராஜின் அறிமுகமான ஊர்வசியுடன் ஜோடி சேருவது நல்ல ஒற்றுமை.

## கசக்குமா என்ன?

'மனசுக்குள் வரலாமா' படத்தில் அப்பாசுடன் முத்தக் காட்சியில் நடிக்க ரவளி மறுப்... என்று செய்தி வந்தது. சினிமா நிருபர் ஒருவ... ரவளியிடம் கேட்டதுக்கு அதனை வன்மையா... மறுத்தார் ரவளி.

"அச் செய்தியில் துளியும் உண்மை இல்லை... அப்பாசுடன் அப்படி நடிப்பது என்றா... யாருக்குத்தான் கசக்கும்? புகுந்து விளையா... இருப்பேன்" என்று சொல்லியுள்ளார் ரவ... பார்த்திபனுக்கும் தெரியுமோ?



படிப்பகம்

சிறந்த நடிகர், நடிகையாகத் தேசிய விருது
பு முதன் முதலாக ஜோடி சேர்ந்து இந்தி
ல் நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் இயக்குநருக்கு
டம். இரவது பெயர்- சாந்தனு சிராரே.

'காதல் பள்ளி' படத்தைத் தயாரித்து வரும் அடுத்த படத்தையும் பவித்ரனைக் கொண்டே இப்படத்தில் நெப்போலியன் கதாநாயகனாக

டித்த 'ராணி மகாராணி' படத்தில் இரண்டாவது டித்தவர் அருணாஸ்ரீ. இவர் தற்போது தனது என்று மாற்றிக் கொண்டு 'வீரபாண்டிக் த்தில் நடித்து வருகிறார்.

'இரண்டாவது அத்தியாயம்' படத்தை நகுலன் பவர் இயக்குகிறார். இவர் 'தலைவாசல்' செல்வா நராகவும், வசனகர்த்தாவாகவும் பணிபுரிந்தவர்.

ட்டி' படத்திற்குப் பின்னர் சில மாதங்களாக மின்றி இருந்த ரஞ்சிதா தற்போது மளமளவென்று கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

பட்டிமன்றங்கள் மூலம் பட்டிதொட்டியெங்கும் ண்டுக்கல் லியோனி. 'கங்கா கவுரி' படத்தில் அப்பாவாக நடிக்கும் இவர் சொந்தக்குரலில் ாடியிருக்கிறார்.

துவரை இயக்கியுள்ள படங்களில் வில்லனாக கப்படுத்தியதில்லை. முதன் முதலாக 'வேட்டிய த்தில் சத்யபிரகாஷ் என்னும் புதிய நடிகரை கப்படுத்துகிறார்.

* 'கல்கி' படத்தில் மல்கோவா மாமியாக அறிமுகமான தமிழக தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் ஃபாத்திமா பாபு, இப்போது 'பாசமுள்ள பாண்டியரே' படத்தில் ரோஜாவுக்கு அம்மாவாகவும், 'சொர்ண முகி' படத்தில் தேவயாணிக்கு அம்மாவாகவும் நடித்து வருகிறார்.

* 'பாரதி கண்ணம்மா' படத்திற்குப் பின்னர் முரளி நடிக்கும் 'பொற்காலம்' படத்தை இயக்கி வரும் சேரன், இது முடிவடைந்ததும் சத்யராஜ் நடிக்கும் படத்தை இயக்க இருக்கிறார்.

* பாக்யராஜ் திரைக்கதை எழுதித் தயாரிக்க, பாண்டியராஜன் இயக்கி நடிக்கும் 'கபடி கபடி' படத்தில் ரோஜா, மகேஸ்வரி, ராஜஸ்ரீ ஆகியோர் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்கள்.

## பாப்பா டாட்டா

ஹீராவை பாப்பா என்றுதான் அழைப்பார் அஜித்குமார். இப்போது பாப்பாவுக்கு டாட்டா காட்டிவிட்டார்.

ஹீராவுடன் அமெரிக்கா சென்று ஒரு வாரம் தங்கியிருக்க ஓ.கே. பண்ணியிருந்தார் அஜித். அதற்கிடையே உல்லாசம் படப்பிடிப்பில் மகேஸ்வரியின் சகவாசம் கிடைத்தது. இருவரும் ஊட்டிக்கு பறந்தனர். அமெரிக்கப் பயணம் ரத்தானது. வெறுத்துப்போன ஹீரா தனியாகத்தான் அமெரிக்கா போனார்.

## மாணவிகளின் ஹீரோக்கள்

தமிழக கல்லூரி மாணவிகளிடம் 'விகடன்' சஞ்சிகை மிக முக்கியமான கருத்துக் கணிப்பை சமீபத்தில் நடத்தியது. இன்றைய இளம் ஹீரோக்களில் கல்லூரி மாணவிகளைக் கவர்ந்தவர்கள் யார் என்பதுதான் கேள்வி.

முதலிடத்தில் இருப்பவர் அரவிந்தசாமி. 'பம்பாய்' படத்தில் உயிரே உயிரே என்று அவர் உருகியதை மறக்கமுடியவில்லையாம். அவரிடம் பெரும்பாலான மாணவிகளுக்கு பிடிக்காத ஒரே ஒரு சமாச்சாரம் அவரது பணக்காரத்தனத் தோற்றம் மட்டும்.

என்னதான் சரிவு ஏற்பட்டாலும் மாணவிகளிடம் இரண்டாம் இடம் அஜித்குமாருக்குத்தான். அஜித்திடம் மாணவிகளைக் கவர்ந்தது அந்தக் கண்கள்தானாம். 'ஆசை', 'காதல் கோட்டை' இரண்டு படங்களாலும் பல பெண்களுக்கு தூக்கமே போச்சுதாம்.

மூன்றாவது இடம் பிரபுதேவாவுக்கு. 'மின்சாரக் கனவு' படத்தில் 'வெண்ணிலவே, வெண்ணிலவே' பாடல் பல பெண்களை இரண்டாவது தலையணை தேடவைத்துவிட்டதாம்.

விஜய்க்கு நாலாவது இடம். அப்பால் எங்கே? என்கிறீர்களா? ஒரே ஒரு படம் மூலமே ஏராளமான ரசிகைகளைப் பிடித்து வைத்திருக்கிறார். அடுத்தடுத்த படங்கள் வர அறுதிப் பெரும்பான்மையுடன் முதலிடத்தில் வந்துவிடுவாராம்.




## லவ்தானா?

அப்பாசுடன் காதல் வசப்பட்டுள்ள நடிகைகள் பட்டியலில் தற்போது முதலிடம் சிம்ரானுக்கு.

ஆனால் சிம்ரான் படு உறுதியாக மறுக்கிறார். "நான்சென்ஸ், யார் சொன்னாது காதல் என்று! நானும் அப்பாசும் மொடல் பண்ணும்போது பழக்கம். இப்போது இணைந்து மூன்று படம் செய்கிறோம். அவ்வளவுதான். இன்னொரு விஷயம், அப்பாஸ் மாதிரி பையன்களை கொஞ்சலாம். ஆனால் காதலிக்க முடியாது. என் டேஸ்ட்டே வேற" என்று அதிரடியாய் சொல்லியிருக்கிறார். கொஞ்சவதையாவது ஒப்புக்கொண்டாரே!

## சூர்யாவுக்கு தயக்கமில்லை

| முகப்பில் | மம்முட்டி | அஞ்சு அரவிந்த் |
| --- | --- | --- |
| | படம்:-அரசியல் | படம்:-ஆசைத்தம்பி |

நடிகர் சிவகுமாரின் மகன் சூர்யாவுக்கு தமிழகப் பத்திரிகைகள் எக்கச்சக்கமான முக்கியத்துவம் கொடுக்கின்றன. சிவகுமார் சம்பாதித்து வைத்த நல்ல பெயர் சூர்யாவுக்கு உதவுகிறது.

சூர்யாவுக்கு வயது 23. விஜய்யுடன் நேருக்கு நேர் படத்தில் நடிக்கிறார். இதில் என்ன ஒரு ஆச்சரியம் என்றால் இருவரும் ஒரே கல்லூரியில் படித்த நண்பர்கள்.

'நேருக்கு நேர்' படத்தில் கூட நடிக்கும் சிம்ரான் தனது பெண் நண்பர் என்று சொல்கிறார் சூர்யா. நட்பு மட்டும்தான் என்று நம்புவோமாக. (அப்பா பெயரைக் கெடுக்கமாட்டார்தானே?)

சிவகுமார் நடித்த முதல் படம் 'காக்கும் கரங்கள்'. கதாநாயகி லட்சுமியை கட்டிப்பிடித்தபோது கூச்சம் ஏற்பட்டது. நெளிந்தேன் பின்னர்தான் படிப்படியாக தெளிந்தேன் என்று அந்தக் காலத்தில் சிவகுமார் வெட்கப்பட்டார். ஆனால் மகன் சூர்யாவுக்கு ஆரம்பத்தில்தான் சற்றுத் தயக்கமாம். பின்னர் கதாநாயகி சிம்ரானை உண்டு இல்லை என்னுமளவுக்கு இறுக்கிவிட்டாராம். காலம் மாறிப் போச்சு. இப்போதெல்லாம் வெரி வெரி ஃபாஸ்ட்.

## பெயர் இப்படி

'அருணாச்சலம்' படத்தில் ரஜினி "ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் செய்றான்" என்று பேசிய வசனம் பிரபலம். இப்போது அதனை ஒரு படத்திற்கு தலைப்பாகச் சூட்டிவிட்டார்கள்.

பாடல் வரிகள் மட்டுமல்ல, படங்களில் இடம்பெறும் பிரபலமான வசனங்கள்கூட இனிமேல் படப் பெயர்களாகச் சூட்டப்பட பிள்ளையார் சுழி போட்டுவிட்டனர்.







## ஜா ருமணம்

அடுத்த வருடம் ஜனவரி ம் திருமணம் என்று அறிவித் க்கிறார் ரோஜா. அதற்கிடையே போதி வு சம்பாதித்துவிட வேண்டும் என்று துடியாய் க்கிறார்.

எப்போது கல்யாணம் என்று காண்பவர்கள் எல்லாம் ளத்ததால் செல்வமணியுடன் கலந்து பேசினார். இருவரும் முடிவாக ஜனவரியில் டும் டும் என்று முடிவு செய்துள்ளனராம். தேன்நிலவுக்காக அமெரிக்கா, சுவிற்ஸர்லாந்து போன்ற பல நாடுகளுக்கு ன்று ஜாலியாக இருக்க இப்போதே திட்டமிட்டுள்ளாராம் ரோஜா.

## ஐந்து நாயகிகள்

பிரகாஷ்ராஜ்க்கு இதைவிட ஒரு அரிய வாய்ப்பு கிடைக்காதுதான். பாரதிராஜாவின் தயாரிப்பில் மனோஜ்குமார் இயக்கும் படம் 'குருபார்வை'. பிரகாஷ்ராஜ் கதாநாயகன். கதாநாயகிகள் ஒருவர் இருவரல்ல ஐந்துபேர். குஷ்பு, அஞ்சு அரவிந்த், இந்து, ஈஸ்வரிராய், மும்பை அழகி மதுசிமா ஆகியோர்தான் ஐந்து கதாநாயகிகள்.

தனது யூனிட்டில் உள்ளவர்களுக்கு உதவ பாரதிராஜா தயாரிக்கும் படம் இது. இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி.

பாரதிராஜாவின் சீடர்தான் இயக்குநர் மனோஜ்குமார். அதனால் 'குருபார்வை' பெயர் பொருத்தம்தான்.

## காதோடு சொல்லுகிறோம்

**மீ**ன் நடிகையின் தாய்க்குலம் மகா புத்திசாலி. தமிழ்நாட்டுக்கு வெளியே படப்பிடிப்புக்கு நடிகை சென்றால் அந்தந்த மாநில நடிக நண்பர்கள் படப்பிடிப்புக்கு வந்துவிடுவார்களாம். படப்பிடிப்பு முடிந்ததும் நடிகையை அழைத்துப் போய் அவர் விருப்பப்பட்டதை வாங்கிக் கொடுப்பார்களாம். பெறுமதி சில இலட்சங்கள். பரிசாக வந்த பொருட்களை அதே கடைகளில் கொடுத்து பணத்தை திருப்பி வாங்கிக் கொள்வாராம் நடிகையின் தாய்க்குலம். முன்னர் நடிகையாக இருந்ததால் அவருக்கும் நல்ல அனுபவம் இருக்கிறது.

**மு**ன்னர் படங்கள் இல்லாமையால் மதுவை நாடினார் அந்த மூன்றெழுத்து இளம் நடிகர். 'மு'வில் அவரது பெயர் ஆரம்பிக்கும். சமீபத்தில் அவரது சில படங்கள் ஹிட்டாகின. இப்போது அவரது மனைவி கவலையில் இருக்கிறார். மதுவில் விழுந்தால் ஆவது பரவாயில்லையாம், மாதுவில் விழுந்து போனாராம் நடிகர். தனது படங்களில் புதிய புதிய நடிகைகளாக சிபாரிசு செய்து நன்றியை தனக்கு பிடித்த முறையில் பெற்றுக் கொள்கிறாராம். அதுதான் மனைவி கவலையில் இருக்கிறார்.

**ம**ந்த்ரா இப்போது ஒரு மூன்றெழுத்து நடிகரின் பெயரை மந்திரம் போல் உச்சரித்துக் கொண்டிருக்கிறாராம். அந்த நடிகரும் மந்திரத்துக்கு கட்டுப்பட்டுத்தான் போனாராம். முன்பு பூ நடிகையும் அந்த நடிகரின் பெயரை தன் இதயத்தில் குத்திக்கொண்டுதான் திரிந்தார்.

**ர**ம்ப நடிகையும், நக்ம நடிகையும் குமார நடிகருடன் ஒரு படத்தில் நடிக்கிறார்கள். யாருக்கு முக்கியத்துவம் என்று போட்டி. இடையில் மாட்டிக்கொண்டு தவிக்கிறாராம் நடிகர்.

## வ்வியமான அஞ்சு அரவிந்த்

முரசின் முகப்பில் இருக்கிறார் அஞ்சு அரவிந்த். படு தமான பெண். யார் வம்பு தும்புக்கும் போக மாட்டார். னால்தான் இன்னும் இவர் பற்றிய வம்பு எதுவும் வரவில்லை. ரஜினியோடு 'அருணாச்சலம்' சிவாஜியோடு 'ஒன்ஸ்மோர்' ண்டிலும் நடித்திருந்தாலும் தலையில் கனம் கிடையாது. 'ஒன்ஸ்மோர்' படத்தில் விஜய்க்கு அந்தரங்கச் செயலாளராம். ஜி கணேசனோடு இணைந்து நடித்த காட்சிகளில் ர்ஷன் ஏறிவிட்டதாம்.

காலில் விழுந்து ஆசிபெற்ற அஞ்சு அரவிந்த்தை ஆசிர்வதித்த ஜி, சில காட்சிகளில் எப்படி நடிக்க வேண்டும் என்றும் ல்லிக்கொடுத்தாராம். படத்தில் இடைவேளை போடும் து அஞ்சு அரவிந்த் தற்கொலை செய்து கொள்ளும் சி வருமாம். அதன்பின்னர்தான் சிம்ரான் படத்தில் கிறாராம். கதையை சொன்னது தப்பல்லோ?

## மகேஸ்வரி உல்லாசம்

பதினைந்து படங்களில் நடித்துவிட்ட மகேஸ்வரிக்கு சினிமா உலகம்மீது திடீர் வெறுப்பு ஏற்பட்டதாம். தெலுங்கு ஹீரோ சக்கரவர்த்தியுடன் உறவு கசந்துவிட்டதுதான் காரணமாம். சினிமாவைவிட்டே ஓடிப்போய்விடலாமா என்று நினைத்த நேரத்தில்தான் 'உல்லாசம்' பட வாய்ப்பு கிடைத்தது. ஆளே மாறிவிட்டார் மகேஸ்வரி. "இவ்வளவு விரைவாக படப்பிடிப்பு முடிந்ததே என்று கவலையாக இருக்கிறது. ஒரே ஜாலியாக இருந்தது" என்று பூரிக்கிறார் மகேஸ்வரி. பூரிப்புக்கு காரணம் இல்லாமல் இல்லை.

## ஆடியிலே பிரிவு

ரம்பாவுடன் ஜோடி சேர்ந்த சுந்தர புருஷன் படம் சூப்பர் ஹிட்டானதால் லிவிங்ஸ்டன் நிரந்தர கதாநாயகனாகிவிட்டார். முன்னாள் வில்லனான லிவிங்ஸ்டன் மீண்டும் வில்லனாகத் தயாராக இல்லை. அதனால் புதிய படவாய்ப்புக்களை மிகக் கவனமாகத் தேர்வு செய்கிறார்.

அலசி அலசிப் பார்த்து லிவிங்ஸ்டன் அடுத்துத் தெரிவு செய்துள்ள படம் 'ஆடிமாப்ளே'. கதை கொஞ்சம் சுவாரசியமான சங்கதி. புது மணத்தம்பதிகள் ஆடி மாதத்தில் ஒன்று சேரக்கூடாது. அதனால் பிரித்து வைத்துவிடுவார்கள். அப்போது மாப்பிள்ளை தவிக்கும் தவிப்பைத்தான் நகைச்சுவையாகச் சொல்லப் போகிறார்களாம். அதாகப்பட்டது, கிளு கிளு நகைச்சுவை.

கதை, திரைக்கதை லிவிங்ஸ்டன். இயக்கம்: விஷ்ணுஹாசன். இசை; தேவா. பாடல்கள்; வைரமுத்து.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# நம்பிக்கை நெஞ்சில்! புன்னகை உதட்டில்!



பெண்கள் எந்தவகையிலும் ஆண்களுக்குக் குறைந்தவர்களல்லர் என்பதனை நிரூபிக்க வேண்டும். ஆண்களிடம் மட்டுமல்ல ஏனைய பெண்கள் மத்தியிலும் தலை நிமிர்ந்து வாழ சில சுலபமான வழிகளைக் கையாளலாம்.

* திருமணமானபின் கணவன் வீட்டில் வாழ நேர்ந்தால் மாமனார், மாமியார், மற்றும் கணவரின் சகோதர சகோதரிகள் மத்தியில் தன்னம்பிக்கையுடன்- உங்களுக்குரிய கௌரவத்தை இழக்காது வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இதனால் அவர்களுக்குப் பணிந்து, மரியாதையில்லாமல் நடந்து கொள்ள வேண்டும் என்று அர்த்தமல்ல. அவரவர்க்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் உங்கள் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
* நீங்கள் ஒன்றுமே அறியாத-சிறு பிள்ளைத் தனமாக நடக்கலாகாது. முதிர்ச்சியடைந்தவராகக் காட்டிக் கொள்ளவேண்டும். இளகிய இரும்பாக உங்களைக் காட்டிக் கொள்ளலாகாது. உங்கள் மனத்தளவில் திட நம்பிக்கைவைத்துச் செயற்பட முடியுமானால் மற்றவர்கள் உங்களை இலகுவில் மூழ்கடித்துவிட முடியாது.
* உங்களுக்குச் சரியெனப்பட்ட- உங்களுடைய கருத்தை எவராவது ஏற்றுக் கொள்ளாமல் வாதிட முற்பட்டால் உடனடியாக எதிர்வாதம் புரிந்து உங்கள் கருத்தை அவர்களிடம் வலியுறுத்த வேண்டாம். "உங்களைப்போல்தான் நானும் சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? என் கருத்து எனக்குப் பூரணமாக ஒத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கிறதே!" என்று கூறிவிடுங்கள். முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொள்ளாமல் புன்னகையுடன் இதனைக் கூறுங்கள்.
* வேண்டுமென்றே உங்களை- எக்காரணமுமின்றி- அவமானப்படுத்த அனுமதிக்கலாகாது. ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் அத்தகைய அவமதிப்புக்களைப் பொருட்படுத்தாமல் இருந்து விடுங்கள். அவ்வாறு பொருட்படுத்தாமல் நடந்து கொள்வதும் அவர்களைப் பின்னடைய வைத்துவிடக் கூடும். அதற்கும் மீறுமானால்- எதற்கும் ஒரு எல்லை உண்டு என்பதை நிரூபிக்கும் வகையில்- திருப்பிக் கொடுங்கள். உங்களாலும் முடியும் என்பதைக்காட்ட அதுவே போதுமானதாகும்.
* சிலர் தங்கள் கருத்தை உங்கள்மேல் திணிக்க முற்படுவார்கள். நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று (கணவனைத் தவிர்ந்த) அவர்கள் வற்புறுத்தினால், "உங்கள் கருத்தை நான் வெறுமனே ஏற்றுக்கொண்டால், நீங்கள் என்மீது நல்லெண்ணம் கொண்டு என்மீது அக்கறை காட்டக்கூடும். ஆனால், அது போலித்தனமான எனது இசைவே தவிர உண்மையானதல்ல. அது நம்பிக்கைத் துரோகமுமாகும்," என்று அமைதியாகக் கூறிவிடுங்கள்.

## சூட்டோடு சூடு

சில பெண்களுக்கு உடலில் சூடு அதிகமாக இருக்கும். பகலில் அடிக்கடி தூங்கி விழுவார்கள். ஆனால் இரவில் படுக்கையில் போய் விழுந்தால் புரண்டு புரண்டு படுப்பார்கள். தூக்கமே வராது. தாகம் கூடுதலாக இருக்கும். தலைவலி, தடிமன் அடிக்கடி வந்து தொந்தரவு தரும்.

செம்பருத்தி இலை இரண்டு கைப்பிடி எடுத்து நீரில் போட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்க விடுங்கள். 10 நிமிடங்களின் பின்னர் எடுத்தால் இலைகள் அவிந்து கூழ் போன்றிருக்கும். இலைகளை அகற்றிவிட்டு நன்றாக ஆறியபின் அக்கூழை உச்சிமுதல் உள்ளங்கால்வரை தடவுங்கள்.

10 நிமிடங்களின் பின்னர் குளிர்ந்த நீரில் குளியுங்கள். இவ்வாறு வாரம் ஒரு தடவை அல்லது இரு தடவைகள் செய்து வந்தால் உடல் உஷ்ணம் தணிந்து உடல் குளிர்ந்து விடும்.

# தள்ளிப்போகும் குழந்தைப் பேறு! தகுந்த யோசனைகள்!

திருமணமாகிப் பல வருடங்களாகியும் குழந்தைச் செல்வமில்லாமல் துயரக்கடலில் தத்தளிப்பவர்களுமுண்டு. மலட்டுத்தன்மைக்குப் பல காரணங்களுள்ளன. குழந்தைகளை உற்பத்தி செய்யும் உயிரணுக்கள் குறைபாடோ, கருமுட்டைக் குறைபாடோ கூட இருக்கலாம். இவற்றை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு தக்க வைத்தியர்களைச் சார்ந்தது.

உடலியல் ரீதியாக உள்ள குறைபாடுகளையும் இயற்கை வைத்தியம் மூலம் போக்க முடியும். எமது முன்னோர்கள் இதற்கான வழிமுறைகளை அனுபவரீதியாகக் கண்டு கூறியிருக்கிறார்கள். இயற்கை மருத்துவ முறையைப் பின்பற்றி குழந்தைப் பேறுக்குரிய உடலின் இயல்புகளைத் தூண்ட முடியும் என்று கூறியுள்ளனர்.

போதுமான புரதம், தாது உப்புக்கள், விட்டமின்களின் குறைபாடுகளினால் கூட மலட்டுத்தன்மை ஏற்படலாம். விட்டமின் B, விட்டமின் E, இரும்புச்சத்து, துத்த நாகச் சத்து ஆகியவை செறிந்த உணவு வகைகளை அன்றாடம் சேர்த்துக் கொள்ளவேண்டும். அரிசி, கோதுமை, பால், அவரை விதைகள், பாதாம் பருப்பு, பேரீச்சம்பழம், பட்டாணி, சர்க்கரை, கோழி முட்டை, கீரை ஆகிய உணவுவகைகளை தினசரி உண்ண வேண்டும். இவை இருபாலாருக்கும் பொதுவானவை.

கோதுமை ரொட்டி (சப்பாத்தி) பெண்களுக்கு உகந்தது. இவற்றோடு பழ வகைகள், காய்கறிகள் சேர்க்கப்படவேண்டும். ஈர வெங்காயம் மற்றும் வெள்ளைப்பூடு போன்றவை ஆண்களுக்கு வீரிய சக்தியைத் தரவல்லன. வல்லாரை, பசலிக்கீரை, முருங்கை மற்றும் பொன்னாங்காணி ஆகிய கீரை வகைகள் நாளுக்கு ஒன்றாக மாறி மாறி உண்ணலாம்.

ஆணுக்கோ, பெண்ணுக்கோ கொழுப்பு அதிகமிருந்தாலும் மலட்டுத்தன்மை ஏற்படலாம். இதற்கு ஒரு வாரம் முழுவதும்- மூன்று வேளையும் பழங்களை உண்டு பழரசங்களைப் பருகிவரவேண்டும். வத்தகப் பழம் ஒவ்வொரு நாளும் கிடைத்தாலும் உண்ணலாம். பேரிக்காய், ஆப்பிள் போன்ற பழங்களைத் தாராளமாக உண்ணலாம். அன்னாசி மற்றும் பப்பாளிப்பழங்களை குறிப்பிட்ட சில வாரங்களுக்கு ஒதுக்கிவிடுவது நல்லது.

இரண்டாவது வாரத்தில் பழங்களுடன் ஒரு தேக்கரண்டி தேனை மூன்று வேளையும் பருக வேண்டும். வெண்டிக்காயையும் கரட்டையும் கொதி நீரில் போட்டு உடனே எடுத்துப் பச்சையாகவே சாப்பிடலாம். பால் காலையிலும் மாலையிலும் ஒரு தம்ளர் பருகலாம்.

இருவாரங்களின் பின்னர் புழுங்கல் அரிசிச் சோறு சாப்பிடலாம். ஈர வெங்காயம் வெள்ளைப் பூடு சேர்த்துக் கொள்ளலாம்.



கொண்டைக் கடலையை நீரில் நனைத்து ஈரத்துணியில் வைத்துக் கட்டி நிழலில் தொங்க விடுங்கள். இரண்டு நாட்களின் பின்னர் கடலைகள் முளை விட்டிருக்கும். பாசிப்பயறு மற்றும் குரக்கன் போன்றவற்றையும் சம அளவாக எடுத்து கடலையைப் போல் முளைவிட வைத்து உலர்த்தி எல்லாவற்றையும் அரைத்து நீர்ப்பிடிப்பில்லாத டப்பாவில் சேர்த்து வையுங்கள்.

பகலில் இடை வேளைகளில் இம்மாவில் இரண்டு பிடி எடுத்து தேங்காய்த் துருவல் மற்றும் சீனி அல்லது சர்க்கரை சேர்த்து, உருண்டைபோல் பிடித்து உட்கொள்ளலாம்.


இவ்வாறு 3 மாதங்கள் வரை உண்டு வந்தால் ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி மலட்டுத்தன்மை நீங்கி அழகான- ஆரோக்கியமான குழந்தை பிறக்கும்.

காய்ந்த கொடி முந்திரி (திராட்சை வற்றல்) 50 கிராம் எடுத்து சுத்தமாகக் கழுவி தேனில் இரவில் ஊறவைத்து காலையில் உண்ணலாம். சுத்தமான தேன் இல்லாவிட்டால் இரவில் பச்சைத் தண்ணீரிலும் திராட்சை வற்றலை ஊறவைத்து அடுத்த நாள் பாலுடன் உண்ணலாம்.

பெண்கள் தினசரி காலையில் இடுப்பளவு தண்ணீரில் 10 நிமிடம் வரை உட்கார்ந்திருத்தலும் வயிற்றில் சூடுகாரணமாக மலட்டுத்தன்மை இருப்பின் அத்தன்மை நீங்கி குழந்தை உற்பத்தியாகும்.

பெண்களுக்கோ ஆண்களுக்கோ தடையின்றி இரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும். இதற்கு மிகச் சுலபமான ஒரே வழி- தினசரி 20 நிமிட- வேகமான நடைப்பயிற்சி. திறந்த வெளியில் நடைபயிலுதல் உகந்தது.

# 92 நாள் இடைவெளியில் இரட்டைக் குழந்தைகள்



படம் 1

சிக்காகோவைச் சேர்ந்த ஜேனட் பசாயே (35),92 நாட்கள் இடைவெளியில் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்து மருத்துவ சாதனை செய்திருக்கிறார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 26ம் திகதி, ஜேனட்டுக்கு குறைப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை ஜோஷுவாவின் எடை 500 கிராம் தான். குழந்தை தற்போது 1.8 கிலோ கிராம் எடையுடன் மருத்துவமனை கவனிப்பில் உள்ளது.

முதற் குழந்தை பிறந்து 92 நாட்களான அன்றைய தினம், ஜேனட்டுக்கு பிரசவவலி ஏற்பட்டது. அவருக்கு 2.8 கிலோகிராம் எடையுடைய ஆண் குழந்தை பிறந்தது.



படம் 2

ஒரே பிரசவத்தில் சுமந்த இரட்டைப் பிள்ளைகளில் இரண்டாவது குழந்தையை ஜேனட் 92 நாட்கள் இடைவெளியில் பெற்றெடுத்து வரலாறு படைத்திருக்கிறார்.

ஆக நீண்ட இடை வெளியில் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய் என்ற பெருமையை இதுவரை இத்தாலிய மாது ஒருவர் வைத்திருந்தார். அவர் 1987, 1988 ஆண்டுகளில் 36 நாட்கள் இடைவெளியில் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்.

இத்தாலிய மாதின் சாதனையை ஜேனட் முறியடித்து விட்டார்.

ஜேனட்டுக்கு கடந்த ஆண்டு பிறந்த குழந்தை இன்னும் இரண்டு வாரங்களில் வீட்டுக்கு அனுப்பப்படும். இரண்டு குழந்தைகளையும் வீட்டுக்குக் கொண்டு செல்ல ஆர்வத்துடன் இருப்பதாக அவர் கூறினார்.

1வது படம்: ஜேனட் பசாயே 22 வார கர்ப்பிணியாக இருந்தபோது கருப்பையில் இரண்டு சிசுக்களும் எப்படி இருந்தன என்பதை முதல் படமும், 25வது வாரத்தில்- இரட்டைக் குழந்தைகளில் ஒன்று பிறந்த பிறகு- இரண்டாவது இரட்டைக் குழந்தை கருப்பையில் தனியாக வளர்வதை அடுத்து படமும் காட்டுகிறது.

2வது படம்: 92 நாட்களுக்குப் பிறகு பிறந்த இரண்டாவது இரட்டைக் குழந்தையுடன் தாயார் ஜேனட்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? தர்ஹா நகர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பாத்திமா உனைஸா, 48/1, ஜீலானி வீதி, தர்ஹா நகர்.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பரிசு பெற்றவர்

முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்:

**யோகேஸ்வரி றிச்வே**
மௌண்ட்வேணன் எஸ்ரேட்,
பத்தனை.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** BT

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-06-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது **சுகந்தினி**

## அவல் கேசரி

**தேவையானவை:**

| | |
|---|---|
| அவல் | - 500 கிராம் |
| சீனி | - 500 கிராம் |
| பால் | - அரைலீட்டர். |
| நெய் அல்லது மார்ஜரீன் | - 200 கிராம் |
| முந்திரிப் பருப்பு | - 20 கிராம் |
| திராட்சை (வற்றல்) | - 10 கிராம் |
| கேசரி பவுடர் | - 1/2 தேக்கரண்டி |
| பச்சைக்கற்பூரம் | - சிறிதளவு. |

**செய்முறை:**

அவலை நீரில் சிறிது நேரம் ஊற வைத்து நீரை வடித்து உலர்த்தவும். சிறிதளவு நெய் அல்லது மார்ஜரீனை வாணலியிலிட்டு அவலை வறுத்து ஓரளவு காய்ந்ததும் அதனைத் திரித்தெடுக்கவும். திராட்சையையும் முந்திரியையும் சிறிதளவு வறுத்தெடுக்கவும். ஒரு கரண்டிப் பாலில் கேசரிப் பவுடரையும் பச்சைக் கற்பூரத்தையும் கலந்து கொள்ளவும். எஞ்சிய பாலுடன் அதே அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்கவிடவும் அதில் அவலைக் கொட்டிக் கிளறவும். வெந்துவரும் போது சீனியைச் சேர்த்துக்கிளறவும். இறுகிவரும் நேரத்தில் திராட்சை, முந்திரிப்பருப்பு ஆகியவற்றையும் சேர்த்து கேசரிப்பவுடர் சேர்ந்த பாலையும் ஏலப் பொடியையும் போட்டுக் கிளறவும். எஞ்சிய நெய்யை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றவும். இறுகிய களிபோன்ற பதம் வந்ததும் கீழே இறக்கி ஆறவிடவும். ரவா கேசரி போல் துண்டு துண்டாக வெட்டி உண்ணலாம்.


தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜிவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 14

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜிவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## சரணாலயமொன்றுக்குள் வந்துவிடு!

ஐரோப்பாவின்
ஆரவாரங்களுக்கு மத்தியில்
சொந்தச் சோகங்களோடு
தனித்தீவுபோல
தனித்திருக்கும் உயிரே!
–0–
பனிவிழும்
பாதைகளினூடே
பயணிக்கும் போதும்
பாலைவன மனதோடு
கருகிவாழும் இதயமே!
–0–
நிலவு அழுது வழியும்
நிசப்த இரவுகளில்
நினைவுகள் தீப்பிடித்து
கண்ணீர் வழிந்தோடும்
விழிகளோடு போராடுபவனே!
–0–
நினைவுகளை மறப்பதற்குத்
தூர நாடொன்றில்
அடைக்கலம் புகுந்த பின்பும்
எண்ணங்களிலிருந்து விடுபட
உன்னால் முடியவில்லையே!
–0–
உயிரென நினைத்தது–
உறவென அழைத்தது
கானல் நீரான பின்பும்–அதைக்
கிண்ணத்தில் நிரப்பித்
தாகம் தீர்ப்பதற்காகவா
தவிப்போடு காத்திருக்கிறாய்?
–0–
உன்னை மறப்பதுதான்
அவளின் நிம்மதி
என்றான போது,
அவளின் நினைவுகளிலே
உனக்கொரு நரகத்தை
நீ ஏன் உருவாக்கினாய்?
–0–
கனவுகளின் தோல்விக்காக
வாழ்வைப் பலியிட்டு
வாழ்வுக்கும் சாவுக்குமிடையில்
வருடக் கணக்காக
வாழ்ந்துகொண்டே செத்ததில்
என்ன நிம்மதியைக் கண்டாய்?
எந்த நினைவை மறந்தாய்?
–0–
மரணத்தின் மூலமே
மண்ணின் மடிமீது
நிம்மதியாகத்
தலைவைத்துத்
தூங்க முடியுமென
நீ கொண்ட தீர்மானம்
பிழையென்பதை நம்பு!
–0–
கனவுகளோடு வாழ்வதாக,
கண்ணீரால்–
வாழ்வின் தாகங்களைத் தீர்ப்பதாக
இனிமேலும் என்னோடு
பிடிவாதம் பண்ணாதே!
–0–
உனைப் போலவே
எல்லோரும் வாழ்ந்திருந்தால்
உப்பு நதிகள் பல
உலகிலே வழிந்தோடும்!
–0–
உன் கண்ணீரால்
எனை அழவைக்காதே!
உன் காயங்களால்
எனை நோகடிக்காதே!
உன் வேதனைகளால்
எனைப் பயமுறுத்தாதே!
–0–
நான் அன்பைத் தருகிறேன்,
ஆறுதல் தருகிறேன்:
உன் வாழ்விலொரு
சகோதரியாய்,
உன் பாதையில் ஒரு
சத்திரமாய்
இருந்துவிட்டுப் போகிறேன்!
–0–
எனது உறவொன்றே
உனக்கு இனி ஆறுதலென்பது
உண்மையானால்–
சாவின் வழியை விட்டுவிட்டு
சரணாலயமொன்றுக்குள்
வாழத் தயாரென–எனக்கொரு
சத்தியம் செய்து கொடு!
–0–

**செல்வி பஹீமா ஜஹான்**

## என்னைக் காதலி

என் கவிதைத்
துளிகளிற்கு
பிரசவ வலி என்பது
கிடையாது;
ஆனாலும்
அது பிறக்கும் போதே
அழுது கொண்டுதான்
பிறந்தது...!
***
அப்போது ,
இரவை வெறுத்ததும்...
உனக்காகதான்....!
நிலவு எரித்ததும்
அதற்காகத்தான்..
பகலில் உனைக்
காண வேண்டுமென்று...!
***
என் விழிகளுக்கு
உறக்கமென்பது
கிடையாது...
ஆனாலும்,
பாரமாய்க் கிடக்கும்
கண்ணீர்த் துளிகளை
அவ்வப்போது
இறக்கி வைத்துக் கொள்கிறது!
***
உன் நினைவுக்
கல்லறையில்
என் மனம்
ஏனோ தவம் கிடக்கிறது...
ஏதோ கேட்டுத் தவிக்கிறது....
கொடுத்து விடேன் அதை!
***
உன் வார்த்தைகள்
அனைத்தையும்
என் இதயச் சுவற்றில்
செதுக்கி வைத்தேன்...
உன் பார்வைக்காக....!
ஆனால்
கண்காட்சிக்கு நீ
இன்னும் வரவில்லை!
***
என் உயிர்
உன்னிடத்தில்
எங்கோ சிக்கித் தவிக்கிறது!
உச்சி முதல் பார்த்து வந்தேன்,
இறுதியில்
உன் உள்ளங் காலுக்குள்
மிதிபட்டுக் கிடக்கிறது...!
***
இறந்தாலும் நான்
இறுதியாகக் கூறிய
வார்த்தை–உன்
பெயராகத் தான் இருக்கும்...!
அப்போது கேட்டுப் பார்
யாரையாவது...
***
நீ கிழித்துப் போட்ட
என் காதல் கடிதங்கள்
வானத்தில் முகிலாக சிதறிக்
கிடக்கிறது....
பொறுத்திரு பெண்ணே!
மாரி வரட்டும்;
முகில்களெல்லாம் ஒன்றுசேர்ந்து
என் சோகத்தைச் சொல்லியழும்...
அப்பொழுதாவது
என்னைக் காதலி...!

**எஸ். சுரேஸ்–வவுனியா.**

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர்விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 60 பேரின் பெயர், விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

61. எஸ். எழில்வேந்தன், வெலிமடை தோட்டம், வெலிமடை.
62. எஸ். லக்ஸ்மி மது, 233, கல்வலவத்தை, குருதெனிய, கண்டி.
63. நிரஞ்சலா சத்யநாதன், 1057/பி, தூவவத்தை, ராகம.
64. ஏ.எம்.எம்.நியாஸ், 557 கே/1, எல்லை வீதி, மருதமுனை-1.
65. எஸ். ரதீஸ், 1, தும்புருகிரிய வீதி, அட்டன்.
66. வை. ஜெயந்தன், உபதபால் அலுவலகம், நெலுக்குளம், வவுனியா.
67. ரி. சசியானி, 69 ஏ, பெரேரா பிளேஸ் கவ்டான, தெஹிவளை.
68. ஏ.டபிள்யூ. ஹஸ்லா, ஏ 121/, ஆர்.எல்.திட்டம், எருக்கலம்பிட்டி, பாலாவி.
69. பி. நளினி, ஜி 1/1, தே.வீ.தி. மாளிகாவத்தை.
70. செல்வி பி. கிருஷ்ணானந்தி, 256/ 23 பி, தில்லை நகர், உள்துறைமுக வீதி, திருமலை.
71. பாத்திமா ஷிபானாஸ், 4/42, தரலான்ட் வீதி, மாத்தளை.
72. ஜெ. தீபா, மூர் வீதி, மன்னார்.
73. அலன் மணியநேசன், 55/8, மத்திய வீதி, உவர்மலை, திருமலை.
74. ரீ. சுகந்தினி, குவாரி வீதி, கல்முனை-2.
75. எஸ். அயூப், டீன் கொமியூனிகேசன், நுரைச்சோலை.
76. பி. தங்கா, 61/14, சென்மேரிஸ் ரோட், ஜா-எல.
77. எம்.ஐ.எம். உவைஸ், 86, புதுப்பள்ளி வீதி. அக்கரைப்பற்று-5.
78. கே. பிரசாந்தன், 20, உதயராஜா மாவத்தை. பதுளை.
79. தீசன் திரவியநாதன், 113-335 COPER ST OTTAWA,ONT- K2P OG6, CANADA.
80. தயாளன், GELDERNER STR-72, 47623 KEVELAER, GERMANY.

(ஏனைய விபரங்கள் அடுத்த வாரம்)

## தேன் கிண்ணம்

## தருமா புது உறவு?

தண்ணிக்குள் தத்தளித்தது ஒரு நிலவு;
தரைக்குத் தூக்கி எடுத்தபின் தெரிந்தது
அது வானத்து நிலவு!
•
வட்ட முகம், ஒளி சொட்டும் விழி
நீருக்குள் இருந்த கயல் முகத்தில் துடித்தது.
கருமேகம் நீர்திவலையில் சொட்ட
துகில் ஈரப் புடவையில் நடுங்கும் தண் நிலா
நான் தொட்டு எடுத்த பட்டு நிலா...!
•
தக்காளிப் பழம் போல் தான் அவள் மேனி!
காண முன்பு நான் ஞானி
உதறி எறிந்தேன் மனக் காவி
இனி அவளே என் தேவி..!
•
படை கொண்டு வரும் கண்கள்....
திடம் கொண்ட என் மனதில் காதல் புண்கள்...
விடம் கொண்டதா விழி...?
புடம் போட்டதா இவள் மொழி...?
அடடா அடடா... இது என்ன
அற்புதப் படைப்பா...?
•
எண்ணம் உடைப்பெடுத்து காதல்
கடலுக்குள் விழுந்தது;
விழுந்ததில் அழகாய் முத்தாய், சிப்பியாய்,
விரிந்தது; கனவுகள் நட்சத்திரங்களாய் மின்னியது.
கைகளுக்குள் பூவாய் அவள்
மனதிற்குள் மட்டுமே கனவுச் சுமை!
•
எண்ணம், சிந்தனை எல்லாம் அவள் வசம்!
மைவிழியால் எனைத் தகர்த்தாள்!
மலர் வனமாய் நெஞ்சில் முளைத்தாள்!
•
எண்ணங்கள் அவளுக்குத் தந்தேன்:
வண்ணங்கள் விழியில் பார்த்தேன்:
பெண் அவள் வருவாளா..?
குளிர் புன்னகை தருவாளா...?
•
தண்ணிக்குள் விழுந்தது அவள்:
காதல் குளிரில் நடுங்குது இவன் உடல்!
இது குரியன் கொண்ட நிலவு
தருமோ சொல்லு புது உறவு!
•

**ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு.**

## அந்த நாள் ஞாபகம்

கொஞ்சம் கிரிக்கெட் ஆர்வம், கொஞ்சம் கூர்ந்த பார்வை, கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்தால் போதும்; யார் யார் என்று கண்டு பிடித்துவிடலாம். இந்தியக் கிரிக்கெட் கப்டன் சச்சின் டெண்டுல்கரும், வினோத் காம்ளியும் சிறுவயதில் எடுத்துக்கொண்ட படம்தான் இது. இருவரும் பள்ளித் தோழர்கள். ஒரே பயிற்சியாளரிடம் கிரிக்கெட் பயின்றவர்கள்.





## அதிசய அனுபவம்!

உன் பார்வைகள்
என்னை
வாசித்திராவிட்டால்...;
என் பேனா
இன்னும்
விழித்திருக்கவே
வாய்ப்பில்லை!
**
நீ ரசித்திராவிடின்
என் வீணைகள் எல்லாம்
என்றோ
தந்தியறுந்திருக்கும்!
**
உன் புன்னகை
தூரிகைதான்
என்
கனவுகளுக்கு
வர்ணம் தீட்டியது!
**
உனக்குள்
சிறைப்பட்ட,
பின்னர்தான்
கைதியாய்
இருப்பதற்காக
கர்வப்படுகிறேன்!
**
பெண்ணே
கல்லாக
இருந்த என்னை
சிற்பமாய்,
செதுக்கிய
உன் காதலே
என் பருவத்தின்
அதிசய
அனுபவம்!

**பர்ஸான்–யடவத்த, நிககொள்ள.**

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.06.1997 தொடக்கம் 14.06.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம் — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, பணச் செலவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- தேககம் பாதிப்பு, பொருள் விரயம். | பி.ப. 2 | மணி |
| சனி- மனக் கலக்கம், அந்நியர் சகவாசம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம் — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன விரோதம், மனக் கவலை | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- வீண் பழி கேட்டல், பணக் கஷ்டம். | காலை 7 | மணி |
| புதன்- துயர் அதிகம், முயற்சி தடை. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 | மணி |
| சனி- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், ஆடம்பர செலவு. | பி.ப. 4 | மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 | மணி |
| புதன்- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, காரிய சித்தி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் உயர்ச்சி. | பி.ப. 2 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, தெய்வானுகூலம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, செலவு அதிகம். | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், பயனற்ற செயல். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- தொழில் பிரச்சனை, மனக்கலக்கம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் 12 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், புதன். |
| மிதுனம் | - வெள்ளி. |
| சிம்மம் | - இராகு. |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | காலை 9 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 | மணி |
| புதன்- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், இனசன விரோதம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மகரம் — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- செலவு மிகுதி, கடன் படல். | பகல் 12 | மணி |
| புதன் - அதிகார விருத்தி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. 3 | மணி |
| சனி- இனசன நன்மை, பண வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்: — சுப நேரம்

(மகம, பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியக்கேடு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| புதன்- காரியானுகூலம், பண வரவு. | பகல் 11 | மணி |
| வியாழன்- பலவித பேறு, அந்நியர் சகவாசம். | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 3 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| புதன்- தொழில் பிரச்சனை, மனக் கலக்கம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- வீண் செலவு, கடன் தொல்லை. | மு.ப. 10 | மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், பயனற்ற செயல். | பி.ப. 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### விருச்சிகம் — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், செல்வாக்கு மேன்மை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 11 | மணி |
| வெள்ளி- இனசன விரோதம், பொருள் விரயம். | பி.ப. 2 | மணி |
| சனி- கடன் தொல்லை, மனக் கவலை. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், புதிய முயற்சி. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- தேககம் பாதிப்பு, பொருள் விரயம். | பகல் 11 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 1 | மணி |
| சனி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, மனக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, பண வரவு. | மு.ப. 10 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- தொழில் நன்மை, பண வரவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4


படிப்பகம்



குலத்து மாந்தர்க்குக் கற்பியல் பாகுமாம்;
கொடுமை செய்தும் அறிவை அழித்தும் நம்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புக்கள் கேட்டீரோ?
-சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

அந்தக் காட்டில் வசித்து வந்த காட்டெருமை "நான் தான் இந்தக் காட்டில் பெரும் பலசாலி" என்று எல்லா விலங்குகளிடமும் கர்வமாகக் கூறி வந்தது.

ஒரு நாள் காட்டெருமை நின்ற பக்கமாக ஒரு கரடி சென்றது. கரடியைக் கண்ட காட்டெருமை அதனைக் கூப்பிட்டு, "இந்தக் காட்டில் யார் பலசாலி தெரியுமா?" என்று கேட்டது. அதற்குக் கரடி, "இந்தக் காட்டில் யானை தான் பெரும் பலசாலி!" என்று சொன்னது.

இதைக் கேட்ட காட்டெருமை பலமாகச் சிரித்துவிட்டு,

"முட்டாளே! தெரியாவிட்டால் தெரியாது என்று சொல். நான் தான் இந்தக் காட்டில் பெரும் பலசாலி. என்னைப் பொறுத்த வரை யானை ஒரு கொசுவுக்குச் சமமம்." என்று கூறியது.

இதைக்கேட்ட கரடிக்குக் குழப்பமாக இருந்தது. அவ்விடத்தை விட்டுப் போகும் வழியில் யானையைக் கண்டது கரடி.

"யானையாரே! காட்டெருமைதான் இந்தக் காட்டிலேயே பெரிய பலசாலியாம். நீங்கள் அவருக்குக் கொசுவுக்குச் சமமாம். அவர் சொல்வது உண்மையா?" என்று கேட்டது.

காட்டெருமையின் சிறிய புத்தியும், கர்வமும் தான் அதை இப்படிப் பேச வைக்கின்றன என்று உணர்ந்தது யானை.

அது போகப் போகத் திருந்தி விடும் என்று நினைத்துப் பெருந்தன்மையுடன் கரடியிடம் காட்டெருமைதான் பலசாலி என்று சொன்னது.

ஒருநாள் எதிர்பாராத விதமாக யானையும், காட்டெருமையும் சந்தித்துக் கொண்டன.

"என்ன யானையே! கரடி உம்மிடம் ஏதாவது சொன்னதா?" என்று கேட்டது.

"ஆம். நீர் என்னை விடப் பலசாலியா என்று கேட்டது. அதற்கு நான் காட்டெருமையாகிய நீர்தான் பலசாலி என்று சொன்னேன்," என்றது யானை.


"ம். அப்படிப் பயம் இருக்கட்டும். என்னிடம் ஏதாவது வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவேன்!" என்று பயமுறுத்தியது காட்டெருமை.

"காட்டெருமையே! நீ தான் இந்தக் காட்டிலே பெரிய பலசாலி என்று மற்ற மிருகங்களிடம் பெருமையடித்துக் கொண்டு திரிகிறாய். என்னிடம் கரடி வந்து கேட்ட போது, நான் உனது ஆசையை ஏன் கெடுப்பான் என்று நினைத்து நீதான் பெரிய பலசாலி என்று பொய் சொன்னேன். நீ என்னவென்றால் என்னை மிரட்டப் பார்க்கிறாயா?" என்று கோபமாகக் கூறிய யானை தனது தும்பிக்கையால் காட்டெருமையைத் தூக்கி ஒரு சுழற்றுச் சுழற்றி வீசி எறிந்தது.

தரையில் விழுந்த காட்டெருமை வலி தாங்க முடியாமல் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடியது.

இவற்றையெல்லாம் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த கரடி யானையின் பெருந்தன்மையையும், பலத்தையும் மனதாரப் பாராட்டியது.

## யார் பலசாலி?



## வெட்டுக்கிளி

பச்சை மேனி படைத்தாலும்
பவளக் கூர்வாய் கிடையாது!
உச்சிக் கிளையைப் பிடித்தாலும்
உயரப் பறக்க முடியாது!

சொக்கும் அழகில் சொலிக்காது;
சோதிடச் சீட்டும் எடுக்காது!
அக்கா எனவும் அழைக்காது!
ஆயினும் கிளியாம்; அடுக்காது!

பட்டை ஆரம் தரிக்காது;
பாலும் பழமும் புசிக்காது!
நெட்டை வாலும் இருக்காது!
நேசக் கூண்டில் வசிக்காது!

நட்ட பயிர்கள் தழைக்காது
நறுக்கித் தள்ளும்- சளைக்காது!
வெட்டுக்கிளியாம் அதன் பேரு
விவசாயிக்குப் பெருங்கேடு!

-இளங்குமரன்-

## வாரம் ஒரு நாடு

### வெனிசூலா



தலைநகர்- காரக்காஸ்
பரப்பு - 9,12,050 சதுரக்கிலோமீட்டர்.
மக்கள் தொகை- 2.18 கோடி
மொழி - ஸ்பானிஷ்
எழுத்தறிவு- 88%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - பொலிவர்
தனிநபர் வருமானம்- 2900 டொலர்.

**அமைவிடம்:**
தென் அமெரிக்காவின் வடக்கு கோடியில் அமைந்துள்ளது வெனிசூலா. இது தென் அமெரிக்காவின் 6வது பெரிய நாடாகும்.

**வரலாறு:**
1498ல் கொலம்பஸ் இதைக் கண்டுபிடித்தார். ஸ்பெயினின் காலனியாக இருந்த இந்நாடு 1830ல் சுதந்திரமடைந்தது. நாட்டின் ஜனாதிபதி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார்.

**பொருளாதாரம்:**
வெனிசூலா மிகுந்த கனிம வளம் பொருந்தியது. பெரும் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் இதுவும் ஒன்று. இரும்பு, உருக்கு, செம்பு, அலுமினியம், மங்கனீஸ் ஆகிய கனிமங்கள் கிடைக்கின்றன. விவசாய உற்பத்தியில் கோப்பி, கொக்கோ, கரும்பு, வாழைப்பழம், சோளம், அரிசி ஆகியவை முக்கிய இடம்பெறுகின்றன.

## மின்சாரம் தயாரிக்கும் முறைகள்

### புனல் மின்சாரம்
மின்சாரம் தயாரிக்கப் பயன்படும் சக்கரங்களை வேகமாக ஓடும் தண்ணீர் மூலம் இயங்க வைத்துத் தயாரிக்கப்படும் மின்சாரம் புனல் மின்சாரம்.

### அனல் மின்சாரம்
நிலக்கரி, எரிவாயு, உலைவாயு எண்ணெய் ஆகியவற்றை எரித்து ஆவியாக்கி அந்த ஆவியின் வலு மூலம் சக்கரங்களை இயக்கிப் பெறப்படும் மின்சாரம் அனல் மின்சாரம்.


### அணு மின்சாரம்
நிலக்கரி, எரிவாயு, உலைவாயு எண்ணெய் போன்றவற்றிற்குப் பதிலாக அணு சக்தியைப் பயன்படுத்திப் பெறப்படும் மின்சாரம் அணுமின்சாரம்.

### காற்றாலை மின்சாரம்
இராட்சதக் காற்றாடிகளை, காற்றுச் சக்தி கொண்டு இயக்கி சக்கரங்களைச் சுழல வைத்து அவற்றின் மூலம் பெறப்படும் மின்சாரம் காற்றாலை மின்சாரம்.

### கடல் மின்சாரம்
கடலின் வெப்பநிலை வேறுபாட்டைப் பயன்படுத்திக் கடல் நீரை ஆவியாக்கி அந்த சக்தியின் மூலம் சக்கரங்களை இயங்கவைத்துப் பெறப்படும் மின்சாரம் கடல் மின்சாரம்.

இவை தவிர சூரிய சக்தி, உயிரியல் வாயு ஆகியவற்றைக் கொண்டும் மின்சக்தி பெறப்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



.மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.06.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 196
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 194

பரிசுக்குரியவர்:
கு. செந்தூரன்,
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி வாரிதா மீராமுஹைதீன், மட்/மீரா பாலிகா மகா வித்தியாலயம், காத்தான்குடி. | பி.எச். நிமந்தி மகேஸிக்கா, தி/க. அக்போபுர மகா வித்தியாலயம், கந்தளாய். |
| எஸ். ஹரிபிரசாத், கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருக்கோணமலை. | சிவகுமார் லக்ஷன், ப/ இந்துக் கல்லூரி, கொழும்பு-04. |
| எவ். முஹம்மட் இன்ஷாப், க/ அறபா முஸ்லிம் வித்தியாலயம், ஹந்தெஸ்ஸ. | செல்வி ஆனந்தி ராம், க/சீ.சீ. தமிழ் வித்தியாலயம், புசல்லாவ. |
| செல்வி தனிகாசலம் பாமினி, சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | செல்வி நியாசா சுஹைர், ஜெய்லானி தேசிய பாடசாலை, நெஹின்கஸ் தலாவை, பலாங்கொடை. |
| சிவானந்தன் ராதிகா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | செல்வி எஸ். இந்துஜா, சென் ஜேம்ஸ் வீதி, சிலாபம். |

## விடுகதைகளும் விடைகளும்

1. இடி இடிக்கும், மின்னல் மின்னும், ஆனால் மழை பெய்யாது.
அது என்ன?
2. ஒற்றைக் காதுள்ளவள் மீது உரசினால் சுருக்.
அவள் யார்?
3. பகலில் சுருண்டவன், இரவில் புரண்டவனுக்கு உறுதுணை.
அவன் யார்?
4. கணுக்கணுவாய் இருப்பான், அணு அணுவாய் இனிப்பான்.
அவன் யார்?
5. தண்ணீரில் தாவும் கப்பல், தரையில் குதிக்கும் கப்பல்.
அது என்ன?
6. தட்டினால் தாளமும் வரும், சேதியும் வரும்.
அது என்ன?
7. ஓட்டுக்குள்ளே குடியிருப்பவன், வீட்டுக்குள் தினம் வேண்டும்.
அவன் யார்?
8. இளவயதில் கண் இருக்கும், கிழ வயதில் அது இருக்காது.
அது என்ன?
9. சூடானவன் சுவையானதைத் தருவான்.
அவன் யார்?
10. எங்கள் வீட்டுப் பெண்ணுக்கு வாய் நிறையப் பற்கள்.
அது என்ன?

### விடைகள்

1. பட்டாசு 2. தையல் ஊசி
3. பாய் 4. கரும்பு
5. தவளை 6. தட்டச்சு
7. தேங்காய் 8. நுங்கு
9. அடுப்பு 10. திருவுபலகை.

தொகுப்பு எம்.அப்துல்லா.

## சின்னச் சின்னச் செய்திகள்

* உலகில் 26 நாடுகளுக்குக் கடற்கரை இல்லை.
* அமெரிக்காவில் ஒரு நிமிடத்திற்கு 12 கார்கள் தயாராகின்றன.
* நீர்யானைகளை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் ஐரோப்பிய நாடு ஹங்கேரி.
* உலகின் 80 சதவீத ரோஜாக்கள் ஆசியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.
* மனிதனுக்கு உணவுப் பொருளைத் தயாரித்துத் தரும் ஒரே பூச்சி இனம் தேன்.

## தேம்ஸ் நதி



**★ தேம்ஸ் நதி எங்குள்ளது?**
இங்கிலாந்தில் உள்ளது. இங்கிலாந்தில் உள்ள முக்கிய நதிகளில் இதுவும் ஒன்று.

**★ இதன் நீளம் என்ன?**
இதன் நீளம் 340 கிலோமீட்டர். இந்நதி காட்ஸ்வேல்ட் மலையில் இருந்து உற்பத்தியாகி தென்கிழக்கு இங்கிலாந்து வரை செல்கின்றது. இங்கிலாந்தில் உள்ள நதிகளிலேயே மிகவும் நீளமானது இதுதான்.

**★ இந்த நதி ஓடும் முக்கிய இடங்கள் எவை?**
லண்டன் நகரினூடாக- பாராளுமன்றக் கட்டடம், லண்டன் டவர் போன்ற இடங்களைத் தொட்டுப் பாய்ந்தோடுகிறது.

**★ இங்கிலாந்தில் இருக்கும் ஏனைய முக்கியமான நதிகள் எவை?**
செவர்ன், ஹம்பர், மேர்சி, கிளைட், டொய் போன்றவை ஆகும்.

**★ இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற நகரங்கள் எவை?**
ஒக்ஸ்ஃபோர்ட், லண்டன், பேர்மிங்காம், ஸ்கொட்லாந்து, பிறிஸ்டல், மாஞ்செஸ்டர் போன்றவை.

## பறக்க உதவும் உடல் அமைப்பு!



பாலஞ்சர் எனப்படும் ஒரு வகைப் பிராணியின் உடல் பரசூட் போன்ற அமைப்பைக் கொண்டது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவிப் பாயும் போது உடம்போடு இணைக்கப் பட்டுள்ள சவ்வுகள் விரிந்து பரசூட் போல செயற்படுகின்றன. இதனால் பாலஞ்சர் கீழே விழுந்தாலும் பாதிப்பு ஏற்படாது.



கிழக்கு அமெரிக்காவில் காணப்படும் ஒருவகை அணில்கள் தங்கள் காலுடன் இணைக்கப்பட்டிருக்கும் சவ்வுகள் மூலம் ஒரு குறிப்பிட்ட தூரம் தாவிப் பறக்கின்றன.



தென் கிழக்கு ஆசிய நாடுகளில் காணப்படும் ஒருவகை மரப்பல்லிகள் மரத்துக்கு மரம் சர்வ சாதாரணமாகப் பறந்து தாவுகின்றன. இதற்கு உடலில் காணப்படும் சவ்வுகள் தான் பறந்து தாவ உதவுகின்றன.

www.padippakam.com

## புதிய தொடர்

# உடைந்த இரவு

2



**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**சென்றவாரம்**

பெரிய கம்பனி ஒன்றின் அதிபர் தினேஷ். அவனது மனைவி மைத்ரேயி. இருவரும் அந்நியோன்யமான தம்பதி என்று விருது வழங்க ஒரு அமைப்பு முடிவு செய்கிறது. தினேஷ் மகிழ்கிறான். மைத்ரேயிடம் சொல்கிறான். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்றும் இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. மைத்ரேயியை சந்திக்க வந்த பாஸ்கர், தினேஷ் திடீரென்று வந்ததும் அந்த வீட்டுக்குள் ஒளிந்து நிற்கிறான். மைத்ரேயிக்கு பட படப்பு. எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் அவள் தவிக்கிறாள். **இனி...**

டைனிங் டேபிளுக்கு வந்து உட்கார்ந்த தினேஷ் தட்டில் பரிமாறிய பச்சடியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டே மைத்ரேயியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

"என்னோட வாழ்க்கையின் மிகப் பெரிய அதிர்ஷ்டம் எது தெரியுமா மைத்ரேயி...?"

"எது....?"

"எனக்கு நீ மனைவியா கிடைச்சது தான்..."

"அப்பாடா... இன்னிக்காவது ஒத்துக் கிட்டீங்களே...!" சிரித்துக் கொண்டே சாதத்தைப் பரிமாறினாள் மைத்ரேயி.

"ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்கிற உண்மையைச் சொன்ன நபர் யார்ன்னு தெரிஞ்சா அந்த நபரை வரவழைச்சு ஒரு பெரிய பாராட்டு விழாவையே நடத்தலாம்..."

மைத்ரேயி சிரித்தாள்.

"அதுக்கு நாம சொர்க்கத்துக்குத்தான் போகணும்."

சாதத்துக்கு சாம்பார் விட்டுப் பிசைந்து ஒரு வாய்ச் சோற்றை தினேஷ் விழுங்கிய விநாடி ஹாலில் டெலிபோன் அடித்தது.

"போய்ப் பாரு மைத்ரேயி..."

மைத்ரேயி இரண்டு அறைகளைக் கடந்து ஹாலுக்குப் போய் அலறிக் கொண்டிருந்த ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் குரல் பவ்யமாய் கேட்டது.

"மேடம்... நான் கம்பெனியிலிருந்து அக்கவுண்ட் ஆபீஸர் முரளி பேசறேன்..."

"சொல்லுங்க..."

"எம்.டி.இருக்காரா மேடம்...?"

"இப்பத்தான் வீட்டுக்கு வந்தார். சாப்பிட்டுக்கிட்டிருக்கார்..."

"அவர்கிட்டே கொஞ்சம் பேசணும் மேடம்....."

"என்ன விஷயம்...?"

"வந்து... வந்து..."

"பரவாயில்லை... என்கிட்டே சொல்லுங்க... பாதி சாப்பாட்ல அவர் ஏன் எழுந்து வரணும்...?"

"மேடம்... ரிசர்வ் பேங்கிலிருந்து 'செக்கிங் ஸ்க்வாட்' ஆபீஸர்ஸ் வந்திருக் காங்க..."

"எதுக்கு..?"

"நம்ம பைனான்ஸ் கம்பெனியின் டெபாஸிட்டர்களின் லிஸ்ட்டை செக் பண்ண...."

"இவர் உடனே அங்கே வரணுமா...?"

"ஆமா மேடம்.... இது கொஞ்சம் சிக்கலான விவகாரம். எம்.டி. வந்தாத்தான் 'செங்கிங் ஸ்க்வாட்'டை பேஸ் பண்ண முடியும்...."

"ஒரு மணி நேரத்துக்குள் அவரை அனுப்பினா போதுமா...?"

"கொஞ்சம் சீக்கிரமாவே அனுப்பி வெச்சா பரவாயில்லை மேடம். 'ஸ்க்வாட்' கேக்கிற கேள்விகளுக்கு என்னால பதில் சொல்ல முடியலை மேடம்."

"சரி அவர்கிட்டே சொல்றேன்..."

மைத்ரேயி ரிஸீவரை வைத்துவிட்டு டைனிங் டேபிள் நோக்கிப் போகும் வழியில், சட்டென்று ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்து பீரோவுக்கு பக்கமாய் போய் குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்..."

"ம்..." பீரோவுக்கு பின்னாலிருந்து அவன் எட்டிப் பார்த்தான்...

"மூச்சுக் காட்டாமே இன்னொரு பத்து நிமிஷம் இருங்க. போன்ல ஒரு முக்கியமான விஷயம் வந்திருக்கு. அவர் உடனே கிளம்பிடுவார்."

"சீக்கிரம் மைத்ரேயி... என்னால இங்கே நிக்க முடியலை... ஒரே எறும்புக் கடி..."

"பொறுத்துக்குங்க... இப்ப வந்துட றேன்..."

வெளியே வந்தாள். உள்ளே இருந்த அந்த சில விநாடிகளுக்குள் முகம் வியர்த்து விட்டிருந்தது.

சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டே டைனிங் டேபிளுக்கு வந்தாள் மைத்ரேயி. தினேஷ் சாம்பார் சாதத்தை முடித்துக் கொண்டு ரசம் சாதத்துக்கு வந்திருந்தான்.

கேட்டான்,

"போன்ல யாரு மைத்ரேயி...?"

"கம்பெனி ஏ.ஓ."

"என்னவாம்...?"

"நம்ம கம்பெனிக்கு ரிசர்வ் பேங்கிலிருந்து 'செக்கிங் ஸ்க்வாட்' வந்திருக்காங்களாம்.."

"என்னது...?" சாதக் கையோடு சட்டென்று எழுந்து நின்றான் தினேஷ்.

"அட... ஏன் எந்திரிச்சுட்டீங்க...?"

"நான் உடனே கிளம்பணும் மைத்ரேயி..."

"சாப்பிட்டு போங்க..."

"உட்கார்ந்து சாப்பிட்டிருக்க நேரமில்லை... நான் உடனே போகலைன்னா ஏதாவது குளறுபடி பண்ணிடுவாங்க.."

வாஷ்பேஸினில் கை கழுவினான்.

"சரி.... மோராவது சாப்பிட்டுப் போங்க.."

"ஒண்ணும் வேண்டாம்..." சொன்ன தினேஷ் வேக வேகமாய் போய் படுக்கையறைக்குள் நுழைந்து, ட்ரஸ் மாற்றி, வெளியே வந்து, போர்ட்டிக்கோவில் நின்றிருந்த காரை நோக்கிப் போனான். மைத்ரேயி பின் தொடர்ந்தபடியே கேட்டாள்,

"சாயந்தரம் ஆறுமணிக்குள் வந்திடு வீங்கள்ள...?"

"சொல்ல முடியாது...."

"லேட்டானா போன் பண்ணுங்க..."

"ம்... ம்..."

காரைக் கிளப்பிக்கொண்டு விருட்டென்று வெளியேறினான் தினேஷ். மைத்ரேயி ஒரு பெரிய நிம்மதிப் பெருமூச்சோடு கதவைச் சாத்திவிட்டு உள்ளே போனாள்.

ஸ்டோர் ரூமுக்குப் பக்கத்தில் போய் நின்று கொஞ்சலாகக் கூப்பிட்டாள்.

"பாஸ்கி டியர்... வெளியே வாங்க..."

"ஆள் போயாச்சா...?" கேட்டபடி பாஸ்கர் எட்டிப் பார்த்தான்.

"போயாச்சு... சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் கவலையில்லை..."

"வேலைக்காரி மூணு மணிக்கு வருவாளே?"

"மாட்டா.... அவளுக்கு ரெண்டுநாள் லீவு கொடுத்திருக்கேன்."

"அப்ப ஜாலிதான்..." அவளைக் கட்டிக் கொண்டான்.

"பெட்ரூமுக்குப் போய் விளையாட்டைக் கண்டினியூ பண்ணலாமா?"

மைத்ரேயி சிரித்தாள்.

"எதுக்காக சிரிக்கறே...?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி பயந்த பயம் என்ன...? இப்ப காட்ற வேகம் என்ன....?"

"பின்னே உன் புருஷன் வந்துட்டா பயம் இருக்காதா?"

"எதுக்குப் பயப்பட ணும்...?"

"இருந்தாலும் உனக்கு இவ்வளவு தைரியம் இருக்கக் கூடாது. உனக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பு உன் புருஷனுக்குத் தெரிஞ்சா என்னாகும் தெரியுமா...?"

"தெரிஞ்சாத்தானே....?"

"எந்த ஒரு விஷயமுமே, என்னிக்காவது ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்துதான் ஆகணும்..."

"இந்த விஷயம் வெளிச்சத் துக்கு வராது..."

"எந்த தைரியத்துல இப்படி சொல்றே..?"

"நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன் பாஸ்கர்.."

"என்ன முடிவு...."

"வாங்க பெட்ரூமுக்குப் போயிடுவோம்." போனார்கள்.

போம் மெத்தையில் பாஸ்கர் சாய அவனுடைய மார்பில் மைத்ரேயி சாய்ந்தாள். சில விநாடி இடைவெளிக்குப்பின் கூப்பிட்டாள்.

"பாஸ்கர்..."

"ம்..."

"உங்களுக்கும் எனக்கும் இருக்கிற இந்தத் தொடர்பு காலேஜ் டேயிலேயே அரும்பினது. துரதிர்ஷ்டவசமா நம்ம காதல் ஜெயிக்கலை... தினேஷுக்கு மனைவியாக வேண்டிய கட்டாயம். தினேஷ் என்னைக் கட்டில்ல தொடும் போதெல்லாம், உங்களுக்கு நான் துரோகம் செய்யறதாத் தான் நினைப்பேன்... நீங்க என்னைத் தொடும்போது தினேஷுக்கு துரோகம் பண்றமாதிரி நான் என்னிக்குமே பீல் பண்ணினது இல்லை...."

பாஸ்கர் புன்னகைத்தான்.

"இந்த வாக்கியங்களை நீ ரொம்பத் தடவை சொல்லிட்டே. இப்போ ஏதோ ஒரு முடிவுக்கு வந்துட்டதா சொன்னியே அது என்ன...?"

"உங்களுக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பு தினேஷுக்கு தெரியாமே இருக்கணும்னா... அதுக்கு ஒரு வழிதான் இருக்கு..."

"என்ன வழி....?"

"தினேஷ் உயிரோடு இருக்கக் கூடாது..."

பாஸ்கர் சூடுபட்டமாதிரி நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"மை...த்...ரே..யி..." அவனுடைய தொண்டையிலிருந்து வார்த்தைகள் தவணை முறையில் வெளியே வந்தன.

"பயந்துட்டீங்களா?"

"பின்னே.... பயப்படாமே என்ன பண்றது.... ஒரு உயிரை தீர்த்துக் கட்டறது காய்கறி நறுக்கிற மாதிரியான சாதாரண விஷயம் இல்லை. மாட்டிக்கிட்டா தூக்குக்கோ, ஜெயிலுக்கோ போக வேண்டியதுதான்.."

"எதையுமே துல்லியமா பண்ணினா... மாட்டிக்கவேண்டிய அவசியமே இல்லை...."

"எவ்வளவுதான் துல்லியமா திட்டம் போட்டு கொலையைப் பண்ணினாலும், ஏதாவது ஒரு வகையில் பொலிஸ் உன்னையும் என்னையும் 'ஸ்மெல்' பண்ணிடுவாங்க...."

"இந்த அவநம்பிக்கைதான் இருக்கக் கூடாது... எதையுமே சரியா பண்றதுக்கு மனோதிடம் வேணும்..."

"சரி.. உன்கிட்ட ஏதாவது திட்டம் இருக்கா..?"

"திட்டம் இல்லாமே வாயைத் திறப்பேனா...?" மைத்ரேயி சிரித்து பாஸ்கரின் தலை முடியைக் கோதிய விநாடி-

ஹால் டெலிபோன் கூப்பிட்டது.

மைத்ரேயி பாஸ்கரிடமிருந்து தன்னை உருவிக் கொண்டு எழுந்தாள்.

"யார்ன்னு தெரியலையே...?"

"தினேஷாக இருக்கலாம்..."

"அவர் இதுக்குள்ளே ஆபீஸ் போய் சேர்ந்திருக்கமாட்டாரே...?"

மைத்ரேயி வேகவேகமாய் போய் ரிஸீவரை எடுத்து காது மடலை உரச விட்டாள்.

"ஹலோ..."

மறு முனையில் ஒரு பெண்குரல் கேட்டது.

"மைத்ரேயி! இது நியாயமா...?"

குழப்பமாய். "எது...?" என்றாள்.

"புருஷன் கட்டின தாலி கழுத்துல இருக்கும்போது கட்டிலை வேற ஒருத்தர் கூட பகிர்ந்துக்கிறது நியாயமா...?"

மைத்ரேயி திடுக்கிட்டாள்.

"யா...யார்... நீ..நீ..நீ....?"

குரல் சிரித்தபடி கேட்டது... கொஞ்சலாய்.

"என்னைத் தெரியலையா... மைத் ரேயி...?"

**(தொடர்ந்து வரும்)**



## அரங்கம்













பெயர்: எஸ். கிறிஸ்தோப்பர்.
வயது: 18
முகவரி: 64/68, செனடிக்ட் மாவத்தை, கொழும்பு-13
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: சாதிக்குல் அமீன்.
வயது: 25
முகவரி: 13, முதலாம் குறுக்குத் தெரு, சிலாபம்.
பொழுதுபோக்கு: அரட்டையடித்தல்.

பெயர்: எஃவ். வின்சென்ட்.
வயது: 30
முகவரி: P.O.BOX-3394, DAMMAM- 31471. K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: ஏ. வசந்தகுமார்.
வயது: 25
முகவரி: கலபொட, கல்கந்துர, இரத்தினபுரி.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி.

பெயர்: எச். றிஹானா பாரூக்.
வயது: 16
முகவரி: வெலிமட வீதி, மிரஹவத்தை.
பொழுது போக்கு: சினிமா, வானொலி.

பெயர்: ரி. உவைஸ்.
வயது: 20
முகவரி: P.O.BOX-19338, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: சி. நகுர்தீன்.
வயது: 20
முகவரி: எ.சி.சி.வீதி, கம்பிரிகஸ் வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.

பெயர்: எம். கமால்.
வயது: 20
முகவரி: 8, சாஹிபு வீதி, கல்முனை-4.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: என். ராஜேந்திரன்.
வயது: 29
முகவரி: நோர்த் மடக்கும்புர, சின்னக் கணக்கு, வட்டகொட.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எல். ரவீந்திரன்.
வயது: 26
முகவரி: குறுமண் வெளி-2, களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: சித்திரம் வரைதல், கிரிக்கெட்.

பெயர்: வில்லியம்ஸ்.
வயது: 27
முகவரி: P.O.BOX- 1250, TAIF, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: ரிபாய் மொஹமட்.
வயது: 18
முகவரி: 148, பபாபுள்ள பிளேஸ், கிராண்ட்பாஸ். கொழும்பு-14.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

அத்தியாயம் 14

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான் கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி...**

சுமதி பள்ளி இறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம் அது. அவள் தெருவில் இருந்த டைப்ரைட்டிங் பள்ளிக்கு அவள் சென்று டைப் கற்றுக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரம் காலை ஆறு முதல் ஏழு வரை என்றிருந்தது. ஏழு மணி முதல் அவள் இடத்துக்கு ஒரு இளைஞன் வந்து கொண்டிருந்தான். சில நாட்களில் சுமதிக்கு அவன் மேல் ஒரு விதமான அக்கறை ஏற்பட்டது. அவன் பெயர் வல்லபன் என்று அறிந்துகொண்டாள் அவள். ஏழு மணிக்கு வந்து அவள் இடத்தில் அமர வேண்டிய அந்த இளைஞன் ஆறே முக்காலுக்கு வரத் தொடங்கினான். பின்பு ஆறரை மணிக்கே வந்து காத்திருக்கத் தொடங்கினான். காத்திருக்க என்றே இருந்த ஹாலில், நாற்காலி ஒன்றில் அமர்ந்து அவன் காத்திருக்கத் தொடங்கினான்.

அவன் அமர்ந்து காத்திருந்த இடத்திலிருந்து பார்த்தால், சுமதி பக்கவாட்டில் தெரிந்தாள். சுமதிக்கு விரல்கள் தடுமாறியது உண்மை! அந்த உணர்வுக்குக் காதல் என்று தப்பாக அவர்கள் அர்த்தம் புரிந்து கொண்டார்கள். பார்த்த மாத்திரத்தில் ஏற்படுவது கவர்ச்சி. பழகி, உணர்ந்து, அறிந்து வயப்படுதல் காதல். அவர்கள் அறிந்த பட்டில் சௌகர்யமாகச் சந்திக்க ஓரிடமாகக் கோயில் மட்டுமே இருந்தது. மாலைகளில், பக்தி சிரத்தையோடு பெண் கோயிலுக்குப் போவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள் அம்மா. அப்பாவுக்கு ஆச்சரியமாய் இருந்திருக்க வேண்டும். ஒரு வெள்ளிக்கிழமையன்று கோயிலில் இருந்து அவர்கள் திரும்புகையில், படிவரிசையில் வைத்து அப்பா அவர்களைக் கடந்தார். அப்பா, கோபுரத்தின் உச்சியைக் குறியாக வைத்து நடந்து கொண்டிருந்தார். அப்பாவைப் பார்த்ததில், சுமதி நடுங்கிப் போய்விட்டாள். கால்கள் துவண்டு நடக்கும் சக்தியைக்கூட அவள் இழந்து விட்டாள். இதயம் படபடக்க வேறு ஒன்றும் செய்யத் தோன்றாது உடல் வியர்க்க, வல்லபனிடம் கூட ஒன்றும் பேசத்தோன்றாமல் அவள் வீடு வந்து சேர்ந்தாள். உணவு, பயம் காரணமாக உள்ளே செல்லவில்லை. தவிப்பு தாங்க முடியாதவளாக அப்பாவிடம் சென்றாள். அம்மா உள்ளே படுத்து நன்கு உறங்கிக் கொண்டிருந்தாள். காற்றுக்குத் துண்டைத் திண்ணையில் விரித்துப்போட்டு, நள்ளிரவு வரை அங்கு படுத்திருப்பார் அவர்.

சுமதி அவர் காலடி ஓரம் சென்று நின்று, மெல்லிய குரலில் 'அப்பா' என்றாள்.

திடுமென எழுந்து உட்கார்ந்த அப்பா, தன் பக்கத்தில் இடம் பண்ணிக் கொடுத்து 'உட்காரும்மா' என்றார். சுமதி அமர்ந்தாள்.

"என்னம்மா!"

"அப்பா...."

"சொல்லு?"

"என்னை மன்னிச்சுடுங்கப்பா."

அப்பா ஆச்சரியக் குரலில் "எதுக்கும்மா?" என்றார்.

சுமதி தயங்கியபடியே சொன்னாள்.

"நான் அந்த வல்லபனோட கோயிலுக்குப் போயிருந்தேம்பா."

"அதனால் என்ன?"

"தப்புதானேப்பா அது?"

"அட அசடே. கோயிலுக்குப் போறதுல என்னம்மா தப்பு இருக்க முடியும்?"

"இல்லேப்பா. எனக்குத் தப்புன்னு தோணுது."

"அப்படியில்லை சுமதி. அந்தப் பையனோட கோயிலுக்குப் போறது உனக்கு சந்தோஷமா இருந்தா, அதைச் செய்யறதில் தப்பு இல்லை. ஆனா, அப்படிச் செய்யறது தப்புன்னு உன் மனசுக்குள்ளே தோணிச்சுன்னா அது தப்புத்தான். அதைச் செய்யாதே. இதுக்கெல்லாம் ஒரே இலக்கணம் தானம்மா இருக்கு. நீ செய்கிற காரியம் மத்தவங்களுக்குத் தெரியறதில் உனக்கு ஆட்சேபம் இல்லாத பட்சத்தில்- அது பற்றிய குறு குறுப்பு உனக்கு இல்லாத பட்சத்தில், அது உனக்கு சந்தோஷமும் தரும் என்றால் தாராளமாகச் செய். இந்தக் காரியம் மறைவாக இருக்கணும், மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவமானம்னு நீ நினைச்சா இன்னிக்கே அதை விட்டுவிடு." என்றார் அப்பா.

அந்த அப்பாவுக்குத் தெரியாமல் இந்த கணேசனின் காதல் விஷயத்தை வைத்திருப்பது அவளுக்குத் தவறு என்றே பட்டது.

"அப்பா....நான் உங்களிடம் பேச வேண்டும்..."

"என்னிடம் பேசுவதற்கு உனக்கு எதுக்கு இந்த முன்னுரையெல்லாம்? அப்படி உட்கார். ஆரம்பி."

"இல்லைப்பா....தனியாகப் பேச வேண்டும். வாருங்களேன். கோயில் பக்கம் போகலாம்."

அப்பாவுக்குச் சமீப காலமாகத்தான் இந்த வெற்றிலை போடும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. வெற்றிலைச் செல்லத்தை எடுத்துக்கொண்டு, துண்டைப்போட்டுக் கொண்டு புறப்பட்டார் அப்பா.

மாலை மயங்கிக் கொண்டிருந்த நேரம். காற்று பனிபூசிக் கொண்டிருந்தது. கோயில் ஒலி பெருக்கியில், 'உள்ளமெனும் கோயிலிலே..உறைகின்றாய் முருகா' என்று உள்ளபடியே உருகிக் கொண்டு பாடிக் கொண்டிருந்தார் பாடகர்.... கோயிலுக்குப் போகும் பாதையை ஒழித்துப் பக்கமாகச் சென்று, சுற்றுப் பிரகாரத்தின் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டார்கள் அவர்கள். கறுப்பு கறுப்பாய் மின்னிக் கொண்டிருக்கும் பாறைகள் மனிதர்கள் உட்கார்ந்து பேச என்றே ஏற்பட்டனபோல் விளங்கின.

அப்பா, பாக்குத்தூளை வாயில் போட்டுக் கொண்டு வெற்றிலையை வேஷ்டி மேல், குழந்தையைத் துடைப்பது போல நோகாமல் துடைத்து, குழந்தைக்குப் பவுடர் போடுவது போல் சுண்ணாம்பு தடவி, சுருட்டி மடக்கி வாயில் செருகிக் கொண்டார். கப்பென்ற வெற்றிலைச் செல்லத்தின் வாசனை காற்றில் பரவியது. கழுத்தை அண்ணாந்து சாறை விழுங்கி, அனுபவித்து விட்டு அப்பா சொன்னார்:

"என்னமோ பேசணும்னியே... சொல்லும்மா..."



பிரபஞ்சன்

சுமதி தரையில் விரலால் என்னவோ எழுதி எழுதி அழித்துக்கொண்டிருந்தாள். தயக்கமாகத்தான் இருந்தது. அப்பா அவளைத் தீர்க்கமாகப் பார்த்தார். ஒரு கண்ணை இறுக்கிக் குறும்பாக அவளைப் பார்த்துச் சிரித்தார்.

"சரி. நானே சொல்லட்டுமா?"

"உம், சொல்லுங்க..."

"நீ எதையோ மனசுலே வச்சுக்கிட்டு, சொல்லத் திணர்றே...."

"சரிப்பா."

"இன்னும் விளக்கமாச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"நீ யாரையோ விரும்பறே...அதை எப்படி அப்பாகிட்ட சொல்றதுன்னு தயங்கறே....சரிதானே?"

சுமதிக்கு 'ஐயோ' என்றிருந்தது. உடம்பு சிலிர்த்தது. இந்த மாதிரி அப்பா கிடைத்தது தன் அதிருஷ்டம் என்று தான் அவளுக்கு அந்தக் கணத்தில் தோன்றியது.

"சொல்லம்மா?"

"அப்படித்தான்" என்றாள்.

அப்பா, "சண்முகா, முருகா" என்றார். அவர் உடம்பு சிலிர்த்திருக்க வேண்டும். பெண்ணுக்குக் கிடைத்திருக்கும் இந்த வாழ்வு என்றும் நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்று நினைத்திருப்பார் அவர்.

"யார் அம்மா அது?"

"கணேசன் தாம்பா."

அப்பா ஒரு கணம் யோசித்தது தெரிந்தது.

"ஓ...அந்தப் பையனா?" என்றவர் மீண்டும் செல்லத்தைத் திறந்து பாக்கைப் போட்டுக் கொண்டு வெற்றிலை போடத் தொடங்கினார். அப்பா பல நிமிஷங்கள் அப்படியே இருந்தார்.

"ரொம்பக் கஷ்டத்தில் வளர்ந்த பையன்; வாழ்க்கையில் முன்னுக்கு வரத் துடித்தவன். எப்படியோ நல்ல வேலையிலே இருக்கிறான். மற்றபடிக்கு, என்னைப் பொறுத்த வரைக்கும் உன் சந்தோஷம்தாம்மா என் நோக்கம்."

"உங்களுக்கு அவரைப் பிடிச்சிருக்காப்பா?"

"எனக்குப் பிடிக்கிறதும் பிடிக்காததும் ஒரு விஷயமாம்மா? பொண்ணைப் பெத்தவர்கள் ஒரு பையனோட முகத்தைப் பார்க்கலாம். வீட்டைப் பார்க்கலாம். உத்தியோகத்தைப் பார்க்கலாம். அவனோட அகத்தை நான் எப்படிப் பார்க்க முடியும்? அதை நீதான் கண்டுபிடிக்கணும். அதுக்கு ஒரே வழி, அவனோட பழகிப் பேசிப் பேசித்தான் கண்டுபிடிக்க முடியும். நீ அவனோட நல்லாப் பேசிப் பழகியிருக்கியா?"

"இருக்கேம்பா."

"உனக்கு, உன்னை" அவர் சொல்லும்போதே சுமதியின் குரல் கரகரத்தது. அந்தப் 'பிக்னிக்' சென்ற அன்று அவன் நடந்து கொண்டவிதம் அவள் நெஞ்சில் படம் போல் விரிந்தது. தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

"அப்புறம் என்ன? உனக்கு அந்த நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, வேறு என்ன பிரச்சனை உனக்கு இருக்க முடியும்? கவலை விடு. நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். அவர் அப்பா அம்மா, மற்றும் அவரோட உறவுக்காரர்களைப் பார்த்துப் பேசணும். மற்றதையெல்லாம் நான் கவனிக்கிறேன்....."

வெளியே இருட்டிக் கொண்டு வந்தது. மனசுக்குள் மத்தாப்பு மாதிரி வெளிச்சம் பரவிக் கொண்டு வந்ததை உணர்ந்தாள் சுமதி.

"அப்பா...நான் இப்படிப் பண்ணினதில் உங்களுக்கு ஒன்றும் கோபமோ, வருத்தமோ இல்லையே....?"

"சேச்சே. என்ன பேச்சு இது? எனக்கு எதுக்கும்மா கோபமும், வருத்தமும் வரணும்? கல்யாணம் பண்ணிக் கொள்வது உன்னுடைய சொந்த வாழ்க்கை இல்லையா? உன்னுடைய கணவனை நீ தேடிக் கொள்வதில் யார் தலையிட முடியும்? அது உன்னுடைய சுதந்திரம். அந்தக் காரியத்தை நீதான் செய்யணும். இந்த மாதிரி விஷயத்தில் ஒரு பெண்ணின் ரசனையை வேறு யார் புரிந்து கொள்ள முடியும்? இதில் நாங்கள் தலையிடுவது அநாகரிகம் இல்லையா? தவிரவும், நீ என் பெண். நீ என் வழியாக இந்த உலகத்துக்கு வரவேண்டி இருந்தது ஒரு இயற்கை நிர்ப்பந்தம். அதற்காக, என் கருத்துக்களை என் வாழ்க்கை முறையை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் உன்னை நிர்ப்பந்தப்படுத்த முடியாது; கூடாது. ஒரு இடத்தில், உன் வாழ்க்கையை நீ தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியதே முறை. என் போன்றவர்களுக்கு என்ன வேலை? உனக்கு வாழ்க்கைச் சௌகர்யங்களைச் செய்து கொடுத்து உன் சந்தோஷத்தைப் பார்த்துக் களிப்பது மட்டும்தான்."

அவர்கள் வீடு திரும்பினார்கள்.

(தொடர்ந்து வரும்)

# சொந்த மண்ணே சொர்க்கம்

**மகனும் மருமகளும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசுவதற்கே நேரமில்லாமல் இருந்தது.**

சின்னத்தங்க ஆச்சி விமான மேறுவதற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தது. அந்த மூன்று நாட்களும் விரைவாக வந்துவிடக்கூடாதா என அவர் ஏங்கிக் கொண்டிருந்தார்.

ஆச்சி ஃபிரான்ஸ் நாடு போவதற்குக் காத்திருந்தார். அவர் தலைநகர் வந்து ஆறேழு நாட்களாகின்றது. அவருக்குத் தலை நகரும் புதிதுதான்.

அங்குள்ள பெரிய, பெரிய கட்டிடங்கள், கடைத்தெருக்கள் இவைகளைக் கண்டே ஆச்சிக்குப் பிரமிப்பு. அந்தப் பிரமிப்பை தனது ஒரேயொரு மகளிடம் வெளிப்படுத்தினார்.

"இது என்ன பெரிய கட்டிடம்? இதை விட அழகான வானுயர்ந்த கட்டிடங்களும், வசதி வாய்ப்புக்களும், வளமும் நிறைந்ததுதான் ஃபிரான்ஸ். அதை நீ இருந்து பார்த்து அனுபவிக்கப்போகிறாய். நீ அம்மா உண்மையில் கொடுத்து வைத்தவள்!" என்று மகள் தாயிடம் அளந்து விட்டாள்.

ஆச்சிக்கு அறுபது வயதாகிறது. கிராமத்தில் பிறந்து வளர்ந்து பாடுபட்டதால் வயதான தோற்றம் கொஞ்சம் அதிகமாகவே அவரிடம் இருந்தது. அவருக்கு மூன்று மகன்கள். ஒருமகள். ஒன்றுக்கும் ஆகாத உதவாக்கரை, கல்வியறிவில்லாதவன் என்று பெயரெடுத்தவன், இரண்டாவது மகன் ஜெபிதாஸ். ஒரு கட்டத்தில் அவனது துடிப்பும், குளப்படிகளும் கட்டுக்கடங்காமல் போயிற்று.

அவனது எண்ணங்கள் எல்லாம் திசைமாறிப் போய்விடுமோ என்று பயந்து விட்டார் ஆச்சி. தனது கணவர் இறந்த பிற்பாடு தான் வைத்திருந்த காணிகளை விற்றெடுத்தார். கையில் கிடைத்த பணத்தை எடுத்து, "எக்கேடு கெட்டாகுதல் போ!" என்ற ரீதியில் ஜெபிதாஸை ஃபிரான்ஸுக்கு அனுப்பிவைத்தார்.

இப்பொழுது சொந்தங்களுக்கெல்லாம் அவன்தான் பக்கபலம்; பணம் காய்க்கும் மரம். உத்தியோகம் பார்க்கும் சகோதரர்களுக்குக்கூட அவன் பணம் அனுப்புவதுண்டு."கழிச்ச கல்லுத்தான் தலைக் கல்லாகியிருக்கு," என்று ஆச்சி அவனைப் பற்றி அடிக்கடி பிதற்றுவதுண்டு. அந்த மகன்தான் தாயை இப்போ ஃபிரான்ஸுக்கு அழைத்திருக்கிறான்.

"அம்மா அங்கிருந்து கஷ்டப்பட்டது போதும். என்னுடன் வந்து சுகமாக வாழுங்கோ!" என்று கூப்பிட்டிருக்கிறான். மகன் மூலம் அந்நிய தேசத்தைப் பார்க்கப் போகிறோம் என்று ஆச்சிக்கு கர்வமாக இருந்தது.

அன்றைக்குச் சனிக்கிழமை. ஏஜன்சிக்காரர்கள் சொன்னபடி வந்து எயார்ப்போட்டிற்கு அழைத்தார்கள். மக்கள் உறவினர் அனைவரும் ஆச்சியை கண்ணீருடன் வழியனுப்பி வைத்தனர்.

தவிர்க்க முடியாத சில இன்னல்களைக் கடந்து அவர் ஃபிரான்ஸுக்கு வந்து சேர்ந்தார்.

தாயை ஏற்றிப் போவதற்கு ஆடம்பரமான காரில் வந்திருந்தான் ஜெபிதாஸ். காரையும், மகனையும் கண்ட ஆச்சி உச்சி குளிர்ந்து மகனைக் கட்டித் தழுவி அன்பை வெளிப்படுத்திக்கொண்டார். அதைவிட மருமகளையும், பேரக்குழந்தையையும் முதன் முதலாகப் பார்த்தபோது அவருக்குச் சொர்க்கத்தையே பார்த்தது போலிருந்தது. மகனும் மருமகளும் பயணம் செய்த களைப்பு தீர அவருக்குச் சில நாட்கள் ஓய்வு கொடுத்தார்கள். பின்னர் மகன் ஐந்து நாட்கள் விடுமுறை எடுத்தான். தாயை அழைத்துக் கொண்டு முக்கியமான இடங்களைக் காண்பித்தான். இரண்டு கிழமை நகர்ந்தது. ஆச்சி வந்த ஆரவாரங்கள் அடங்கிப் போயிற்று. பழையபடி அவர்களின் இயந்திர வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இங்குள்ள நிலவரங்களைக் கண்கூடாகப் பார்த்தபோது ஆச்சி திடுக்குற்றுப் போனார்.

தான் எண்ணியது, கற்பனை பண்ணியது எல்லாமே தவறு என்று அவருக்குப் பிடிபடத் தொடங்கியது.



களுவாஞ்சிக்குடி யோகன்—அவுஸ்திரேலியா

மகனும், மருமகளும் ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதற்கே நேரமில்லாமலிருக்கிறது. அந்தளவிற்கு வாழ்க்கையின் தரம் சிதைந்திருக்கிறது.

காலையில் மருமகள் வேலைக்குப் போகும்போது பேரனையும் பள்ளிக் கூடத்திற்கு கொண்டு போகிறாள். மகன் எழுந்து பகல் நேர வேலைக்குப் போய்த் திரும்பி வரும்போது பேரனையும் அழைத்துக் கொண்டு வருகிறார். பின் மகன் இரவு வேலைக்குச் செல்ல மருமகள் வேலை முடிந்து வருகிறார். இரவு வேலை முடிந்து மகன் வீட்டுக்கு வந்தால் மருமகள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார்.

இப்படியே வாழ்க்கைச் சக்கரம் போலத் தொடர்கிறது. 'என்ன வாழ்க்கையிது? இது தான் குடும்ப வாழ்க்கையா?' என்று ஆச்சிக்குப் பெரிய திண்டாட்டம். அதைவிட அவருக்குப் பொழுதுபோவது அந்த நான்கு சுவருக்கு முள்ளுமாகத் தானிருந்தது. இதனால் அவர் மிகவும் பொறுமையிழந்துபோனார். வீட்டுக்குள்ளேயிருந்து வீடியோ பார்த்து எத்தனை நேரத்திற்குத்தான் பொழுதைக் கழிக்கமுடியும்? அதுவும் இந்தக் காலத்துப்படமென்றால் ஆச்சிக்குக் குமட்டிக் கொண்டுதான் வரும்.

இவைகளை மகனுடன் மனம்விட்டுக் கதைப்பதற்குக்கூட முடிவதில்லை. இவைகளினால் பொறுமையிழந்த ஆச்சி ஒடுங்கிப்போனார்.

அவர் நாட்டில் வாழ்ந்து பழகிய வாழ்க்கை நினைவில் வந்து தங்குகிறது.

என்ன தான் போரோ துன்பமோ அவைகளுக்கு மத்தியிலும் வெற்றிலையும் போட்டுக்கொண்டு நாலு சனங்களுடன் மனம்விட்டுப் பேசி, கோயில் குளமென்று போய், பேரக்குழந்தைகளுடன் கொஞ்சி மகிழ்ந்து, பிள்ளைகளின் குறை நிறைகளை தெரிந்தவர்களுக்கு எடுத்துச் சொல்வி சுகம் கண்டு வாழ்ந்த அந்த வாழ்க்கையில் அர்த்தம் இருக்கிறது. ஆனந்தம் இருக்கிறது. அப்படியான வாழ்வுக்கு இங்கு இடமேயில்லை என எண்ணியபோது அவருக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

'அங்கு பங்கருக்குள் போனாலும் கூட்டத்தினருடன் தான் போகிறோம். இங்கு உயிர்போகும் நேரத்தில் கூட யாரும் பக்கத்தில் இருக்கமாட்டார்களே' என்ற உண்மை ஆச்சிக்குப் புலப்பட்டுவிட்டது.

என்னதான் நிறைவென்று சொல்லிக் கொண்டு வாழ்ந்தாலும் இந்த வாழ்க்கையில் ஒரு நிரப்பமுடியாத வெற்றிடம் இருப்பதை ஆச்சி உணர்ந்தார்.

சிறகை ஒடித்துக் கொண்டு கூண்டுக்குள் முடங்கிக் கிடப்பதுபோல தவித்துப் போனார். எவ்வளவு சந்தோஷத்துடன் ஃபிரான்ஸ் நாட்டையும், மகனையும் காண இங்கு வந்தாரோ அவ்வளவிற்கு சந்தோஷமின்மையும் ஏக்கமும் அவரைத் தொற்றிக் கொண்டன.

இந்த ஏக்கங்களுக்கும் பயங்களுக்கு மிடையில் அன்றே ஆச்சி ஒரு முடிவுக்கு வந்தார்.

'எனது உயிர் பிறந்த மண்ணில் தான் பிரிய வேணும். அங்குள்ள சொந்த பந்தங்களுடன் மனம் விட்டுப் பேச வேணும், ஒருநாளென்றாலும் அங்கு போய் வாழ்ந்துவிட்டு மடிய வேணும்!' என்று முடிவெடுத்துவிட்டார்.

இரவு ஒரு மணியாகியும் அவர் தூங்கவில்லை. மகனின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார் சின்னத்தங்க ஆச்சி.


படிப்பகம்

www.padippakam.com

"நான் உன்னை தனியாக விடமாட்டேன்! நான் உன்னை நேசிக்கிறேன்! உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்!"

நான் அவளைப் பல்கலைக்கழக வளாகத்தில் சந்தித்தேன். நாங்கள் ஒரு செமினார் நிமித்தம் அங்கு கூடியிருந்தோம். அவளை நான் பார்த்தவுடன் எனக்கு என்ன நேர்ந்தது என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவள் பேச ஆரம்பித்தவுடன் என் பரவசம் அதிகமாகியது. அவள் கண்களில் காந்தியா, அவள் வதனமா, அவள் அறிவுத்திறனா, அவள் வெட்கப்பட்ட விதமா, அவள் பொறுமை இழந்த விதமா, நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் ஆச்சரியப்பட்ட தன்மையா, எது என்னை வீழ்த்தியது. என்று சொல்வது கடினம்.

அவள் கூந்தல் கறுப்பானது; கறுப்பு என்றால் அசாத்தியமான கறுப்பு. அவள் மேற்பூச்சு எதுவும் அணியவில்லை. அவள் ஒல்லியாகவே இருந்தாள். மூக்கு, விழிகள், பற்கள், உதடுகள் எல்லாமே வடிவாய் அமைந்து இருந்தன. அவள் எனக்குப் பரிச்சயம் ஆனது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆனால், அவள் செமினாரில் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் என் கருத்துக்களுக்கு ஒத்துவராததாகவே இருந்தன.

# காதலி-த்-தேன்



## ஐராவதம்

சில வாரங்கள் கழித்து மீண்டும் பல்கலைக்கழக வளாகத்தில் அவளைச் சந்தித்தேன். என்னுடன் தேநீர் அருந்த வருமாறு அவளை நான் அழைத்தேன். அவள் வரச் சம்மதித்ததும் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவள் அன்று நன்கு பிரகாசமாகக் காட்சி அளித்தாள். தர்க்கரீதியாகப் பிறரைக் கவரும் வகையில் அவள் பேச்சு இருந்தது. எனக்குத் தெரிந்த பிற பெண்களிடமிருந்து அவள் மாறுபட்டுக் காட்சி அளித்தாள்.

அவளுக்கு உலகத்தைப் பற்றி, அதன் பிரச்சனைகளைப் பற்றி தீர்மானமான கருத்துக்கள் இருந்தன. உலகத்தின் எதிர்காலம் பற்றி அவள் கவலை கொண்டிருந்தாள்.

நாங்கள் அடைய விரும்பிய முடிவுகள் ஒன்றாகவே இருந்தன. ஆனால், அந்த முடிவுகளை நோக்கிய பயணங்களுக்கு, நாங்கள் வெவ்வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்தோம்.

நான் அவள் வீடு வரை சென்றேன். மறுநாள் அவள் பல்கலைக்கழகப் பக்கம் வருவாளா என்று நான் அவளைக் கேட்டேன்.

"நான் காலையில் வருவேன். நீங்கள் எப்போது வருவீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"நான் பிற்பகலில் வருவேன்." என்றேன்.

என்னையும் காலையில் வரச் சொல்லி அவள் வற்புறுத்துவாள் என்று நான் எதிர்பார்த்தேன்.

ஆனால், அவள் அப்படிச் செய்யவில்லை. ஓர் ஈடுபாடு இருந்தது; ஆனால், அதற்கான காரணத்தை என்னால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை.

ஒரு நாள் அவள் பல்கலைக்கழகத்திற்கு வரவில்லை. நான் நிலை குலைந்தேன். தடுமாறினேன். மகிழ்ச்சி அற்றவன் ஆனேன். நான் அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவள் உடம்பு சரியில்லை என்றாள். நான் அவளை வந்து பார்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டாள். எனக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது.

அவளை நான் மீண்டும் பார்க்க மூன்று நாட்கள் ஆகின. அவள் தாமதித்து வந்தாள். நான் அவளிடம் கோபித்துக் கொண்டேன். அவள் எதிர்ப்பு எதுவும் காட்டவில்லை. எனக்கு அது ஆச்சரியமாய் இருந்தது. நாங்கள் அன்று மணிக்கணக்கில் பேசினோம். நான் வீடு திரும்பியபோது ஏதோ வெற்றியடைந்தவன் போல உணர்ந்தேன்.

நான் அவளைப் பிரிந்திருந்த நேரம் எல்லாம் என்னுள் ஓர் அச்சம் பரவியது; அவள் என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பாள் என்று நான் கவலையுற்றேன். நான் மீண்டும் அவளைப் பார்க்க நேர்கிறபோது அவள் பழைய மாதிரியே இருப்பாளா என்பதே எனக்கு ஒரு திகைப்பை அளித்தது. அவள் இல்லாத வாழ்க்கை எனக்கு வெறிச்சென்றிருக்கும் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன். என்னுடைய நிகழ்கால சந்தோஷம் எந்த அளவுக்கு அவளை சார்ந்திருக்கிறது என்பதை என்னால் கணக்கிட்டுச் சொல்ல முடியவில்லை.

நான் அவளைப்பற்றி பகற்கனவு காண ஆரம்பித்தேன். அவளுடைய வாழ்க்கைத் துணைவனாக என்னை நான் உருவகப் படுத்திக் கொண்டேன். என்னுடைய கவலையும் அலைச்சலும் அதிகமாயிற்று. அவள் என்னை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் நான் என் உயிரை மாய்த்துக் கொள்ளவும் திட்டம் போட்டேன்.

நான் அவளுடன் இருந்த நேரங்களிலோ அவளைத் தொடுவது எனக்கு இயலாமற் போயிற்று. ஒரே ஒரு முறை நான் அவள் கைகளைப் பற்றியிருந்தேன். அதற்கு மேல் துணிச்சலாக எதுவும் செய்ய எனக்கு மனமில்லை.

நான் ஒருமாதிரி தடுமாறினேன். அவளை அடிக்கடி மீண்டும், மீண்டும் காண விழைந்தேன். என்னுடைய இரவுகள் நீண்டவையாகத் தோன்றின. பகலிலோ கனவுகள் என்னை மிதக்க வைத்தன.

நான் அவளுடன் கழித்த மணித்துளிகளைப் போற்றினேன். ஆனால், அவை சீக்கிரமே கரைந்துபோயின. என்னுடைய சிந்தனையில் என்ன தடுமாற்றம் என்பது எனக்குப் புரியவில்லை.

ஒருநாள் அவள் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும்போது சொன்னாள்:

"நான் நட்பாய் இருக்க விரும்புகிற முதல் ஆண்பிள்ளை நீங்கள்தான்."

அன்று முதல், நான் அவளை நிறையவே பார்க்கத் துவங்கினேன்.

ஆனால், ஒவ்வொருமுறை நாங்கள் சந்தித்த போதும் நாங்கள் சமூக, அரசியல் விஷயங்களைப் பற்றி வேறு வேறு கோணங்களில் விவாதித்தோம்; தீவிரமாக ஒருவரிடமிருந்து ஒருவர் மாறுபட்டோம். சமயங்களில் உரக்கவே பேசினோம். எதிராளியை வீழ்த்துகிற, நம் வசம் இழுக்கிற நோக்கத்துடன் ஆனால், இருவரில் யாரும் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாரில்லை.

அவள் பட்சபாதமாக வாதமிடுவதாக நான் குற்றம் சொன்னேன். நான் முரண்டு பிடிப்பதாக அவள் பதிலுக்குச் சொன்னாள். தத்துவரீதியாக நாங்கள் வெவ்வேறு துருவங்களில் வசித்தோம். சில நேரங்களில் எங்கள் வித்தியாசங்கள் விஸ்வரூபமெடுத்து, நாங்கள் இனி ஒருவரை ஒருவர் பார்ப்பதில்லை என்று முடிவு செய்வோம்.

ஆனால், அந்த முடிவை செயலாற்ற முடியவில்லை எங்களால்.

ஒவ்வொரு பிரச்சனையிலும் சிறிதோ, பெரிதோ நாங்கள் மாறுபட்டோம். எதிராளியைத் தம்வசம் இழுக்கிற பிரயத்தனத்தில் இருவரும் ஈடுபட்டோம். ஒவ்வொரு நாள் மாலையிலும் இதற்காகவே சந்திக்க ஆரம்பித்தோம்.

எங்கள் படிப்புக்களை விட்டு விட்டு நாங்கள் நீண்ட நேரம் வெளியே கழித்தோம். அவளுடன் இருந்த சில நேரங்களில் நான் அவள் கைகளைப் பற்றி, ஏன் முத்தமிடக்கூட விழைந்ததுண்டு. அவள் உடன்படுவாளா என்பது எனக்குப் பிரச்சனையாக இருந்தது.

அவளைப்பற்றிய என் ஆச்சரியம் நாளுக்கு நாள் அதிகமானது. நாங்கள் நீண்டதூரம் சேர்ந்து நடந்தோம்.

சேர்ந்து திரைப்படங்கள், நாடகங்கள், கண்காட்சிகள் பார்த்தோம். ஒருநாள் சினிமா முடிந்தபின் ஹோட்டலில் அமர்ந்து காபி சாப்பிடும்போது, நான் அவள் கரங்களைப் பற்றிக்கொண்டேன். அவள் இணங்கினாள். எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் அவளைத் தழுவ விரும்பினேன். என் கரங்களால் அவள் இடையைப் பற்றிக் கொள்ள ஆசைப்பட்டேன். அவள் மேனி முழுவதும் முத்தமிட வேண்டுமென்ற எண்ணம் கொண்டேன்.

அவளே திடீரென்று சொன்னாள்:

"நான் வீட்டிற்குப் போகவேண்டும். நான் தனியாக இருக்க விரும்புகிறேன்."

நான் உளறினேன்.

"நான் உன்னைத் தனியாக விடமாட்டேன். நான் உன்னை நேசிக்கிறேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விழைகிறேன். நான் மணம் செய்து கொள்வதில் உனக்கு விருப்பம் தானே?"

அவள் பதில் சொல்லவில்லை. மிகுந்த அமைதி வசப்பட்டாள். என்னுடைய் இதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது.

"நீ சரி என்று சொல்ல மாட்டாயா?" நான் பயந்தபடி கேட்டேன். என்குரல் எனக்கே பலஹீனமாய் ஒலித்தது.

அவள் அழத்துவங்கினாள். பிறகு தானாகவே அழுகையைக் கட்டுப்படுத்திய வண்ணம் சொன்னாள்:

"நானும் உங்களை விரும்புகிறேன். நீங்கள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. என் வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் பரப்பியவர் நீங்கள். நான் இவ்வளவு மகிழ்ச்சியாக இதற்கு முன் இருந்ததில்லை."

இதைச் சொல்லும்போதே அவள் முகம் வெளிறிப் போனதை நான் கவனித்தேன். அவள் நான் இத்தனை நாள் பார்த்த அழகான பெண் இல்லை. நான் அவள் கைகளை ஆதரவுக்காகப் பற்ற நினைத்தபோது அவள் வேண்டாம் என்று தடுத்தாள்.

"என்னை நீங்கள் மறந்துவிடுங்கள். நாம் திருமணம் செய்து கொண்டால் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. நாம் ஒவ்வொரு விஷயத்திற்கும் சண்டை போடுவோம். நாம் ஒருவரை ஒருவர் வெகு சீக்கிரமே வெறுக்கத் துவங்கி விடுவோம். நாம் அப்புறம் நல்ல நண்பர்களாய்க் கூட இருக்க முடியாது. நாம் இப்பொழுது இருப்பது போலவே நல்ல நண்பர்களாய் இருப்போம்!"

அவள் சொல்வது சரியென்றே எனக்கும் பட்டது. நான் அவளுடன் முதன் முதலாக உடன் பட்டேன். ஆனால், அவளைப்போல இந்த விஷயத்தை எடுத்துச் சொல்ல எனக்கு வார்த்தைகள் வரவில்லை.

நான் அவளுடன் வேறு எதுவும் பேசாமல் அவள் வீடு வரை தொடர்ந்தேன். இந்த நிமிஷம் குறித்து என்னுள் பல நாளாக ஓர் அச்சம் இருந்து வந்தது. நான் திடீரென்று மிகவும் தனியனாக உணர்ந்தேன்.

நாங்கள் மீண்டும் மறுநாள் சந்திக்கிற உறுதியோடு பிரிந்தோம். ஆனால், பிறகு நாங்கள் சந்திக்கவே இல்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் தவிர்க்கவே விரும்புகிறோம்.

ஆனால், நாங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம்.

---

"ஏம்மா, என் வயசுப் பிள்ளைகள் அழகாய் இருக்கணும் என்று ஆசைப்படுறது தப்பா?!"

# ஹேர் ஸ்டைல்

## ரூபராணி

"வாங்க துரை! இது யாரோட ஹேர் ஸ்டைல் கமலா? ரஜனியா?"

மாடிப்படியிலிருந்து இறங்கி வந்த நிராஜை அவன் அப்பா கிண்டலாகக் கேட்டார்.

நிராஜ் பதில் ஏதும் சொல்லாமல் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தான்.

"நான் கேட்டது உன் காதில் விழுந்ததா? மணித்தியாலக் கணக்கில கண்ணாடி முன்னால நிண்டு முடிவார்ரியே நீ என்ன பொம்பளயா? ஒனக்கு வெக்கமாயில்ல? காதை மறைக்கிற முடியை ஒதுக்கிட்டு நல்லாக் கேளு... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நீயா முடிவெட்டிக்கலேன்னா நாளைக்கு நானே உனக்கு மொட்டை அடிப்பேன்!" ஆவேசமாகக் கத்திவிட்டு அவசரமாக ஆபீசுக்குப் புறப்பட்டுப் போனார் அப்பா.

அடுப்பங்கரையில் இருந்து வெளியே வந்தாள் நிராஜின் அம்மா. "டேய் நிராஜ்! உனக்கு அப்பாவின் குணம் தெரியுமில்ல. நல்லபுள்ளையா அவர் பேச்சக் கேட்டு நடக்கப்பார்!"



நிராஜ் கூச்சலிட்டான். "அம்மா! அப்பாவுக்கு வயசென்ன? ஒரு ஐம்பது இருக்குமில்ல. என் வயது பதினேழு தெரியுமா?"

"முடி வெட்றதுக்கும் வயசுக்கும் என்ன சம்பந்தம்?" அம்மா குழம்பினாள்.

"நீ என்னதான் சொல்றே? எனக்கொண்ணும் புரியலேடா?"

"புரியும்படியாச் சொல்லட்டுமா?" நிராஜ் தொப்பென்று கதிரையில் உட்கார்ந்தான்.

"ஏம்மா! என் வயசுப் பிள்ளைகள் அழகாய் இருக்கணும், நல்லாய் உடுக்கணும் என்று ஆசப்பட்றது தப்பா? நான் என்ன நாளுக்கொரு உடுப்பா இல்ல சப்பாத்தா மாத்திக்கிறன்? இந்த ஹேர் ஸ்டைல் மட்டுந்தானே என்னால மாத்திக்க முடியிறது. இதனால என் படிப்புக்கென்ன பாதிப்பா? அப்பாவுக்கு மொட்டை விழாம என்னப் போல முடியிருந்தா நீ சந்தோஷப் படுவதானே? சின்ன வயசு ஆசைகளச் சின்ன வயசிலதானே பண்ணிக்கமுடியும்?"

படபட என்று சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட்டுத் தாயை ஏறெடுத்தான் நிராஜ்.

"டேய் ஒண்ணப் புரிஞ்சுக்க! படிக்கிற வயசில இந்த ஸ்டைல் எல்லாம் கூடாது. ஸ்கூல்ல ஒன்னப் பத்தி என்ன நினைப்பாங்க?"

நிராஜ் அவசரமாகக் குறுக்கிட்டான். "அம்மா பார்த்திபன் மாஸ்டரின்ர ஹேர் ஸ்டைல் ரஜினி ஸ்டைல். அது தெரியுமா ஒனக்கு?"

"டேய் டேய்.... இந்த ஸ்டைல் எல்லாம் எனக்கொண்ணும் தெரியாது. நீயாப்போய் முடிவெட்டிக்க; இல்லாட்டி அவரா ஒன்ன இழுத்துக்கொண்டு மொட்டை அடிச்சிடுவார்."

நிராஜுக்குப் பொறுமை அறுந்தது. நறநறவென்று வந்த கோபத்தைப் பல்லால் கடித்துக் கொண்டு விருட்டென்று வெளியேறினான்.

"ஹாய் நிராஜ்!" வழியில் எதிர்ப்பட்டாள் எஸ்தர். "கெமிஸ்ற்றி ரியூஷன் கிளாஸ் நீ வரல்ல?" நிராஜ் மௌனமானான்.

"இதோ பார் நிராஜ்! நீ படிப்புல மட்டுமில்ல நல்ல ஹேர் ஸ்டைல் போட்டுக்கிறதிலும், பலே கெட்டிதான். ஐ லைக் இற்" சொல்லிவிட்டுச் சைக்கிளில் சிட்டாகப் பறந்தாள் எஸ்தர். நிராஜுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. கருகருவென வளர்ந்திருந்த முடியை அவன் பாசத்தோடு தடவினான். அவன் கண்களில் நீர் முட்டியது.

மணி ஆறைத் தாண்டிவிட்டது. நிராஜ் இன்னும் வீடு திரும்பவில்லை. மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டவள் போல் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள் அவன் அம்மா. ஆபீஸ் ஃபைலில் முகம்பதித்திருந்தார் நிராஜின் அப்பா.

"என்னங்க இன்னும் நிராஜைக் காணோம்!" அம்மா கவலையை வெளியிட்டாள். மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்த நிராஜின் அப்பா, நெற்றியைச் சுழித்தார். "ஸ்பெஷல் கிளாசாக்கும்!" சொல்லிக் கொண்டே மறுபடியும் ஃபைலைப்புரட்டினார்.

மணி ஏழு முறை அடித்து ஓய்ந்தது. நிராஜின் அம்மாவால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

"ஐயோ என்புள்ள எங்கபோனானோ தெரியலியே.....?" அவள் குரலில் பதட்டம் தெரிந்தது.

"எதுக்குப் பயப்படுறே! அவனென்ன சின்னப் பிள்ளையா காணாமல் போக? இன்னிக்கி சனிக்கிழம கெமிஸ்ற்றி கிளாஸ் போயிருப்பான்." நிராஜின் அப்பா சொல்லி முடிக்கையில் கேற் திறக்கும் சத்தம்கேட்டது. நிராஜ் அமைதியாகக் கூடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"இதென்னடா கோலம்?" அம்மா பதறினாள். அவன் அப்பாவால் திகைப்பில் இருந்து மீளமுடியவில்லை.

"டேய் நிராஜ்! என்னடா இப்பிடிப் பண்ணிட்டே?" அம்மா தாங்கமுடியாது கதறினாள்.

"ப்ளீஸ் என்னை எதுவும் கேக்காதீங்க. இப்போ உங்களுக்கெல்லாம் திருப்திதானே?" நிராஜ் குலுங்கிக் குலுங்கி அழுதான் மொட்டைத் தலையோடு.

---

"அதுதானே பார்த்தேன்.... இவ்வளவு நாளும் காணாத இந்த முகம் இப்போ எங்கிருந்து வந்ததுன்னு...."

குளிப்பதற்காகவேண்டி வாளியை எடுத்துக் கொண்டு கிளம்பினான் ஹரீஸ். பாடசாலை செல்லும் சிட்டுக்களை இரசித்துக் கொண்டே வீதிக்கு வந்தான். அவள் அவனைப் பார்த்துப் புன்னகைக்க, பதிலுக்கு அவனும் புன்னகைத்துவிட்டு நடையைத் தொடர்ந்தான்.

வீதியில் தண்ணீருக்காகப் பெண்கள்

# பச்சை தேசத்துப் பசுங்கிளி

கியூவில் நின்றிருந்தார்கள். அந்தம்மா அவனைப் பார்த்து புன்னகைத்தார்.

"தம்பி...! எங்களுக்கு வோட்டர் சப்ளை தாறதாகச் சொல்லி அஞ்சு மாசத்துக்கும் மேலாவுது. இன்னும் ஒன்னையும் காணோம். கண்டியிலே யூ.என்.பி. கவர்மண்டு வந்துட்டாம். அதான் யோசிக்கிறாங்களாக்கும். எங்களுக்கு அதை மட்டும் கொடுத்திட்டாங்கன்னா எங்களுக்கு எந்தக் கஷ்டமும் கிடையாது."

நேற்று அந்தம்மா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

அவன் ஜீ.ஏ.கியூ பரீட்சைக்காகப் படிக்க வந்து இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. கிட்டத்தட்ட ஊரிலுள்ள அத்தனை பேருமே அவனுக்குப் பழக்கப்பட்டுப் போய்விட்ட போதிலும், இந்த ஊரிலுள்ள கஷ்டங்களையும், சிரமங்களையும்தான் இவனால் பழக்கப் படுத்திக்கொள்ள முடியவில்லை. அவன் சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டவன். சுத்தமாக உடுத்திப் பழகியவன்.

மடவளை வாழ்க்கை அவனுக்குக் கஷ்டமாகவே இருந்தது. காலையில் எழும்பியவுடன் முதல் வேலையாக குழாயடிக்குப் போய் தண்ணீர் எடுக்க வேண்டும். என்றாலும் மற்றவர்கள் போல் அவன் கியூவில் நிற்க வேண்டிய அவசியம் கிடையாது. ஆண் பிள்ளை என்பதாலோ என்னவோ அதில் மட்டும் அவனுக்கு முன்னுரிமை கிடைத்தது.

கிணறு தேடிக் கால்மைல் தூரம் நடக்க வேண்டும். பள்ளத்தில் கிணறு இருந்தது. இறங்கிக் குளித்துவிட்டு மேலே வந்தபோது அவள் வந்தாள். நேற்று அவனைக் கண்டு நாணமாய்த் தலை குனிந்து நின்றவள், இன்று முகம் பார்த்துப் புன்னகைத்தாள்.

"நானா! நேற்று நீங்க குளிக்க வந்தப்போ



இந்த வோச்ச மறந்து வச்சிட்டுப் போயிட்டீங்க போல. நான் எடுத்து வச்சேன். இந்தாங்க!"

அவள் கொடுத்ததை அவன் வாங்கிக் கொண்டான்.

"ரொம்ப தேங்க்ஸ்."

"எதுக்கு நானா நன்றியெல்லாம். யாராவது திருடிட்டுப் போயிடுவாங்கன்னு தான் நான் எடுத்து வச்சேன்."- அவள் குறும்புத்தனமாய்ப் பேசினாள்.

"நானா! நீங்க ஊருக்குப் புதுசா?"- அவள்தான் கேட்டாள்.

"ஆமாம்!"

"எந்த ஊர்?"

"நிந்தவூர்!"

"அதானே பார்த்தேன்.... இவ்வளவு நாளும் காணாத இந்த முகம் இப்போது மட்டும் எங்கிருந்து வந்ததுன்னு."

"இந்த ஊரிலுள்ள எல்லோரையுமே உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது....ஆனா இந்தக் கிணத்துக்கு வாறவங்க எல்லோரையுமே எனக்குத் தெரியும்."

"நீங்க படிக்கிறீங்களா?"

"ஆமா... மதீனா ஸ்கூல்ல பத்தாம் ஆண்டு படிக்கிறேன்."

"உங்க பெயரென்ன?"

"என் பெயர்....நஸீஹா."

குளித்துவிட்டு வீதிக்கு வந்தபோது, அவன் கண்கள் அவள் வீட்டு முற்றத்தைத் தேடின.

## நிந்தவூர் எம். ஹிதாயத்

இரண்டு வருடங்களுக்குப் பின்னால், மீண்டும் அவளை சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு.

அவளுடைய வீடு பூட்டப்பட்டிருந்தது. வீட்டுக்கு முன்னால் அவளும் காணாமல் போயிருந்தாள். 'எங்கே அவள்? எங்கே போனது அந்த நிலவு? இந்தப்பூவின் வருகை அந்தத் தென்றலுக்குத் தெரியவில்லையா? அல்லது இந்த வானத்தின் சங்கடம்தான் அந்த வெண்ணிலவுக்குப் புரியவில்லையா?' அவன் மனம் சங்கடத்தால் தவித்தது.

"என்ன வேண்டும் தம்பி உங்களுக்கு?" வீதியில் நின்றவனைப் பார்த்துப் பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

"இங்கே நஸீஹான்னு....?"

அவன் தயங்கியபடியே கேட்டான்.

"யாரு...? அந்தப் புள்ளையையா கேட்கிறீங்க? அவதான் கல்யாணம் ஆகி புருஷன் வீட்டுக்குப் போய் ஆறு மாசமாச்சே!"

"அவங்க எப்போ வருவாங்க?"

"அதெப்படித் தம்பி சொல்ல முடியும்? புருஷன் இஷ்டப்பட்டா கூட்டி வருவான். இல்லேன்னா... அவ்வளவுதான்!"

சிரித்தவாறே சொல்லிவிட்டு அவர் உள்ளே போனார்!


படிப்பகம்

www.padippakam.com

# பழியும் விழியும்

அரங்கில் கண்ட காட்சியை
மனக் குரங்கு தாவிப் பிடித்தது.

கட்டிப்போட்டாலும்
மனக்குரங்கு கட்டறுத்து பாயும்.

எதை நினைக்காதே என்று
தடைபோட நினைக்கிறோமோ
அதைத்தான் நினைக்கும் மனக் குரங்கு!

'குத்து விளக்காய் தெரிந்தாளே
கொத்தும் விழியால் அடித்தாளே
முத்து நகையாய் பொழிந்தாளே
குத்தும் எழிலால் முறைத்தாளே'

ஆடல் அரங்கில் ஆடியவள்-மனதோடு
கூடல் நடத்தி கலந்து போனாள்.

'அவள் எங்கே - நான் எங்கே
எட்டாத நிலா- கிட்டாத பலா'
தட்டித்தான் அடக்கினான் மனதை'

"உள்ளங்கள் ஒன்றுபட்டால்
பள்ளம் என்ன மேடு என்ன?"
மனக்குரங்கு தாவிப் பாய்ந்தது.

"ஒளிமுகத்தை காட்டிப் போனாள்
கிளி மொழியாள் பாடிப் போனாள்
வெள்ளி நிலாப் புன்னகையால்
கள்ளி எனை களவு செய்தாள்"

மனக்குரங்கின் வழியே
கற்பனையும் பாய்ந்து சென்றது.

"ஆடினாள்-ஆடவைத்தாள்
இடை சுழலத் தாவினாள்
கடைக் கண் வீசிமேவினாள்
பாடினாள்-பாலினில்
தேன் கலந்து ஊற்றினாள்."

"பந்தென ஆடிய பாவை
பந்தாடினாள் என் மனதை!
பந்துகள் ஆடிய மேனி
பந்தாடியதே என் மனதை!
வண்டுகள் ஆடிய விழிகள்
மன்றாடியதே என் மனது!
குன்றுகள் தோற்கும் எழில்கள்
மன்றாடியதே என் மனது!

"கொல்லாதே- கொத்தாதே
மோகத்தால் கொல்லாதே மயிலே
மோக விழிகளால் கொத்தாதே மானே
தாப எழில்களால் கொல்லாதே மயிலே
தாக இதழ்களால் கொத்தாதே கிளியே"

பந்தாடப்பட்டதுவும்
மன்றாடி நின்றதுவும்
கண்ஜாடை பட்டவுடன்-காதல்
பண் மனதில் பாடியதும்
மனதில் மட்டும்தான் அவன்
மனதில் மட்டும்தான்!

"பார்வையால் என்னை வென்றாய்
பாவையே ஏன்தான் தின்றாய்
பாதியில் ஏன்தான் விட்டாய்
பாவையே எங்கே போனாய்?"

உரத்தேதான் பேசிவிட்டான்
'களுக்' கென்று சிரிப்பொலி
மரத்தருகே கேட்டு நிமிர்ந்தான்!

அரங்கினில் கண்டவள்
நேரினில் தோன்றினாள்.

மாதுளம் கன்னம் மின்ன
மாம்பழக் கனிகள் துள்ள
மான் என விழிகள் பாய
காண் எனைக் காண் என்றே
வான் மகள் போல வந்தாள்!

கண்டவன்-அமுதம்
உண்டவன் போலாய் ஆனான்.

'குளிர் முகம் குங்குமப் பூ முகம்
தளிர் என ஆடும் மெல்லுடல்
தாங்குமோ தென்றல் பட்டால்?'
சந்தேகம் உற்றான் மனதில்.

"வணக்கம் கவிஞரே!
குறுக்கிட்டுவிட்டேனா சிந்தனையில்?"
குயில் தோற்றது போ என்றான்
உதட்டால் அல்ல உள்ளத்தால்!

'குறுக்கீடில்லை கண்ணே
உருக்கிக்கொண்டிருப்பவளே நீதான்
குறுக்கீடில்லைக் கண்ணே
குடியிருப்பவளே நீதான்'
என்றெல்லாம் சொல்லத்தான் ஆசை
நன்றல்ல என்று
அடக்கிக்கொண்டான்.

"என்ன கவிஞரே
பதிலே சொல்ல மாட்டீரா?"

"கேள்வியும் நீயடி
கிளியே பதிலும் நீயடி!"
உள்ளத்துக்குள் ஒத்திகை
பார்த்தாலும்
உதட்டில் உட்கார மறுத்தன
வார்த்தைகள்.

மனதுக்குள் மட்டும்
கேள்விக்குப் பதில் தயாராய் உள்ளது.
உதடு என்னும் மன்றத்தில் மட்டும்
ஒரு வார்த்தைகூட ஓடி வர
மறுக்கிறதே!

"நான் செல்லவா கவிஞரே
உங்கள் சிந்தனை தொடரட்டுமேன்!"

'கைக்கெட்டிய கனி
வாய்க்கெட்டாமல் போகப்போகிறதே
மடையா டேய் மடையா
மாங்காய் மடையா
பாங்காய் பேசடா!'
உள்ளம் உந்தித் தள்ளியது.



"என் சிந்தனையே
அழகை வந்தனை செய்வதுதானே
தேடிவந்த நிலவை
ஓடிப்போ என்று சொல்ல
மனம் வருமோ?"

'மகனே மச்சமடா உனக்கு
எட்டடி பாயச் சொன்னால்
எண்பதடி எட்டிப் பாய்ந்துவிட்டாயே!'
உள்ளம் கள்ளமின்றிப் பாராட்டியது.

மான் மிரண்டதுபோல
மெல்ல விலகி ஓட நினைத்தாள்
உடனே கணை தொடுப்பான்
உள்ளே இருப்பதை உரைப்பான்
என்று நினைத்தா வந்தாள்?
அதுதான் மிரண்டாள்.

"நில்!" என்றான்
"சொல்!" என்றான்
"காதல் கல் வீசி-என்
இதயம் கொய்தவளே
சொல்லடி-நீ
எனக்குரியவளா-என்னவளா?
இல்லையெனில்
ஓடிப்போ- ஆம் என்றால்
வந்து ஒட்டிக்கொள்!"

தயங்கி நின்றாள்
தாவித் தழுவிக்கொண்டான்

"மறுபடி எப்போது-இந்த
மான் விழிக்காரியை சந்திப்பது?"
பதில் சொல்லாமல் பறந்தாள்.

## இலக்கிய நயம்

இதழ் சுவை இனித்தது.
புதுக் கதை சுவைத்தது.

சந்தித்தது தனிமையில் அதற்கிடையே
தீயாய் செய்தி பரவியது எப்படி?

கதை கதையாய்
ஊரெங்கும் அவர்கள் காதல்கதை.
கண்டது பாதி காணாதது மீதி

தருவது **ரசிகன்**

கட்டிவிட்ட கதைகளுக்கு
கைகள் பல, கால்களும் பலப்பல.

"கதைகள் பரவியதால்
உள்ளம் வதைபட்டதோ?
கண்ணே! உன் மனதில்
துன்பத்தின் நிழல் பட்டதோ?"

அவன் பரிவோடு கேட்டான்
அவள் பல்நகை பொழிந்தாள்.

அவள் புன்னகைக்கு
பொருள் புரியவில்லை அவனுக்கு.
அவளே சொன்னாள் பொருள்;

"விசிறுவதால்
தீ வளர்கிறது!
நீர் ஊற்றுவதால்
செடி தழைக்கிறது!
ஊரார் பழிச்சொல்லால்
காதல் வளர்கிறது.

ஆகவே ஊரார் பழிச்சொல்லே
காதல் பயிருக்கு
நீரென்போம்!
வாடாதிருக்க வழி என்போம்!"

அவள் விளக்கம் இனித்தது
அவள் இதழ்போல!
அவள் சொன்னதோ
குறள் விளக்கம்;

"கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து"

அதிகாரம்-115- குறள்-1144

## சிந்தியா



★ சிந்தியா! தமிழ் மக்கள் எப்போது சிந்திக்கப் போகிறார்கள்?

கே. ஆனந்த், வத்தளை.

யார் சொன்னது சிந்திக்கவில்லை யென்று? சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் அரசியல்வாதிகள் பட்டபாடு தெரியாதா என்ன? யாரும் தூண்டிவிடவும் இல்லை; யாருக்காகவும் பந்தம் பிடிக்கவும் இல்லை. சொந்தச் சிந்தனையில் தூள்கிளப்பி விட்டார்கள் ஐயா!

★ வெற்றி நிச்சயம் எந்தளவில் இருக்கிறது?

கே. இந்திராணி, மாத்தளை.

யாருக்கு? எப்போது? என்பது மட்டும் தெரியாத நிலையில்.



★ ரம்பாவை சிம்ரான் ஓரம் கட்டுவாரா?

எல். லீனஸ், நீர்கொழும்பு.

இருவருக்குமே எதையும் கட்டுவதில் அத்தனை விருப்பமில்லையாமே!

★ கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுப்பாரா?

அ. துரைராஜ், மட்டக்களப்பு.

'பந்த்'தில் கூட கலந்துகொள்ளாமல் வழக்கமான பாணியில் மழுப்பல் செய்திருக்கிறாரே! ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க மறுத்துவிட்டாரே! ஈழத்தமிழருக்கு ஆதரவு கொடுத்தால் அதில் முதல் ஆளாக நிற்பேன் என்று சில மாதங்களுக்கு முன்னர்தானே சொல்லியிருந்தார் மு.க. ஆனால் இப்போது... ம்.... அரசியல்தானுங்க.

★ திருநாவுக்கரசை கட்சியைவிட்டே நீக்கிவிட்டாரே ஜெயலலிதா?

க. ஈஸ்வரன், கொழும்பு-11.

சிவா! திருந்துவதும் இல்லை; மனம் வருந்துவதும் இல்லை. அதற்கு இன்றைய முன்னுதாரணம் ஜெயலலிதா அம்மையாருதான். அந்த அம்மையாருக்குப் பிடித்தவை பொம்மைகள்தான்.

★ சுதந்திரக் கிண்ணத்தை இந்தியா இலங்கையிடம் கொடுத்துவிட்டதே?

எம். நிலாம், மட்டக்களப்பு.

'நல்லவேளை பாகிஸ்தானிடம் இழக்கவில்லையே!' என்று சந்தோஷப்படுகிறார்களாம். அது ஒரு கௌரவப் பிரச்சனையல்லவா? இன்னொரு விஷயம், இந்தியா சுதந்திரம் பெற்றதும் நள்ளிரவில்தான்! கிண்ணத்தைப் பறிகொடுத்ததும் நள்ளிரவில் தான்!

★ சச்சின் டெண்டுல்கர் கப்டனாக நீடிப்பாரா?

ஆர். ஜெயகணேஷ், கொழும்பு-09.

தோல்விகளுக்கெல்லாம் கப்டன்மீது பழி போடும் பழக்கத்தை தொடர்ந்தால் இந்திய அணிக்கு சிறந்த கப்டனே கிடைக்கமாட்டார். அவுஸ்திரேலிய அணி பல தோல்விகளைக் கண்டபோதும், விட்டுப்பிடித்துவிட்டு இப்போதுதானே கப்டனைத் தூக்கும் முடிவுக்கு வருகிறார்கள்! மற்றொரு குட் நியூஸ்: டெண்டுல்கருக்கு புதியபதவி ஒன்று கிடைக்கப்போகிறது. அப்பாவாகப் போகிறார்!

★ அரசியல் தலைவர்களின் தரம் மட்டுமல்ல, அறிவுத் திறனும் வீழ்ச்சிகண்டுவருகிறதே?

எஸ். கபூர், கந்தளாய்.

கவலைப்படாதீர்கள் கபூர், மக்கள் இங்கே முட்டாள்களல்ல. அதிருக்கட்டும்! உங்களுக்காக ஒரு ஜோக்:

அரசியல் தலைவர் ஒருவர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்து திரும்பினார்.

"ஆங்கிலேயர்களிடம் நீங்கள் கண்ட ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்ன?" என்று கேட்டபோது அவர் சொன்ன பதில் இது:

"இங்கிலாந்து மக்கள் கொடுத்து வைத்தவர்கள். மிக உயர்ந்த இனம் அது. அங்கே இரண்டுவயதுக் குழந்தைகூட ஆங்கிலம் பேசுகிறது!"

★ ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் தீர்வை முன்வைக்க முடியும் என்கிறாரே ஜனாதிபதி?

சி. சோதிநாதன், திருமலை.

பின்னர் யாருக்காகக் காத்திருக்கிறார்கள்?! பிரித்துப்போட வேண்டியதுதானே!

★ தலைகால் புரியாமல் ஆடுவது என்றால் என்ன?

என். ரமணி, கண்டி.

எக்கச்சக்கமான போதையுடன் வந்தவன் தன் வீட்டில் ஓரிடத்தைப் பாத்ரூம் என்று நினைத்துக் கொண்டு சிறுநீர் கழித்தான். சிறுநீர் கழித்ததும் மனைவியிடம் சண்டையை ஆரம்பித்தானாம்.

"நம்முடைய பாத்ரூமில் ஏதோ பேய் நடமாட்டம் இருக்கிறது. நான் கதவைத் திறந்தேன். உள்ளே விளக்கு எரிந்தது. மூடினேன். உடனே உள்ளே இருந்த விளக்கு தானாக அணைந்துவிட்டது."

மனைவி கோபத்துடன் கத்தினாள்:

"அது பாத்ரூம் அல்ல; குளிர்சாதனப் பெட்டி!"



★ சமீபத்தில் ஒரு துறவியார் கல்யாணம் பண்ணிக் கொண்டாரே, அதுவும் தன்னை விட 20 வயது குறைந்த பெண்ணை?

மா. சிவலட்சுமி, நுவரெலியா.

காவியுடைக்குள் இருந்து பிரேமானந்தா ஸ்டைலில் தப்புச் செய்வதுதான் கண்டிக்கப்படவேண்டியது. அந்தத் துறவியோ கண்டார், காதல்வயப்பட்டார். அதனைப் பகிரங்கமாக அறிவித்தார். துறவைவிடுத்து, மடாலயத் தலைவர் பதவியை உதறிவிட்டுப் போனார். இதில் சிரிக்க என்ன இருக்கிறது? ஏன் சில பத்திரிகைகள் பெரிதுபடுத்தின என்றுதான் தெரியவில்லை. வயது வேறுபாடு பற்றி கவலைப்படவேண்டியது நாம் அல்ல; சம்பந்தப்பட்டவர்கள்தான். இருவருக்கும் ஓ.கே. பின்னர் நமக்கேன் மனதில் வெக்கை?

★ டியர் சிந்தியா! கவர்ச்சிக்கும், ஆபாசத்துக்கும் ஒரு வரைவிலக்கணம் கூறும் பார்க்கலாம்?

செல்வி ஜி. ரேணுகா, கொழும்பு-06.

ஓவியக் கண்காட்சி ஒன்றுக்குச் சென்றார் மகாகவி ரவீந்திரநாத் தாகூர். அங்கே இருந்த படம் ஒன்றை நின்று நிதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அது ஒரு பெண்ணின் முழு நிர்வாண ஓவியம்.

"என்ன இந்த ஆபாச ஓவியத்தைப்போய் இவ்வளவு ஆர்வமாகப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார் நண்பர்.

உடனே தாகூர் அப்படத்தை எழுதிய ஓவியரின் அனுமதியுடன், ஒரு தூரிகையை எடுத்து வெங்காயச் சருகுபோல் ஒரு துணியை அந்தப் பெண் ஓவியம்மேல் வரைந்தார்.

"இப்போதுதான் இந்தப் படம் ஆபாசமாகி இருக்கிறது. ஏனெனில், இனி இந்தப் படத்தை நீங்கள் யதார்த்தமாகப் பார்க்காமல் உற்று உற்றுப் பார்ப்பீர்கள்" என்றார் தாகூர்.

★ டெண்டுல்கர்-பிரையன் லாரா இருவரில் சிறந்த ஆட்டக்காரர் யார்?

எஸ்.எஸ். நியாஸ், அக்கரைப்பற்று.

இருவருமே ஒருவரை ஒருவர் புகழ்கிறார்கள். "சச்சின் விளையாடுவதைப் பார்க்க எனக்குப் பிடிக்கும். நான் பணம் கொடுத்து ஒருத்தரின் விளையாட்டைப் பார்க்க விரும்புகிறேன் என்றால், அது சச்சினின் விளையாட்டுத்தான்!" என்கிறார் லாரா. இருவருமே சிறந்தவர்கள்தான். எப்போது இன்னொருவரை மனம் திறந்து பாராட்ட முடிகிறதோ அப்போதே தன்னம்பிக்கை உள்ளவர்களாகி விட்டனர். தன்னம்பிக்கை உள்ளவர்கள் தோற்பதில்லை.

★ கவர்ச்சியால் சாதிக்கக் கூடியது என்ன சிந்தியா?

ஜெ. வினோத், பதுளை.

கிக்!

★ டியர் சிந்தியா! 'அருணாச்சலம்' தோல்விப் படம் என்பது உண்மையா?

எம்.சதீஸ், தெகிவளை.

ஏன் இந்தச் சந்தேகம். 50 நாளை தாண்டி தமிழ் நாட்டில் 97 திரையரங்குகளில் அருணாச்சலத்தின் கொடி பறக்கிறது. சில திரையரங்குகளில் 'பாட்ஷா', 'முத்து' பட வசூல் சாதனைகளையும் முறியடித்திருக்கிறார் அருணாச்சலம்.

## ஸ்போர்ட்ஸ்

# பரிசு 112 கோடி ரூபா



பிரபல டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராஃப் இதுவரை 103 போட்டிகளில் சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

அவற்றின் மூலம் இந்த ஜேர்மன் நாட்டு வீராங்கனை பரிசுத் தொகையாக ஈட்டிய தொகை மட்டும் ஏறக்குறைய 112 கோடி ரூபாவைத் தாண்டிவிட்டது. டென்னிஸ் உலக வரலாற்றில் பரிசுத் தொகை மூலம் அதிகமாகச் சம்பாதித்திருப்பவர் அமெரிக்க வீராங்கனை மார்ட்டினா நவரட்டிலோவா. 20 வருடங்களுக்கு மேலாக டென்னிஸ் விளையாடியுள்ள மார்ட்டினா ஏறக்குறைய 114 கோடி ரூபாவைப் பரிசுத் தொகையாகப் பெற்றுள்ளார்.

மார்ட்டினா நவரட்டிலோவாவின் இந்தச் சாதனையை ஸ்டெபி கிராஃப் இந்த ஆண்டிற்குள் முறியடித்து விடுவார்.

# குருவில்லாவுக்குத் திருமணம்



இந்தியக் கிரிக்கெட் அணியில் அண்மையில் இடம்பிடித்திருக்கும் வேகப்பந்து வீச்சாளர் அபே குருவில்லாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

மும்பையைச் சேர்ந்த சாரா பென் என்பவருக்கும் குருவில்லாவுக்கும் கடந்த மாதம் 18ம் திகதி மும்பையில் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி வரும் செப்டெம்பர் மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இந்திய அணி திரும்பியதும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் குருவில்லா-சாரா திருமணம் நடைபெறவுள்ளது.

# ஒரு நாள் போட்டித் தொடர்

இதுவரை 'ஆசியக் கோப்பைப் போட்டி'களுக்காக நடைபெறும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி வந்த வங்காளதேச கிரிக்கெட் அணிக்கு அண்மையில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து கிடைத்துள்ளது.

இதையொட்டி வங்காளதேசம் ஒருநாள் கிரிக்கெட் தொடர் போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளது. வங்காளதேசத்தின் தலைநகரான டாக்காவில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தத் தொடர் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேச அணிகள் விளையாடவுள்ளன. இந்தப் போட்டிகளில் இங்கிலாந்து அணியையும் விளையாட வைக்கும் முயற்சிகளில் வங்காள தேசம் ஈடுபட்டுவருகிறது.

## ஆசியப் போட்டி

'ஆசியக் கோப்பை' கிரிக்கெட் போட்டி ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய 4 ஆசிய நாடுகள் கலந்து கொள்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 86

இராமபிரானுடன் இலங்கைக்கு வந்து முகாமிட்டிருந்த படைகளையும் அவர்களின் கட்டுப்பாடான நடவடிக்கைகளையும் பயிற்சிகளையும் பார்த்து அறிந்துகொண்ட இராவணனின் ஒற்றர்கள், இராவணனைக் காண்பதற்காகக் காத்து நின்றனர். மேற்கொண்டு எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பது என்பதனைத் தனது அமைச்சர்களுடனும் படைத்தளபதிகளுடனும் கலந்தாலோசிக்க மந்திராலோசனை மண்டபத்தில் இராவணன் இருந்தான். ஆலோசனையில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் வந்து சேர்ந்ததும் அம்மண்டபத்தின் கதவுகளனைத்தும் மூடப்பட்டுவிட்டன.

காற்றுக்கூட நுழைய முடியாதபடி கட்டுக்காவல்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. காது கேளாத, வாய்பேச முடியாத, புத்தி குறைந்தாலும் இட்ட கட்டளையை- ஏன் என்று கேட்காமல் உடனடியாகச் செய்து முடிக்கும் ஆற்றல்பெற்ற அலிகள், காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

தன்னுடைய சொந்தத் தம்பியான விபீடணனே தன்னை விட்டுப் பிரிந்து எதிரியின் பக்கம் போய்ச் சேர்ந்து விட்டிருந்தமையினால் இராவணன் ஓரளவு தளர்வுற்றிருந்தான். இதனால், அடுத்து, தான் எடுக்கப்போகும் நடவடிக்கை பற்றிய தகவல்கள் வெளியேறிவிடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே விபீடணனுக்கு ஓரளவு சார்பாக இருக்கக் கூடியவர் என்று சந்தேகிக்கப்படக்கூடிய நிலையிலிருந்தோரையும் ஆலோசனைக் கூட்டத்துக்கு இராவணன் அழைக்கவில்லை.

### மாலியவான் கூற்று

இராவணனின் தாயாரின் தந்தையான மாலியவான் எனும் முதியவர் தன் கருத்தைக் கூற முன்வந்தார். அனுபவமும் அறிவும் பெற்ற அப்பெரியவர், "மகனே இராவணா! சீதையை நீ சிறைப்பிடித்து வந்த அன்றே நமது நாட்டுக்கு தீவினை நெருங்கிவிட்டதை நான் உணர்ந்து கொண்டேன். இரு நாடுகளுக்குமிடையிலான பெருங்கடலை கற்களைக் கொண்டே அடைத்து அணைகட்டி அதன் மீது படை நடத்தி நம் நாட்டுக்குள்ளேயே புகுந்துவிட்டார்கள். இராமனோ சாதாரண மானவனாகத் தென்படவில்லை. தனது பகைவர்களையெல்லாம் அழித்துவிட்டான்.

அவனுடைய தூதனான அனுமனே உன் மகன் ஒருவனைக்கொன்றான். எண்ணற்ற நம் வீரர்களையும் அழித்துவிட்டான். அழகுடன் விளங்கிய இலங்காபுரியைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டான். நம் கண் முன் நடைபெறும் பல சம்பவங்கள் பெரும்பாலும் கெட்ட சகுனங்களாகவே தென்படுகின்றன. நம் அரக்கர் இனம் வாழ்வதும் செத்து மண்ணொடு மண்ணாவதும் உன் கைகளில்தான் உள்ளது. உன்னுடைய ஆட்சியில் இதுவரை காணாத அபத்தங்களே காணத் தொடங்கிவிட்டன. ஆகவே சமாதானமான முறையை நாடுவதே நல்லது!" என்று கூறினார்.

இதனைக்கேட்ட இராவணன் தன் இருக்கையை விட்டுக் குதித்தெழுந்தான். கோபக்கனல் தெறிக்க அந்த முதியவரைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்தான். தரையில் தன் காலால் ஓங்கி உதைத்தான்.

"வயதில் முதிர்ந்தவராயிற்றே என்று உம்மைச் சும்மா விட்டுவிட்டேன். நல்ல புத்திமதி சொல்ல வந்துவிட்டீர்! என் கண் முன் நிற்கவேண்டாம். அன்றே குலத்துரோகி விபீடணனுடன் நீரும் போயிருக்கலாமே! இப்போதாவது போய்விடும்!" இவ்வாறு சிங்கம்போல் கர்ஜித்தான். மாலியவான் உண்மையில் பயந்தே போய்விட்டார். இராவணன், தன் மகளின் மைந்தன் என்பதால் ஓரளவு மதிப்புத் தருவான் என்றே கருதி தன் கருத்தை வெளிப்படையாகக் கூறத் தலைப்பட்டார். அவர் அம்மண்டபத்தை விட்டு வெளியேறப்புறப்பட்ட சமயம், படைத்தளபதியான பிரகத்தன் எழுந்தான்.


பிரகத்தன் கூறியதாக கவிச்சக்கரவர்த்தி தரும் செய்யுளைப் பார்ப்போம்.

கண்மை இந்நகர் வேலை கடந்த வத்
திண்மை ஒன்றும் அலால் திசை காவலர்
எண்மரும் இவற்கு ஏவல் செய்கின்ற அவ்
உண்மை ஒன்றும் உணர்ந்திலை போல்
என்றான்.
(யுத்த காண்டம் 736)

பொருள்:

"இரு நாடுகளுக்குமிடையேயுள்ள கடலைக் கடப்பதற்கு அணை ஒன்று அமைத்தார்கள். நமது பகைவர்களாகிய அவர்களிடம் வேறு என்ன ஆற்றல் இருக்கிறது? இவ்வுலகத்தின் எட்டுத்திக்குகளிலுமுள்ள எட்டுத் தலைவர்களும் இவனுக்கு (இராவணனுக்கு) குற்றேவல் புரியக் காத்துக் கிடக்கின்றனர் என்பதை நேரடியாகவே கண்டிருக்கும் நீரும் இவனின் பெருமையை அறியவில்லையோ?" என்றான்.

## கிரீடங்களைப் பறிகொடுத்த இராவணன்



☆☆☆

பிரகத்தன் மேலும் பலவாறாக இராவணனின் பெருமைகளைக் கூறலானான். "வானரங்கள் மலைகளிலிருந்து கற்களைக் கொண்டு அணை கட்டியதைப் பெருமையாகப் பேசுகிறீர்! அப்பேற்பட்ட பகைவர்களுக்கு நீர் பயப்படுகிறீர்! எமது தலைவனான இராவணன், சிவபிரான் வீற்றிருக்கும் திருக்கைலாய மலையினையே- அதன்

ஆணிவேரோடு பெயர்த்தெடுத்த செயலை மறந்துவிட்டீரோ? எமது தலைவனின் வீரத்தை அறியாத மானிடர்கள் தங்களை அழித்துக்கொள்வதற்காகவே இங்கு வந்துள்ளனர். இது அவர்களுடைய விதி," என்றான்.

### ஒற்றரின் கூற்று

மந்திராலோசனை மண்டப வாயிலில் கட்டியிருந்த மணி அடித்தது. ஏதாவது முக்கிய காரணங்கள் இருந்தால் மட்டுமே அம்மணி அடிக்கப்படவேண்டும். இராவணன் இருக்கையை விட்டெழுந்து வாயில் வரை நடந்து போனான். சபையிலிருந்த அனைவரும் எழுந்து நின்றனர். கதவு திறந்தது. வாயிற்காவலன் இராவணனின் தாள் தொட்டு வணங்கி எழுந்து, ஒற்றர்கள் சுகன் மற்றும் சாரன் ஆகிய இருவரும் வந்திருப்பதாகக் கூறினான். அவர்கள் இருவரும் ஓடிச்சென்று இராவணனின் தாள் தொட்டு வணங்கினர். அவர்களைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்கப் புன்முறுவல் பூத்த வண்ணம் அருகேயிருந்த மற்றுமொரு மண்டபத்துக்கு அவர்களை இராவணன் அழைத்துச் சென்றான்.

**இராஜகுமாரன்**

ஒற்றர்கள் நல்ல செய்தியுடன் வந்திருப்பார்கள் என்று கருதியே இராவணன் ஓரளவு திருப்தி கொண்டவனாகக் காணப்பட்டான்.

ஒற்றர்கள் இருவரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர். தாங்கள் கூறப்போகும் செய்தி நிச்சயமாக இராவணனைத் திருப்திப்படுத்தப் போவதில்லை. இதனால் இராவணன் எத்தகைய தண்டனை தரப்போகிறானோ என்று பதறியபடி நின்றனர்.

### வேடத்தைக் களைந்தனர்

இராவணன் தனது ஆசனத்தில் அமர்ந்து ஒற்றர்கள் இருவரையும் அருகில் வருமாறு சைகை செய்தான். இருவரும் மீண்டும் இராவணனின் பாதங்களைத் தொட்டு வணங்கி எழுந்ததும் சுகன் தனது அடித்தொண்டையில்– நீர்வற்றிய நிலையில்– "ஐயனே! நாங்கள் கண்டும் கேட்டும் அறிந்தும் வந்த உண்மைகளைக் கூறுகிறோம். நாங்கள் வானில் தாவிக் கடந்து சென்ற கடலைவிடப் பன்மடங்கு பெரிதாக வானர சேனைகள் குவிந்துள்ளன. அவர்கள் கட்டுப்பாட்டுடன் பல தரப்பட்ட போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததைக் கண்டோம். வானரர்களுடன் கலந்து கொள்ளும் நோக்குடன் நாங்களும் வானர உருவெடுத்தே சென்றோம். ஆனால் தங்கள் தம்பி விபீடணர் எங்களை எளிதில் அடையாளம் கண்டு கொண்டார். இராமரிடம் எங்களை அழைத்துச் சென்று எங்கள் வேடத்தைக் களைந்துவிட்டார். ஆனால் அந்த இராமர் எங்கள் மீது கோபம் கொள்ளவில்லை. எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு, தங்களிடம் எதையும் ஒளிவு மறைவின்றிக் கூறிவிடுமாறு சொன்னார். எங்களை எவரும் துன்புறுத்தாமல் பத்திரமாக அனுப்பி வைக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்," என்று கூறிக்கொண்டிருக்கும் போதே பொறுமை இழந்த இராவணன், 'எதிரியின் பலத்தையும் அவர்களுடைய நடமாட்டத்தின் தன்மையையும் அறிந்து வந்து கூறுமாறு அனுப்பினால், அவர்களுடைய பெருமைகளையல்லவா வர்ணித்துக் கொண்டிருக்கிறாய்? ஏய் சாரனே! நீ என்ன கண்டாய்? சொல் உடனே!" என்று ஆணையிட்டான்.

சாரன் பயந்து நடுங்கியபடி, "அவர்கள் செய்திருக்கும் ஆயத்தங்களைப் பார்த்தால் எமது படைகள் தாக்குப் பிடிப்பதே கடினமாகும் என்று தான் எனக்குப்படுகிறது...!" என்றதும் தனது கண்களில் கோபக்கனல் தெறிக்க, ஆசனத்திலிருந்து எழுந்த இராவணன்," கபோதிகளான உங்களை அனுப்பி வைத்தேனே! ஓடுங்கள் என் கண்முன் நிற்காதீர்கள். உங்கள் கண்களைப் பிடுங்கிப் பந்தாடுவதற்கு முன் இங்கிருந்து ஓடிவிடுங்கள்!" என்று பயங்கரமாகக் கத்தினான். தொடர்ந்து, "இனி இந்த மடையர்களை வேவு பார்க்க அனுப்புவதில் அர்த்தமேயில்லை. நானே சென்று அவர்களுடைய பாசறையை நோட்டமிட வேண்டும்!" என்று கூறிக்கொண்டு மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான். ஆலோசனைக்காக வந்திருந்தவர்கள் அனைவரையும் கலைந்து செல்லுமாறு ஆணையிட்டான். சற்று நேரம் தனிமையிலிருந்து சிந்திக்கலானான்.

நேரம் மாலையாகிக் கொண்டிருந்தது. இராவணன் எழுந்து நகரைச் சூழவுள்ள கோட்டைகளின் மீது தனிமையில் நடக்கலானான். வடமேற்குத்திசையில் அமையப்பெற்ற மலை போன்ற கோட்டையின் மேற்தளத்தை அடைந்தான். அங்கிருந்து பார்க்கும்போது, இராமபிரானும் வானரப்படைகளும் பாடி வீடுகள் அமைத்துத் தங்கியிருந்த பகுதி நன்றாகத் தெரிந்தது. அங்கு நின்றவாறே நோட்டமிட்டான். சமுத்திரம் போல் வானரப் படை அணிகள் பலதரப்பட்ட பணிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை அவதானித்தான்.

இராவணன் கோட்டையின் மீது தனித்து நின்றிருப்பதை வானரப் படைவீரர்கள் சிலர் கண்டுகொண்டனர். இராமபிரானிடமும் சுக்கிரீவனிடமும் ஓடிச்சென்று தகவல் தெரிவித்தனர். சுக்கிரீவன், இராவணனைத் தொலைவில் கண்டதும் கோபத்தில் குதித்தான். இராமபிரானிடம் கூட ஒரு வார்த்தை கூறாமல் வானில் தாவிப் பறந்தான். அதே வேகத்தில் இராவணனை அணுகிய சுக்கிரீவன் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் தலைகளின் மீதிருந்த கிரீடங்களைப் பிடித்திழுத்து தரைமீது தூக்கி எறிந்தான். மிக வேகமாகவும் எதிர்பாராத நிலையிலும் நடைபெற்ற இச்சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த இராவணன் சுதாகரிப்பதற்குள், சுக்கிரீவன் அதே வேகத்தில் பறந்து சென்றுவிட்டான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 84

சரியானவிடை:- பாடிவீடு

1. பேரின்பராஜா சகாயமேரி, கல்குடா வீதி, வாழைச்சேனை.
2. லிதாரா கலீல், 340 ஏ,ம.ம.வி.வீதி, ஓட்டமாவடி.
3. லி.லிங்கேஸ்வரி, பூந்தோட்டம், வவுனியா.
4. ஸ்ரீ.சுஜித்தா, 73,விகாரை வீதி, திருகோணமலை.
5. சீ.தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

**போட்டி இல. 86** கேள்வி:- இராவணனின் தாய்வழிப் பாட்டன் பெயர் என்ன?

ஜூன். 14 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.86, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பொங்கும் சமரசம்

**அமைச்சர்:** தந்தன தையனா தந்தன
தந்தனா தான தந்தனா தையனா
**தமிழ்க் கட்சிகள்:** பொதியும் இருக்குது
தீர்வும் இருக்குது
திறந்து பார்க்க பொமிசன் இல்லடி
ராஜாத்தி.
**அமைச்சர்:** லல்ல லல்லல லாலலா
**த.க:** சலுகை இருக்குது பகிர்வு இருக்குது
அளந்து பார்க்க துணிச்சல் இல்லடி
ராஜாத்தி
எப்படி?
**அமைச்சர்:** ஹூம்
**த.க:** சலுகைகள் நீர் தந்தால்
சமரசம் நாமாவோம்
**அமைச்சர்:** னானா னானா னானானா
**த.க:** ஹூ.. ஹூம்
சலுகை சொர்க்கம்
**அமைச்சர்:** தனனான தனானானா
**த.க:** தங்கத்தட்டில் எமக்கு மட்டும்
**அமைச்சர்:** தன்னை தானே தானா
**த.க:** அப்படியா..ம்
தேவை உங்கள் சேவை
**அமைச்சர்:** தந்தன தன்னா
**த.க:** நினைக்கவைத்து
**அமை:** லால லாலலாலா
**த.க:** கெஞ்சிக் கெஞ்சி பேசவைத்து
**அமை:** னானன னன்னனா தானனா
-லலலா
**த.க:** மயக்கம் தந்தது யார்
பொதியோ.. பொரியோ.. பொய்யோ.
**அமை:** இப்ப பார்க்கலாம்
தான னன்ன தானனன்னா
**த.க:** விலையும் வலையும் என்ன
**அமை:** தனை னனனா
**த.க:** கண்ணேயான சலுகை தந்தால்
பிறகு பொலிசி என்ன?
**அமை:** சபாஷ்!
சமரச உலகம் கொஞ்சும்-உம்மைக்
கண்டால்
சலுகை மழையாய் கொட்டும்.
பொதி இருக்குது பொரியும் இருக்குது
திறந்து பார்க்க நேரம் வந்தது இப்போது
பதவி இருக்குது பவிசும் இருக்குது
எல்லாம் மறந்து கலந்திருப்பது எப்போது

நீங்கள் கேட்ட பாடல் இடம்பெற்ற திரைப்படம் 'பொதியின் நிறம் கறுப்பு இசையமைத்தவர்கள் ஒப்பாரி ராஜா' ஒப்பாரி ராணி இரட்டையர்கள்.

**காதிலை பூ கந்தசாமி**

# துரையப்பாவுக்கு சிலை

யாழ் நகரில் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் சிலை திறந்துவைக்கப்பட்டது. பொதுமக்கள் சிறு அளவில் கலந்துகொண்ட சிலை திறப்பு விழாவில் தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பளித்தனர்.

அமரர் துரையப்பாவின் சிலையைத் திறந்துவைக்க வருகை தந்த அமைச்சரை வரவேற்பதில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் சிறு சிறு மோதல் மற்றும் உரசல்கள் ஏற்பட்டன.

இதுபற்றிக் கருத்துக் கேட்டபோது, "துரையப்பாவின் சிலையை திறக்கும் யோசனையை முதன் முதலாக தெரிவித்தது எமது கட்சிதான். அதனால் தான் சிலையே திறக்க முடிந்திருக்கிறது. ஆனால் வேறு சில கட்சிகள் இப்போது தாம்தான் முன்னின்றது போலச் சொல்லுகின்றன. இது கடைஞ்செடுத்த சந்தர்ப்பவாதமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளை மக்கள் நல்ல வடிவாக இனம் காணவேண்டும்" என்று ஒரு தமிழ்க் கட்சிப் பிரமுகர் உணர்ச்சிவசப்பட்ட கோலத்தோடு கூறினார்.

"முதலில் சொன்னது அவர்களாக இருக்கலாம். ஆனால் அமரர் துரையப்பா சிலைக்கு அடிக்கல் நாட்டுவதற்காக நாலு தொழிலதிபர்களை அன்பாக மிரட்டி நிதி திரட்டிய கட்சி நாம்தான். நாம் ஏதோ சொந்த செலவுக்காக தொழிலதிபர்களை கடத்தியது போல கண்டித்தவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். இவ்வாறு அடிக்கடி கொள்கை மாறும் கட்சிகளை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் ஓரம் கட்டுவர்" என்று தெரிவித்தார் மற்றொரு கட்சிப் பிரமுகர்.



தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக எமது நிருபர் அமைச்சரிடம் வினவினார். "எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்போது தான் ஜனநாயகப் பாதையில் புகுந்து விளையாடத் தொடங்கியிருக்கிறார்கள்" என்று கூறினார்.

முன்னாள் தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர், முன்னாள் நல்லூர் எம்.பி. சி.அருளம்பலம், முன்னாள் யாழ எம்.பி. சி.எக்ஸ்.மாட்டின், முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி. தியாகராசா ஆகியோருக்கு கோலாகலமான சிலைகள் நிறுவுமாறு தமிழர் சீட்டணியின் பொதுக்குழு கோரியுள்ளது.

"தமிழர் சீட்டணியினருக்கு தியாகங்களை மதிக்கத் தெரியவில்லை. முன்னாள் நல்லூர் எம்.பி. அருளம்பலத்தின் வலது கரமாக இருந்து சுடடுத்தள்ளப்பட்ட அண்ணர் தாடித் தங்கராஜா போன்ற தியாகிகளை மறந்துவிட்டார்கள். எனவே அவர்களது குடும்பத்தினரும் உறவினரும், நண்பர்களும், நண்பர்கள் குடும்பத்தினரும், அந்த குடும்பங்களின் நண்பர்களுமான ஆயிரக்கணக்கானோர் தமது வாக்குகளை சீட்டணிக்கு எதிராக பாவிக்குமாறு தமிழ்க்கட்சி வட்டாரங்கள் உணர்ச்சிவசப்பட்டுள்ளன.

## "பட்டியல் முன்வைக்கப்படும்"

தமிழ்க் கட்சிகள் எம்மீது சேறு பூசினால் விரைவில் நூறு கொலைகளின் விபரமும், அவற்றில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் பெயர்களும் பட்டியலாக வெளியிடப்படும் என்று தமிழர் சீட்டணி அவசரமாக கூடி ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## "விசாரணைக் கமிஷன் வேண்டும்"

"வடக்கு-கிழக்கில் நடைபெற்ற அரசியல் தலைவர்கள் கொலை பற்றி ஆழ்ந்து ஆராய விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும்" இவ்வாறு தமிழர் சீட்டணி பிரமுகர் கலாநிதி சீலன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதனையடுத்து தமது கட்சிகளின் சட்டத்தரணிகளை இணைத்துக் கொண்டு செயற்படவும், அதன் மூலம் சட்டப்பூச்சாண்டிகளை எதிர்கொள்ளவும் தமிழ்க் கட்சிகள் பல முடிவு செய்துள்ளன. பதிலடி முயற்சியும் நடக்கிறது. இதனையடுத்து வெளியான இரு விளம்பரங்களைக் கீழே காணலாம்.

### தேவை–தேவை–தேவை

தேவைக்கேற்ற அரசியல் மற்றும் சட்ட ஆலோசனைகளை சரமாரியாகத் தொடுக்கக்கூடிய புலமையாளர்கள் தேவை.

போராட்ட மற்றும் அரசியல் முன் அனுபவம் நிச்சயமாகத் தேவைப்படாது.

கூலி புலமைக்கு ஏற்ப வழங்கப்படும். மேலதிக வசதிகளும், தகுந்த பதவிகளும் உத்தரவாதம். யாருடைய சிபாரிசும் தேவையில்லை. கடந்தகாலம் பற்றிய கேள்விகளும் கேட்கப்படமாட்டாது. எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்.

### தொண்டர்கள் தேவை

சமீபத்தில் ஜனநாயகப் பாதையில் குதித்துள்ள அரசியல் கட்சிக்கு நல்ல உடல்வாகுள்ள தொண்டர்கள் உடன் தேவை.

இருட்டடி, கல்வீச்சு, முதுகில் குத்து, சோடாப்புட்டி வீச்சு போன்றவற்றில் கொஞ்சம் முன் அனுபவம் இருந்தால் நன்று.

முன்னர் எங்கள் கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். தற்போது எக் கட்சியில் இருந்தாலும் பரவாயில்லை.

தகுதி: கண்டபடி கேள்விகள் கேட்கத் தெரியாதவராக இருக்கவேண்டும். ஞாபக சக்தி குறைவாக இருக்க வேண்டும்.

குண விசேஷம்: எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஓடுவோர் எல்லாம் ஓடிவரலாம்
கெட்டோர் எல்லாம் நாடி வரலாம்.
எங்களின் பாதை ஜனநாயகப் பாதை.




படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# முறைப்பு




முறைத்து முறைத்துப் பார்க்கும் இந்த ஆந்தையார் 'குடா ஆந்தை' ரகத்தைச் சேர்ந்தது. குளோசப்பில், எத்தனை பயங்கரமாக இருக்கிறது பார்த்தீர்களா?! குடா ஆந்தைகளின் வாழ்க்கை முறையினை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது. பகல் முழுவதும் காட்டு மரப் பொந்துகளில் பதுங்கி இருந்துவிட்டு இரவானதும் இரை தேடப் புறப்பட்டுவிடும். தென்கிழக்காசிய நாடுகளில்தான் இவ்வகை ஆந்தைகள் வசிக்கின்றன. இலங்கையிலும் குடா ஆந்தைகளே காணப்படுகின்றன.

குடா ஆந்தைகளின் முகம் இருதயம்போல் அமைந்துள்ளன. பெரிய வட்டமான கண்களை உடைய இவ்வாந்தைகள் பார்ப்பதற்குப் பயங்கரமான தோற்றத்தை உடையன. கண்களைச் சுற்றியும் இறகுகள் முளைத்திருக்கும், பெரும்பாலும் மரங்களில் வாழும் பூச்சிகளையே இவை பிடித்து உண்ணும். இவற்றுக்குப் போதுமான அளவு உணவு கிடைத்தால், வருடத்தில் ஒரு தடவைக்கு 8 முட்டைகள் வீதம் இரு தடவை முட்டை இடும். உணவு போதுமான அளவு கிடைக்காவிட்டால் சில சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்தில் முட்டைகளே இடாது. உணவுக்குத் தட்டுபாடு ஏற்பட்டால் ஆண்-பெண் இரு பாலாரும் முட்டையையே உண்டுவிடும்.

"செண்டிமெண்ட்' விஷயத்திலும் ஆந்தைகள் சளைக்காதவை. பெண் ஆந்தை முட்டை இட்டு அடைகாக்கும், இக்காலத்தில் ஆண் ஆந்தையே பெண்ணுக்கும் இரை தேடி வந்து ஊட்டி விடும். ஆந்தைகள் பெரும்பாலும் இணை பிரியாமல் ஒட்டுறவுடன் வாழ்பவை. வாழ்க ஆந்தைக் காதல்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# உயிர்ப்பு

காணக்கிடைக்காத காட்சிதான் இது. கூர்ந்து பாருங்கள். என்ன நடக்கிறது புரிகிறதா? மீன்முட்டையில் இருந்து குஞ்சு வரும்போது சுடச்சுட எடுக்கப்பட்ட காட்சி.

நன்னீர்க் குளத்தில் வாழும் உழுவை மீனின் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவரும் அபூர்வ காட்சிதான் இது.


தாய்மீன் தனது வாலைக் கொண்டே குளத்தின் அடித்தரையில் தன் முட்டைகளை இடுவதற்காக குழிகளைப் பறிக்கும். முட்டையிட்டதும் நீரோட்டத்தின் எதிர்ப்பக்கம் சற்றுத் தள்ளிச் சென்று மேலும் சில குழிகளைப் பறிக்கும். இதிலிருந்து கிளம்பும் கிறவல் கற்கள் நீரோடத்துக்கு ஏற்ப அசைந்து சென்று- ஏற்கனவே முட்டைகளைக் கொண்ட குழிகளைத் தானாகவே மூடிக்கொண்டு முட்டைகளைப் பாதுகாக்கும்.

முட்டைக்குள்ளிருந்து வெளியேறும் குஞ்சுகள், தங்கள் முட்டையின் எஞ்சிய பாகங்கள் தானாக விட்டுப் பிரியும்வரை கற்கள் நிறைந்த இடங்களிலேயே தரித்துநிற்கும்.

இந்த மீன் இனங்கள் எப்போதும் தூய்மையான- மாசுபடுத்தப் படாத இடங்களையே தங்கள் வசிப்பிடமாக்கி வாழ்கின்றன. அசுத்தம் எதுவும் அணுகாத வண்ணம் தன்னைத் தானே பார்த்துக்கொள்ளும். (கண்ட இடமெங்கும் குப்பை கொட்டும் நம்மவர்கள் தப்பை உணர்வார்களாக) படத்தில் உள்ள அபூர்வக் காட்சியை படமாக்கிட எத்தனை நாள் பொறுமையாக முயன்றிருப்பார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். வியப்பாக இருக்கிறதல்லவா?



# ஜென்டில்மன்



மேற்கு நாடுகளில் இப்பொழுதெல்லாம் புற்றீசல்போல் நவீன கடைகள் முளைக்கின்றன. பலவகையான அலங்காரப் பொருட்கள்தான் இங்கெல்லாம் விற்பனையாகின்றன. ஷம்பூ, பவுடர், கிறீம், சோப், ஓடிக்கொலன், சீப்பு, பிரஷ் ஆகியவற்றுடன் கூட வண்ண வண்ண உடைகள், பாதணிகள், தொப்பிகள் ஆகியனவும் இக்கடைகளில் வகை வகையாகக் காணப்படுகின்றன. மணமகன், மணமகள் ஆகியோருக்கும் இங்கெல்லாம் உடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் இளம் ஆண்-பெண் (மனிதர்களுக்கு) ஆகியோருக்கல்ல, பின்னே யாருக்காம்? அத்தனையும் செல்வந்தர் வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கானவை; முக்கியமாக நாய்களுக்கானவை. இதோ இந்த நாயார் அணிந்துள்ள தொப்பி, கண்ணாடி, கழுத்துப்பட்டி எல்லாம் இத்தகைய கடைகளில்தான் கொள்முதல் செய்யப்பட்டவை. அதுதான் கச்சிதமாகப் பொருந்தி சூப்பர் ஸ்டைலாக இருக்கிறது. கொடுத்து வைத்த நாய்!

# துடிப்பு




கூர்மையான பார்வை-கரங்களில் பலம் மனதில் உறுதி- பேயடி-காட்டடி அதுதான் சனத்.

மாயமில்லை, மந்திரமில்லை, ஆனால் தந்திரம் உண்டு. அதுதான் சனத் ஜெயசூரியாவின் அதிரடி விளாசல் துடுப்பாட்டம். பந்துகளை கூர்ந்து கவனித்து எதிர்கொண்டு செம சாத்து! கண்களில் கூர்மை, கரங்களில் வலிமை, மனதில் உறுதி, மிக முக்கியமாக தனக்காக ஆடாமல் அணிக்காக விளையாடும் ஆவேசம், அதுதான் சனத்.

அநேகமாக பிரபல ஆட்டக்காரர்களில் ஒரு குணம் இருக்கிறது. அரைச் சதத்தை தொடப் போகும் நேரத்தில் உஷாராகிவிடுவர். 45ஐ தாண்டியதும் அரைச் சதத்தை பூர்த்தி செய்ய நிதானம் காப்பர். தப்பாக சதம் நெருங்கும்போது டெண்டுல்கர் மிக நிதானம் காட்டத் தொடங்கிவிடுவதை பல போட்டிகளில் அவதானிக்க முடிந்தது. 95 வந்து விட்டால்போதும் சச்சின் சதம் தொடும் வரை அடக்கித்தான் வாசிப்பார். சதம் கைக்கெட்டிய பின்னர்தான் மறுபடி காட்டடி.

ஆனால் சனத் மற்றும் அரவிந்தா இருவரும் சதம் பற்றி அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. இந்தியாவில் சுதந்திரக் கிண்ணப் போட்டியில் முதல் இறுதி ஆட்டத்தில் 96ஐ எட்டிய சனத் சற்று நிதானம் காட்டி யிருந்தால் சதம் தொட்டு விடும் தூரத்தில் இருந்தது. ஆனால் தனது வழக்கமான பாணியில் பந்தை பதம்பார்க்க நினைக்க, பந்து ஒத்துழைக்க மறுத்து 'கேட்ச்' ஆனது.

பாகிஸ்தானுடன் சுதந்திரக் கிண்ண இறுதிப் போட்டியிலும் சனத்தின் விளாசல் தான் அணி ராஜநடைபோட பாதை போட்டுக் கொடுத்தது. அரைச் சதம் போட்டார் சனத்.

உலகக் கிண்ணப் போட்டிக்கு பின்னர் இடைநடுவே சனத் ஜெயசூரியாவின் ஆட்டத்தில் சிறு சரிவு ஏற்பட்டது. அந்தச் சரிவு அணியையும் பாதித்தது. இப்போது மீண்டும் பிரகாசிக்கிறார் சனத்.

ஆனாலும் ஒரு விஷயம் உறுத்துகிறது. இலங்கை அணிக் கப்டன் ரணதுங்கா சனத் பற்றி குறிப்பிடுவதை தவிர்ப்பது போலத் தோன்றுகிறது. அரவிந்தா பற்றித்தான் ரணதுங்கா மறக்காமல் கூறுகிறார். அரவிந்தாவும் முக்கிய பாத்திரம்தான். அதற்காக சனத்தைப் பற்றி சொல்லக்கூடாதா என்ன?!

இந்திய சுதந்திரக் கிண்ணப் போட்டிகளின் முடிவில் பரிசுகள் வழங்கப்பட்ட தருணங்களில் ரணதுங்கா கருத்துக் கூறியபோது சனத் ஜெயசூரியா பற்றி மனம் திறந்து ஒருமுறைகூட பாராட்டவில்லை என்பது தொலைக் காட்சியில் பார்த்தவர்களுக்கு தெரியும். காரணம் புரியவில்லை.

இதுவரை சனத் 130 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஆடியிருக்கிறார். மூவாயிரம் ஓட்டங்களை வெற்றிகரமாக தாண்டியிருக்கிறார்.

கிரிக்கெட் உலக பைபிள் என்றழைக்கப்படும் இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'விஸ்டன் கிரிக்கெட்டர்ஸ் அல்மனக்' என்ற வருடாந்த வெளியீட்டில் இந்த ஆண்டின் சிறந்த வீரராக ஜெயசூரியாவை பாராட்டியிருக்கிறது. இது மகத்தான கௌரவம். தன் கடின உழைப்பால் முன்னேறிய பந்தா இல்லாத வீரர் சனத் இந்தக் கௌரவத்துக்கு நிச்சயம் தகுதியானவர்தான்.

கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்ததுடன், இலங்கை வீரர்கள் படைத்த சாதனைகளையும் மேவிக் கொண்டிருக்கிறார்.

பந்துவீச்சில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் நூறு விக்கெட்டுக்களைச் சாய்த்த முதலாவது இலங்கை வீரரும் சனத்தான்.

எதிர்காலத்தில் இலங்கை அணியின் கப்டன் கிரீடம் இந்த சகலதுறை ஆட்டக்கார சாதனையாளரின் சிரத்தை அலங்கரிக்கக் காத்திருக்கிறது.

## 1வது பிறந்த தினம்

### தினுஷ் ஹரி தர்ஷன்
### 31-05-1997



(திரு P.K. SAMY அவர்களின் பேரன்) நுவரெலியா கங்காதரன் மதிவதனி தம்பதியினரின் செல்வ சிரேஷ்ட புதல்வன் **தினுஷ் ஹரி தர்ஷன்** தனது முதலாவது பிறந்த தினத்தை நுவரெலியா **Grand Hotel**ல் வெகு விமர்சையாக 31/05/97 அன்று கொண்டாடுகிறார்.



இவரை அன்புத்தாத்தா பி.கே.சாமி, அன்பு பாட்டி யசோதா, சித்தப்பா பிரபாஹரன், அத்தை சாவித்திரி, கொங்கோடியா அம்மப்பா, திருச்செல்வம், அம்மம்மா விமலா, மாமாமார்கள், மெரிகோல்ட் ஜெகநாதன் தாத்தா குடும்பத்தினர், கந்தப்பளை பெரமையா தாத்தா குடும்பத்தினர், கொங்கோடியா ரெங்கநாதன் தாத்தா, பாட்டி, அத்தை பகங்கிளி, சுபத்திரா, யமுனா, பிளக்பூல் பூட்டா, பூட்டி மற்றும் உறவினர்கள் அனைவரும் அன்னை ஸ்ரீ துர்கா தேவியின் அருள் பெற்று வையகம் போற்ற நீடூழி வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

அன்பு பேரனுக்கு அனேக ஆசீர்வாதங்கள். தாத்தா-P.K. Samy. J.D.G.A.N.& J.P. P.K.Samy Associate (PVT) Ltd.& Group நிறுவனங்களின் சேவையாளர்கள் அனைவரும் தினுஷ் ஹரி தர்ஷனை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**குறிப்பு: 31/05/97 அன்று மாலை Grand Hotelல் மரிக்கார் உபாலி வழங்கும் நகைச்சுவை நிகழ்ச்சி நடைபெறும்.**



இப்பத்திரிகை கொழும்பு ... 25, வெல்லவா, ... உள்ள ... அச்சகத்தில் ஜூன் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
படிப்பகம்